REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 ஒகஸ்ட் 18 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 88 இல. 195 | August 18,Tuesday, 2020 | 16பக்கங்கள் | 30/-




# நாடு முழுவதும் மின் விநியோகம் பல மணி நேரம் துண்டிப்பு

## நீர் விநியோகம் பாதிப்பு; போக்குவரத்து நெரிசல்; மக்கள் அவதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு



காரணமாக நாடு முழுவதிலும் நேற்று நண்பகல் முதல் மின்சார துண்டிப்பு ஏற்பட்டதுடன் சுமார் ஆறு மணித்தியாலங்களுக்கு மேல் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்ள நேர்ந்தது.

கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தில் கிரீட் உப மின் உற்பத்தி தொகுதியில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே இந்த நிலை

06▶

## சதி முயற்சி அல்ல; எனினும் ஆராய விசேட குழு நியமனம்

### மின்வலு அமைச்சர் டளஸ் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நேற்று ஏற்பட்ட மின் துண்டிப்பானது திட்டமிட்ட சதி முயற்சி அல்ல. எனினும் மின் துண்டிப்புக்கான காரணத்தை கண்டறிய விசேட குழு

06▶



வரலாற்று பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. இதன்போது பக்தர்கள் படைசூழ முருகப்பெருமான் தேரில் வலம் வர எழுந்தருளியிருப்பதை படத்தில் காணலாம். படப்பிடிப்பு: ஐ.சிவசாந்தன்



பிரதமர் மஹிந்த ராஜபக்ச 5வது தடவையாகவும் நிதியமைச்சராக நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். கொழும்பு கோட்டையிலுள்ள நிதி அமைச்சில் நடைபெற்ற விசேட நிகழ்வில் சர்வமதத் தலைவர்களின் ஆசியுடன் அவர் நிதியமைச்சராகவும் புத்தசாசன, சமய, கலாசார விவகார, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகவும் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டபோது...

# எமது ஆட்சியில் சிறுபான்மை பெரும்பான்மை வேறுபாடில்லை

## தகுதியுடையோருக்கே அமைச்சு பதவி; இனரீதியாக அல்ல



எமது ஆட்சியில் சிறுபான்மை இனம், பெரும்பான்மை இனம் என்ற வேறுபாடுகள் இல்லை. அனைத்து இன மக்களும் இலங்கை மாதாவின் பிள்ளைகள். இன ரீதியில் எவருக்கும் நாம் அமைச்சுக்களை வழங்கவில்லை. தகுதி நிலையில் உள்ளவர்களுக்கே அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். அமைச்சுக்களின் எண்ணிக்கை வரையறைக்கேற்ப மேலும் தகுதியானவர்களை இணைத்துக் கொள்வோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

புதிய அமைச்சரவையில் சிறுபான்மையினருக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

“புதிய அமைச்சரவையில் தமிழர் ஒருவரும், முஸ்லிம் ஒருவரும் என இரண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும், இராஜாங்க அமைச்சுகளிலும் தமிழர்கள் இருவர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம்களில் எவருமே நியமிக்கப்படவில்லை எனவும் எதிரணியினர் இனவாதத்தைத் தூண்டும் வகையில் தமிழ், ஆங்கில, சிங்கள ஊடகங்களில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

சிறுபான்மை இனத்தவர்களில் நால்வருக்கு மட்டுமே

06▶




# இலங்கைக்கு எந்தவொரு நாடும் எதிரியாக இல்லை

## வெளிவிவகார அமைச்சர் தினேஷ்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேசத்தின் எந்தவொரு நாடும் இலங்கைக்கு எதிரியில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, எனினும் நாட்டின் இறையாண்மைக்கும் அரசியலமைப்பிற்கும் யுத்த வெற்றி வீரர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான எந்தவொரு கடப்பாட்டினதும் பங்காளியாக இலங்கை இருக்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புநாடு என்ற கடப்பாட்டைக் கொண்டிருக்கும் இலங்கை,

06▶

# பாராளுமன்ற ஆரம்பவிழா நிகழ்வை எளிமையாக நடத்த ஜனாதிபதி பணிப்பு

## ஆடம்பர செலவுகளை குறைத்து பாரம்பரியத்துக்கு முன்னுரிமை



9 ஆவது பாராளுமன்ற அமர்வை ஆரம்பித்து வைக்கும் நடவடிக்கைகள் பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கி ஒரு எளிய முறையில் விழாவை ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அறிவுறுத்தியுள்ளார்.

புதிய பாராளுமன்ற அமர்வின் போது ஜனாதிபதி வருகையை ஆடம்பர செலவுகள் இன்றி முன்னெடுக்குமாறும்

06▶

# 19 க்கு முழுமையாக முடிவு கட்ட வேண்டும்

## சுரேன் ராகவன் எம்.பி



அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேன் ராகவன் தெரிவித்தார். தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“இந்த 19ஆவது திருத்தமானது

06▶

# சகோதரத்துவம் மூலமாக சகல சமூகங்களும் ஒன்றுபட வேண்டும்

## நீதியமைச்சர் அலி சப்ரி அறைகூவல்



பயங்கரவாதம் மற்றும் இனவெறியை பரப்புவதற்கு பதிலாக அனைத்து சமூகங்களும் சகோதரத்துவத்தின் மூலம் ஒன்றுபட வேண்டும் என நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்களும் எந்தவிதமான பாகுபாடும் இன்றி வாழ ஒரு சூழலை உருவாக்க வேண்டும்.

எல்லோரும் இனவெறி அரசியல் சித்தாந்தங்களுக்கு அப்பால் சென்று அதற்கு பதிலாக ஒரு தேசியவாத அரசியல் சித்தாந்தத்தில் செயற்பட வேண்டும். ஆனால் ஒருசிலர், அரசாங்கத்தைப் பற்றி பல்வேறு தவறான கருத்துக்களை பரப்புவதன் ஊடாக மக்களை தவறாக வழிநடத்த

06▶



# அமைச்சர் டக்ளஸின் வாதத்தினால் திணறிய த.தே.ம.மு தலைவர் கஜன்

## ஒற்றையாட்சியை ஏற்றே சத்தியப்பிரமாணம் என பதிலளிப்பு



இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பை ஏற்றுக் கொள்வதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற அரசியல் விவாத நிகழ்ச்சியில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன்

06▶

### ஈஸ்டர் தாக்குல் சம்பவம்;

# ஆணைக்குழுவில் ஆஜராக மைத்திரிக்கு அழைப்பு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எதிர்வரும் 26 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின்

06▶

# கிழக்கு மக்களுக்காக உயிரையும் அர்ப்பணித்து சேவை செய்ய தயார்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

**பி.ரீ.ஏ.லத்தீப்**

மட்டக்களப்புக்கு மாத்திரமின்றி அம்பாறை, திருமலை மக்களுக்காக தனது உயிரை அர்ப்பணித்து 24 மணித்தியாலங்களும் சேவை செய்யத் தயாராகவுள்ளதாக இராஜங்க அமைச்சர் சதாசிவம்



வியாழேந்திரன் தெரிவித்தார். மட்டக்களப்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

”கிழக்கில் மொட்டுச் சின்னத்தின்

06▶


### கடமையை பொறுப்பேற்பதற்கு முன்னர்

# தமிழ் பிழையை திருத்திய அமைச்சர் நாமல் ராஜபக்ஷ



விளையாட்டுத்துறை அமைச்சின் பெயர் பலகையிலுள்ள தமிழ் பிழையை திருத்தி விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் மொழி உரிமைக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளார்.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார




அமைச்சராக நாமல் ராஜபக்ச இன்று கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

உத்தியோகப்பூர்வமாக கடமைகளை பொறுப்பேற்பதற்கு முன்னதாக அமைச்சின் பெயர் பலகையிலுள்ள

06▶

### 2016இல் 15 இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட

# மலசல கூடங்களை பயன்படுத்த முடியாத நிலையில் மாணவர்கள்



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் சுமார் 15 இலட்சம் ரூபா செலவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மலசலக் கூடங்கள் 2016 இல் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ள போதும் அதனை இன்று வரை மாணவர்கள்

06▶

# UNPயில் போட்டியிட்ட பலரும் கட்சியிலிருந்து விலக தீர்மானம்

## ரணில் தலைமை பதவியில் நீடிப்பதால் இந்த முடிவாம்

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 22 மாவட்டங்களில் போட்டியிட்ட 262 வேட்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள், கட்சியில் இருந்து




விலகத் தயாராகி வருவதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் தொடர்ந்தும் நீடிப்பார் என்ற தீர்மானத்தை அடிப்படையாக கொண்டே அவர்கள்

06▶





பிரதமர் மஹிந்த ராஜபக்ச நிதி, புத்தசாசனம் – மத விவகாரம் மற்றும் கலாசார அலுவல்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் நேற்று கடமைகளை பொறுப் பேற்கும் போது பிடிக்கப்பட்ட படம்.











பிரதமரின் அமைச்சு பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் நிகழ்வு கங்காராம விஹாரையில் நடைபெற்றது. நிகழ்வில் சிவஸ்ரீ பாபுசர்மா இராமச்சந்திர குருக்கள், கலாநிதி ஹசன் மௌலானாவும் மற்றும் குருமார்கள் பிரதமருக்கு ஆசி வழங்கிய போது....






பொதுஜன பெரமுன முஸ்லிம் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கலந்துகொண்ட தெஹிவளை ரோஸ்வுட் சிலோன் மண்டபத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் நீதி அமைச்சர் அலி சப்ரி, காதர் மஸ்தான் எம்.பி. மற்றும் பிரமுகர்களைப் படத்தில் காணலாம்.



நீர்ப்பாசனத்துறை அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட சமல் ராஜபக்ச நேற்று அமைச்சில் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட போது....





பத்திக் கைத்தரி துறைகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சரான தயாசிறி ஜயசேகர தனது அமைச்சில் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட போது,...



எரிசக்தி அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட உதய பிரபாத் கம்மன்பில நேற்று அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட போது.....



சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சரான சிசிர ஜயக்கொடி நேற்று அமைச்சில் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட போது....



கைத்தொழில் துறை அமைச்சரான விமல் வீரவன்ச நேற்று கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட போது,....

2020 ஒகஸ்ட் 18 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்

15ம் திகதி முதல் 19ம் திகதி வரை
**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.16 |
| அஸர் | 03.31 |
| மஃரிப் | 06.26 |
| இஷா | 07.38 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் ஆவணி 02

ராகுகாலம் : மாலை : 3.00 - 4.30 வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00 வரை
யோகம்: சித்த யோகம்
நட்சத்திரம்: ஆயிலியம் அதிகாலை 5.13
திதி: அமாவாசை

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk





புதிய நீதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நேற்று (17) நீதியமைச்சில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் சர்வமத தலைவர்கள், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உட்பட இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஐந்தாவது தடவையாக நிதியமைச்சராக பொறுப்பேற்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 5வது தடவையாகவும் நாட்டின் நிதியமைச்சராக நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அமைச்சில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் சர்வமதத் தலைவர்களின் ஆசியுடன் அவர் நிதியமைச்சராகவும் புத்த சாசன, சமய, கலாசார விவகார, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகவும் நேற்றுக் காலை சுப வேளையில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கொழும்பு கோட்டையிலுள்ள நிதியமைச்சின் வளாகத்திற்கு நேற்றுக் காலை 10 மணியளவில் வருகை தந்த பிரதமரை நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், சமுர்த்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் செஹான் சேமசிங்க ஆகியோர் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர்.

இந்த நிகழ்வில் நிதியமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிக்கல உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அதனையடுத்து அமைச்சின் முதலாவது மாடியில் அமைந்துள்ள 'ரன்தொர' கேட்போர் கூடத்தில் சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் நிதியமைச்சிற்கான கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அதனையடுத்து முதல் பணியாக மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஸ்மன் 5000 ரூபா நாணயத்தாளைக் கொண்டு உருவாக்கப்பட்ட நினைவுச்சின்னமொன்றை பிரதமருக்குக் கையளித்தார். 06

## அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு உட்பட்டதாக எதிர்காலத்தில் சட்ட திருத்தங்கள் முன்னெடுப்பு

### அரசியலமைப்பிற்கோ சட்டங்களுக்கோ பாதிப்பு ஏற்படாதவாறு பொறுப்பை நிறைவேற்றுவேன்

**ஷம்ஸ் பாஹிம்**

அரசியலமைப்பிற்கோ நாட்டின் சட்டங்களுக்கோ கடுகளவும் பாதிப்பு ஏற்படாத வகையில் நீதி அமைச்சர் பொறுப்பை நேர்மையாக மேற்கொள்வதாக புதிய நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு உட்பட்டதாக எதிர்காலத்தில் சட்ட திருத்தங்களை மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் கூறினார்.

புதிய நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இதனை தொடர்ந்து உரையாற்றிய அவர், என் மீது நம்பிக்கை வைத்து வழங்கப்பட்ட இந்த பொறுப்பை சரிவர நிறைவேற்றுவேன். சட்டத்தின் முன் சகலரும் சமம்.

தேசியப் பட்டியல் எம்.பி பதவியோ அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவியோ நான் கோரவில்லை. ஜனாதிபதியும் பிரதமரும் இந்த பொறுப்பை வழங்கியுள்ளனர். சில எதிர்ப்புகள் வந்த போது எம்.பியாக மாத்திரம் இருந்துவிடுவதாக கூறினேன்.

சட்டத்துறையில் பல மாற்றங்கள் செய்ய வேண்டும். மக்களுக்கு செயற்திறனான சேவை வழங்கப்பட வேண்டும். தீர்ப்புகள் தாமதமாவதற்கு சட்டத்தரணிகள் காரணமல்ல. இந்த முறைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். இது தொடர்பில் கடந்த காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை மீள ஆராய இருக்கிறேன். முன்னாள் அமைச்சர்கள், அதிகாரிகளின் கருத்துக்களையும் பெறுவேன்.

காலத்திற்கு பொருந்தாத சட்டங்களை மாற்ற வேண்டும்.

கைப்பற்றப்படும் போதைப் பொருட்கள் அழிக்கப்படுகையில் பெருமளவு குறைந்து விடுகிறது. இது தொடர்பிலும் சட்டம் தயாரிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

சட்டத்துறையில் உள்ளவன் என்ற வகையில் எனக்குள்ள அனுபவங்களை பயன்படுத்தி தேவையான மாற்றங்களை செய்யுமாறு 06

## அனைத்து மக்களுக்கும் ஒரே சட்டம் என்ற வகையிலே புதிய அரசியலமைப்பு உருவாகும்

### ஜனாதிபதிக்குள்ள தடைகள் யாவும் நீக்கப்படும்



நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் ஒரே சட்டம் என்ற அடிப்படையிலேயே புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுமென அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் நிறைவேற்று அதிகாரத்திற்கு உள்ள சகல தடைகளை நீக்கி மக்கள் வழங்கிய ஆணையை செயற்படுத்தக் கூடியவாறு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்குவதற்கே முதலில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

கைத்தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள விமல் வீரவங்ச நேற்று தமது அமைச்சில் கடமைகளை பொறுப்பேற்றார். இதன் போது கருத்துத் தெரிவித்த அவர், நல்லாட்சி அரசாங்கத்தில் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் மாற்றியமைக்கப்படும். மேலும் புதிய அரசியலமைப்புக்கு ஏற்றவாறு நாட்டை அபிவிருத்தியை நோக்கி கொண்டுச் செல்ல வேண்டும்.

இதற்கு பொதுதேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அனைவருக்கும் ஒரே சட்டம் என்ற அடிப்படையில் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

19 ஆவது திருத்தத்தை கொண்டுவந்தவர்கள் கூட இன்று அதனை எதிர்க்கின்றனர். நாட்டையும் நாட்டு மக்களையும் பலப்படுத்தும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## போதைப்பொருளுடன் கைதான இரசாயன பகுப்பாய்வு பணியாளர்

### 18 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது

அரசாங்க இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் ஆய்வக ஊழியர் ஒருவர் அத்துருகிரிய பகுதியில் வைத்து ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து 18 கிராம் 730 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் (16) மாலை 5.30 மணியளவில் சந்தேகத்திற்கிடமான மோட்டார் சைக்கிள் ஒன்றை பொலிஸார் சோதனையிட்டபோது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மாத்தறை பகுதியை சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளோர் நலன் கருதி விசேட தகவல் பிரிவு உருவாக்கம்

### இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அவர்களது தகவல்கள் அடங்கிய களஞ்சியமொன்றை உருவாக்க தீர்மானித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்தார்.

பல்வேறு நாடுகளிலும் பணிபுரியும் இலங்கையர்களின் குடும்பங்களுக்கு தேவையான நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கவும் எதிர்கொள்ள நேரும் பிரச்சினைகள் தொடர்பில் தலையீடுகளை மேற்கொள்ளவும் வசதியாக மேற்படி செயற்றிட்டம் அமையுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை வாய்ப்பு இராஜாங்க அமைச்சராக பொறுப்பேற்றுள்ள பிரியங்கர ஜயரத்ன நேற்று அமைச்சில் தமது பொறுப்புக்களை கையேற்றதன்பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் முக்கியமான அமைச்சு தமக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

பழைமையான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முறைமைக்கு பதிலாக சிறந்த தொழில்நுட்ப பயிற்சியுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு இலங்கையர்களை அனுப்புவதற்கு சிறந்த செயற்றிட்டம் உருவாக்கப்படும்.

அத்துடன் தற்போது எமது நாட்டவர்கள் பணிகளில் ஈடுபட்டுள்ள நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கும் பணியாளர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## ஏழு யானைகளின் மர்ம மரணம்: காரணம் கண்டறியப்படும்

### கால அவகாசம் தேவை என்கிறார் சி.பி. ரத்னாயக்க



ஹபரனை – ஹிரிவடுன – தும்பிகுளம் வனப்பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த 7 யானைகளின் இறப்புக்கான காரணங்களை கண்டறிவதற்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுவதாக வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சீ.பி.ரத்னாயக தெரிவித்துள்ளார்.

காட்டு யானைகளின் இறப்பு தொடர்பான பல சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக நேற்று முன்தினம் (16) அமைச்சர் வடமத்திய மாகாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும், எதிர்காலத்தில் வனவிலங்கு மற்றும் கால்நடை மருத்துவர்களை ஊக்குவிக்கும் வகையிலான பல சிறப்பு திட்டங்கள் அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

## பல பிரதேசங்களில் சிறிதளவில் மழை பெய்யும் சாத்தியம்

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் பல தடவைகள் சிறிதளவில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

நாடு முழுவதும், குறிப்பாக வட மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மத்திய மலை நாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 4050 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 3040 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காங்கேசந்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 5055 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மன்னாரிலிருந்து புத்தளம் வரையான கடற்பரப்புகளும் மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக்காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாணயமாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

## சிறைச்சாலை பாதுகாப்பிற்கு விசேட அதிரடிப்படையினர்

சிறைச்சாலைகளுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு கோரப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலை பூஸ்ஸ சிறைச்சாலைக்கு விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு கோரப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார். போதைப் பொருளுடன் தொடர்புள்ள 21 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் சிறைச்சாலை 06

## கேரள கஞ்சாவுடன் பாலாவியில் இருவர் CID யினரால் கைது



பாலாவி கரம்பை பகுதியில் சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியுடைய கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர் விமானப்படையின் இரகசியப் பிரிவினரால் நேற்று முன்தினம் (16) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலக்கத் தகடு அற்ற மோட்டார் சைக்கிள் ஒன்றில் இவ்வாறு கேரளக் கஞ்சா எடுத்துச் செல்லப்படுவதாக 06

## மேல் மாகாண சுற்றிவளைப்பில் 1662 பேர் கைது

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பல்வேறு குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடைய 1662 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் 696 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் எனவும் 748 பேர் போதைப் பொருட்களுடனும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது. அத்துடன் 91 பேர் குற்றவியல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தினகரன் THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சார்வரி வருடம் ஆவணி மாதம் 02ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1441 துல்ஹிஜ்ஜா பிறை 27





## பொருளாதார அபிவிருத்திக்கு மூன்றிலிரண்டு பெரும் அடித்தளம்

சுதந்திர இலங்கையில் விகிதாசார தேர்தல் முறைமை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு மூன்று தசாப்தங்கள் கடந்து விட்டன. 1989 முதல் நடைமுறைக்கு வந்த இத்தேர்தல் முறைமையின் கீழ் இந்நாடு எட்டு பொதுத்தேர்தல்களைக் கண்டிருக்கிறது. அவற்றில் கடந்த ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தல் இத்தேர்தல் முறைமையின் கீழ் வரலாற்று முக்கியத்துவம் மிக்கதாகும்.

ஏனெனில் விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழ் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை எந்தவொரு தரப்பினராலும் பாராளுமன்றத்தில் பெற்றுக் கொள்ள முடியாது என்ற அபிப்பிராயம் கட்டியெழுப்பப்பட்டிருந்தமையின் விளைவாகவே கடந்த 5 ஆம் திகதி நடந்த தேர்தலின் முடிவு இம்முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது.

ஏற்கனவே நடந்துள்ள ஏழு பாராளுமன்றத் தேர்தல்களிலும் அடையப் பெறாத சாதனையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இத்தேர்தலில் நிலைநாட்டி இருக்கின்றது. அத்தோடு இத்தேர்தல் தொடர்பில் ஏற்கனவே நிலவி வந்த அபிப்பிராயமும் செல்லுபடியற்றதாக்கப்பட்டிருக்கின்றது. அதுதான் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை இக்கட்சி பெற்றிருப்பதாகும்.

இவ்வாறான அறுதிப் பெரும்பான்மையை இத்தேர்தல் முறைமையை நாட்டுக்கு அறிமுகப்படுத்திய ஐ.தே.கவினால் கூட கடந்த மூன்று தசாப்த காலத்தில் அடைந்து கொள்ள முடியவில்லை. அத்தோடு கடந்த 31 வருட காலப் பகுதியில் எந்த ஒரு கட்சியும் இவ்வாறான பெரும்பான்மையைப் பாராளுமன்றத் தேர்தலில் பெறவில்லை.

ஆனால் 2016 நவம்பரில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ.ல.பொ. பெரமுன கட்சி கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முதன்முறையாகப் போட்டியிட்டு இவ்வாறு வெற்றிவாகை சூடி இருக்கின்றது. அதுவும் இந்நாட்டின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளான ஐ.தே. கட்சியையும், ஸ்ரீல.சு.கட்சியையும் பின்தள்ளியே இச்சாதனை படைக்கப்பட்டிருக்கின்றது. அதாவது இத்தேர்தலில் தெளிவான மூன்றிலிரண்டு பெரும்பான்மையை மக்கள் இக்கட்சிக்கு பெற்றுக் கொடுத்திருக்கின்றனர். அந்தளவுக்கு மக்களின் நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் பாத்திரமான கட்சியாக ஸ்ரீ.ல.பொ. பெரமுன விளங்கிக் கொண்டிருக்கின்றது.

இக்கட்சி அமைக்கப்பட்ட குறுகிய காலப் பகுதியில் நாட்டில் பெரும்பாலான மக்களின் மனங்களை வெற்றி கொண்ட கட்சியாக இக்கட்சி திகழ்வதற்கு இக்கட்சியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் நாட்டுக்கு ஆற்றிவரும் அளப்பரிய சேவைகளே மூலகாரணமாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. அதனை இத்தேர்தலில் மக்கள் அளித்துள்ள ஆணை வெளிப்படுத்திருக்கிறது.

அதனால் ஜனாதிபதி மீதும் பிரதமர் மீதும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை புதிய எதிர்பார்ப்புக்களை உருவாக்கியுள்ளது. அதுதான் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு அப்பால் நாட்டில் நிலைபேறான அபிவிருத்தி ஏற்படுத்தப்பட வேண்டும். அது பொருளாதார அபிவிருத்தியுடன் கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறான அபிவிருத்தியை ஸ்ரீ.ல.பொ. பெரமுன தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷஆகியோரின் தலைமையில்தான் ஏற்பட முடியும். இவ்விடயத்தில் மக்கள் தெளிவான உறுதியுடன் உள்ளனர். அதற்கு ஜனாதிபதியின் 'சுபீட்சத்தின் நோக்கு' வேலைத் திட்டம் அடித்தளமாக விளங்குகிறது.

அதேநேரம் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி வழங்கல் முறைகேடு உள்ளிட்ட மோசடிகளும் பலவீனங்களும் மக்களின் நம்பிக்கைக்குரிய ஒரே தரப்பாக ஸ்ரீ.ல.பொ. பெரமுனவை பெருவிருட்சமாக வளர்ச்சி பெற வழிவகுத்தது. இப்பின்னணியில்தான் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 'சுபிட்சத்தின் நோக்கு' தேசிய வேலைத் திட்டத்தை அர்த்தபூர்வமாக்குவதற்காக மக்களிடம் ஸ்ரீ.ல.பொ. பெரமுனவினால் ஆணை கோரப்பட்டது. அதற்கு மக்கள் அமோக ஆதரவு வழங்கி தமது நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

இவ்வாறான சூழலில் இலங்கை திட்டமிடல் சேவையாளர் சங்கத்தின் பிரதிநிதிகளை அலரி மாளிகையில் சந்தித்த பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதியின் செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ,'மக்கள் அளித்துள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவை நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தப் பயன்படுத்துவோம். இந்நாட்டு அபிவிருத்தியில் தெளிவான மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதனால் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

செயலணித் தலைவர் பசில் ராஜபக்ஷவின் இக்கூற்று மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நாட்டில் நிலைபேறான அபிவிருத்தியுடன் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

இதேவேளை இந்நாட்டு அபிவிருத்தியில் மக்கள் எதிர்பார்க்கும் தெளிவான மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான பங்களிப்பை அளிக்கத் திட்டமிடல் சேவையாளர் சங்க பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இது பெரிதும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

ஆகவே ஸ்ரீ.ல.பொ.பெரமுனவுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கும் மூன்றிரண்டு பெரும்பான்மையின் அர்த்தபூர்வப் பிரதிபலன்களை மக்கள் அடைந்து கொள்ளும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பது தெளிவாகின்றது. அது மக்களின் வளமான வாழ்வுக்கு வழிவகுக்கும். அதுவே பரவலான அபிப்பிராயமாகும்.

editor.tkn@lakehouse.lk

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றியே தீருவோம்

**நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் குருணாகல் மாவட்டத்தில் அதிக அளவிலான விருப்பு வாக்குகளை பெற்று சரித்திரம் படைத்த பிரதமர் மஹிந்த ராஜபக்சவை எமது சகோதர பத்திரிகையான தினமின அண்மையில் பேட்டிகண்டது. அப்பேட்டியில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர் வழங்கிய பதில்களும் வருமாறு:**



***கேள்வி: அண்மையில் நடந்து முடிந்/த தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடைத்த அமோக வெற்றியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.***

**பதில்:** பொதுத் தேர்தலுக்கான பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டபோதே வெற்றி கிடைக்கும் என்பது நாம் எதிர்பார்த்திருந்த ஒன்றுதான் ஈஸ்டர் ஞாயிறு தின தாக்குதல் காரணமாக மக்கள் நிர்க்கதியான நிலையில் இருந்தனர். முன்னய அரசாங்கம் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தவறிவிட்டது. அதேபோல் 30 வருடகால பயங்கரவாத யுத்தத்தின் போதும் நாங்கள் தான் நாட்டை மீட்டெடுத்தோம். எமது தாய்நாட்டை மீட்டெடுத்ததற்குக் கூட எதிர்ப்பு தெரிவித்த எதிர்க் கட்சியினர் இருந்த நாட்டிலேயே அதனை நாம் செய்தோம் நல்லாட்சி அரசாங்கத்தால் எந்தவொரு அபிவிருத்தியும் செய்யப்படவில்லை.

ஜனதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டிருந்த இழுபறி காரணமாக நாட்டின் எதிர்காலம் சிக்கலில் இருந்தது.

நாட்டில் இரண்டு வரை அரசியல் குழுக்கள் இருந்ததாக நான் நம்புகிறேன். அதில் ஒன்று நாட்டை நேசித்தது. மற்றையது நாட்டை அழித்தது. இந்த இரு குழுக்களுக்கு இடையில் தான் தேர்தல் நடந்தது. இதில் முன்னால் கொல்லப்பட்ட நாட்டை நேசிக்கும் குழுவினரையே மக்கள் தெரிசெய்துள்ளனர்.

***கேள்வி: 2/3 பெரும்பான்மை பெறுவதை விடுத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு தேர்தலில் வெற்றிபெற 113 ஆசனங்களைக் கூட பெற்றுக்கொள்ள முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து கூறி வந்தது. இந்த நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2/3 பெரும்பான்மையை பெற்றுள்ளது. இந்த வெற்றியின் ரகசியம் என்ன?***

**பதில்:** இதில் எந்த ரசியமும் இல்லை. நாங்கள் எப்போது மக்கள் மீதான அக்கறையை மனதில் வைத்தே தீர்மானங்களை எடுத்தோம். நல்லாட்சி அரசாங்கத்தை தெரிவு செய்த தவறுக்காக மக்கள் இன்னும் கவலைப்படுகின்றனர். நாம் அந்த தவறை செய்யவில்லை. கடந்த ஐந்து வருடங்களில் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் நாடு பின்னோக்கிச் சென்றது. கொரோனா வைரஸை ஒரு உதாரணமாகக் கொள்வோம். இந்த நேரத்தில் நாம் அதிகாரத்தில் இல்லாதிருந்தால் பலர் இந்நேரம் புதை குழிக்குள் இருப்பார்கள். ஜனாதிபதி கோட்டாபய முப்படையினர், பொலிஸ் மற்றும் சுகாதார துரையினரை கூட்டிணைத்து நாட்டை காப்பாற்றினார். கொரோனா சமயத்தில் நாம் மக்களுக்கு நிதியுதவி வழங்கியதுடன் எந்த குறைப்பாடும் இல்லாது உணவுப் பொருட்களையும் விநியோகித்தோம்.

***கேள்வி: எதற்காக நீங்கள் 2/3 பெரும்பான்மையை கேட்டீர்கள்? அது தேவையானதா?***

**பதில்:** ஆம். கண்டிப்பாக 2/3 பெரும்பான்மை எமக்கு தேவைபடுகிறது. அரசியலமைப்பு மூலம் நல்லாடசி அரசாங்கம் நாட்டில் ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தியது 19 ஆம் திருத்த சட்டம் ஒரு முட்டுக்கட்டை இதை நாம் கடந்த ஐந்து வருடங்களில் அனுபவித்திருக்கிறோம். நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்கு அது ஒரு தடையாகும். நல்லாட்சி அரசாங்கம் ஒரே ஒரு குடும்பத்தை மையப்படுத்தி அரசியலமைப்பை வகுத்தது. இதுபோன்று நாட்டின் அரசியல் சரித்திரத்தில் ஒருபோதும் இவ்வாறு நடந்ததில்லை..

நாங்கள் எப்போதுமே நாட்டையும் மக்களையும் பற்றி சிந்தித்தே தீர்மானங்களை எடுத்தோம். அதனைத் தொடர்வதற்கு எமக்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கம் ஆகியவே நெருங்கிப் பணிபுரிவதை உறுதிப்படுத்தும் அரசியலமைப்பொன்று தேவை. அவ்வாறான ஒரு முறைமைக்கு நடைமுறை சாத்தியம் வழங்கவே புதிய அரசியலமைப்பு தேவைப்படுகிறது.

***கேள்வி: எதிர்க் கட்சியினரும் அதனுடன் தொடர்புடையவர்களும் நீங்கள் சர்வாதிகார பாதையில் செல்வதாக குற்றம்சாட்டுகின்றனரே. அதில் ஏதும் உண்மை இருக்கிறதா?***

**பதில்:** அது ஒரு அப்பட்டமான பொய். நாங்கள் நாட்டை ஆட்சி செய்தபோது மக்கள் சுதந்திரமாக இருந்தார்களா இல்லையா என்று அவர்களையே கேழுங்கள். அவர்களின் பதில் என்னவாக இருக்கும் என்று எனக்குத் தெரியும் சர்வாதிகாரம் பற்றி பேசுவோருக்கு உண்மையிலேயே அது என்னவென்று தெரியாது. நாம் எப்போதும் சர்வாதிகாரத்தை பின்பற்றியதில்லை. கடந்த ஆட்சியில் சர்வாதிகார அபிவிருத்தி இருந்தது. எம்மீது குற்றச் சாட்டுகளை சுமத்தாமலே எம்மை கைது செய்தார்கள். வேண்டுமென்றே சுமத்திய குற்றச்சாட்டுகளை வைத்துக்கொண்டு யுத்த ஹீரோக்களையும் உள்ளே தள்ளினார்கள்.

அவர்களது அக்கதைக்கேற்ப சட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு மக்கள் அபிப்பிராயத்துக்கு மாறாக தீய செயல்களில் ஈடுபட்டனர். அதேநேரம் நாம் பொதுமக்களின் கருத்துகளுக்கும் பிரச்சினைகளுக்கு ஏற்றவாறு செயற்பட்டோம்.

***கேள்வி: இம்முறை அமைச்சரவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உள்ளது. எதிர்காலத்தில் இது பிரச்சினைகளை ஏற்படுத்தாதோ?***

**பதில்:** இல்லை. ஒருபோதும் இல்லை. அமைச்சரவை சிறிய அளவில் இருந்தாலும் அது முறையாக அமைந்துள்ளது. உலகப் பொருளாதாரமே இப்போது பல காரணங்களால் சீர்குலைந்துள்ளது. சமூக மற்றும் கலாசார சீரழிவும் உள்ளது. அரசியல் தலைவர்களுக்கும் நாட்டின் தலைமைகளுக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் சுமை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மத அரசியல் பேதமின்றி நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப வருமாறு நாம் அழைப்பு விடுக்கிறேன்.

***கேள்வி: ஸ்ரீலங்கா பொதுபெரமுனவின் தேசிய பட்டியல் உறுப்பினர்கள் தொடர்பாக திருப்தியடைகிறீர்களா?***

**பதில்:** நிச்சயமாக வேறு ஒரு தடவையிலும் இல்லாதவாறு இம்முறை எமது தேசிய பட்டியலில் படித்த அறிவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய முடிந்துள்ளது. அதில் கலாநிதிகள், ஆசிரியர்மார், சட்டத்தரணிகள், சமூக சேவகர்கள் மற்றும் டாக்டர்கள் என சகல தரப்பினரும் இடம்பெற்றுள்ளனர். அவர்களது அறிவைக் கொண்டு நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

***கேள்வி: லட்சக்கணக்கான பட்டதாரிகளுக்கும் க.பொ. த சாதாரண தரத்தில் சித்தியடைந்தோருக்கும் தொழில் வாய்ப்புகளை வழங்கப்போவதாக அரசியல் மேடைகளில் கூறினீர்களே இது சாத்தியமாகுமா***

**பதில்:** ஆம். மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நாம் முழு மூச்சுடன் செயற்படுவோம். நிதி நிலைமை சீராக இல்லாத நிலையிலும் நாம் எந்த வாக்குறுதிகளையும் வழங்கினால் அதனை நிச்சயமாக நிறைவேற்றுவோம். புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடனேயே பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கினோம். ஆனால் தேர்தல் காரணமாக அந்த நியமனங்கள் தற்காலிகமாக பின்போடப்பட்டுள்ளன.

***கேள்வி: குருணாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட நீங்கள் இலங்கை தேர்தல் சரித்திரத்தில் உள்ளாதவாறு அதிகளவிலான விருப்பு வாக்குகளை பெற்றுள்ளதையிட்டு என்ன நினைக்கிறீர்கள்?***

**பதில்:** என்மீது நம்பிக்கை வைத்துள்ள குருணாகல் மாவட்ட வாக்காளர்களுக்கு நான் முழு மனதுடன் நன்றி தெரிவிக்கிறேன். இந்தமுறை தேர்தல் பெறுபேறுகள் நான் மட்டுமன்றி எமது மொத்த அணியும் மக்களுடனேயே இருக்கிறோம் என்பதை காட்டியுள்ளது.

***கேள்வி: உங்களது அமோக வெற்றியின் பின்னால் உள்ள சக்தி எது?***

**பதில்:** நாம் நாட்டுக்கு ஆற்றியுள்ள சேவைகளுக்கு மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளனர். பசில் ராஜபக்சவும் பலம் மிக்க ஒரு அணியும் இந்த பாரிய செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர். தேர்தலுக்கு நாம் நேரகாலத்துடன் தயாராகினோம்.

இம்முறை நாம் பதாதைகள் மற்றும் கட்அவுட் கலாசாரத்துக்கு முடிவு கட்டிவிட்டோம். இதனால் பல்வேறு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையே மோதல்கள் தவிர்க்கப்பட்டன. இதனால் தேர்தல் அமைதியாக நடந்தது. இதற்கான அனைத்து பெருமையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கே செல்லவேண்டும்.

> ‘ நல்லாட்சி அரசாங்கம் ஒரே ஒரு குடும்பத்தை மையப்படுத்தி அரசியலமைப்பை வகுத்தது. நாட்டின் அரசியல் சரித்திரத்தில் ஒருபோதும் இவ்வாறு நடந்ததில்லை. நாங்கள் எப்போதுமே நாட்டையும் மக்களையும் பற்றி சிந்தித்தே தீர்மானங்களை எடுத்தோம். அதனைத் தொடர்வதற்கு எமக்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கம் நெருங்கிப் பணிபுரிவதை உறுதிப்படுத்தும் அரசியலமைப்பொன்று தேவை ’

பக்தி தர்மபிரிய மெண்டிஸ் ...
தமிழில்: என். ராமலிங்கம்

# ஊடகங்கள் ஊதுகுழலாக இல்லாமல் மக்களுக்காக செயற்பட வேண்டும்

## வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளராக பதவியேற்ற ஜகத் விஜேவீர

'ஊடகங்கள் அரசாங்கத்திற்கு ஊதுகுழலாக இருக்கக் கூடாது, மாறாக பொது மக்களுக்காக செயற்பட வேண்டும்' என வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் ஜகத் பி.விஜேவீர தெரிவித்தார்.

வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளராக நேற்று அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியான ஓய்வு பெற்ற ஜகத் பி.விஜேவீர , வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவியேற்பு நிகழ்வில் அமைச்சின்மேலதிக செயலாளர் (நிர்வாகம்)சத்குமார , எச்.ஹேவகே (அமைச்சின் மேலதிக செயலாளர்_அபிவிருத்தி), அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாலக்க கலுவெவ ஆகியோர் பங்கேற்றனர்.

கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த செயலாளர் "ஊடகங்கள் அரசாங்கத்திற்கு ஊதுகுழலாக இருக்கக் கூடாது, மாறாக பொது மக்களுக்காக செயற்பட வேண்டும். ஊடக கலாசாரமானாது மக்களின் நல்வாழ்வை உறுதிசெய்வதாக, நாட்டின் பொருளாதாரம், கல்வி, சகவாழ்வு மற்றும் கலாசாரத்தை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும்" என்று தெரிவித்தார். ஜகத் பி.விஜேவீர களணி பல்கலைக்கழகத்தில் நுண்கலை தொடர்பில் முதலாவது பட்டம் பெற்றவர். பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சர்வதேச கல்வி தொடர்பில் முதுகலை பட்டத்தை பெற்றவருமாவார். இலங்கை நிர்வாக சேவையில் அதிகாரியாக நியமனம் பெற்று தனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கிய ஜகத் பி.விஜேவீர, 35 ஆண்டுகளுக்கும் மேலாக பொது நிர்வாகத் துறையில் அனுபவம் பெற்றவர். இவர், தனது தொழில் வாழ்க்கை முழுவதும் பல்வேறு அமைச்சுகளிலும் திணைக்களங்களிலும் பல பதவிகளை வகித்துள்ளதுடன் அரச பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றி அனுபவம் பெற்ற ஜகத், இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார்.



# நாட்டை முன்னேற்றுவதாயின் தேசிய பாதுகாப்பே பிரதானம்

நாட்டின் அபிவிருத்திக்கு தேசிய பாதுகாப்பு மிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுவதாக பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

"தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் ஒரு நாட்டை முன்னேற்றுவதும் அபிவிருத்தி செய்வதும் சாத்தியமில்லை. நாட்டிற்கு தேவையான நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் தேசிய பாதுகாப்பு அவசியம்" எனவும் பாதுகாப்பு செயலாளர் வலியுறுத்தினார்.

தேசிய பாதுகாப்பை நிலைநிறுத்துவதே நாட்டின் அபிவிருத்தி இலக்கை நோக்கிய திசையாகும் என தெரிவித்த அவர், 'செழிப்பு மற்றும் பிரகாசமான எதிர்காலம்' எனும் ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை இதன் போது சுட்டிக் காட்டினார்.

'ஹரிமக அமைப்பினால்' 'கொவிட் 19 க்கு பின்னரான மறுமலர்ச்சி இலங்கையின் தற்போதைய மற்றும் எதிர்கால வளர்ச்சி' எனும் தொனிப்பொருளில் இலங்கை பவுண்டேசன் நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது இங்கு வருகை தந்தோர் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"2009ஆம் ஆண்டு பிரிவினைவாதம் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டிருந்த போதும், ஒரு சில தமிழ் புலம்பெயர்ந்தோர் பிரிவினைவாத சிந்தனைக்கு தொடர்ச்சியாக நிதியுதவியளிப்பதை நாம் தடை செய்ய வேண்டும். போருக்குப் பின்னர் எல் ரீ ரீ ஈ முன்னாள் போராளிகள் 12,242 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டனர். எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தின் சில மீதமுள்ள அமைப்புகள் நிதி சேகரிக்கும் நோக்கில் அவர்களின் பிரிவினைவாத சிந்தனையை தூண்டி அதற்கு மேலும் உரமூட்டும் வகையில் செயற்படுகின்றன.

இந்த நாட்டில் ஒருபோதும் பிரிவினைவாதத்திற்கு இடமளிக்கப்பட மாட்டது என்பதை நான் உங்களுக்கு உறுதிப்படுத்துகிறேன். 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து புலனாய்வு அமைப்புகளுக்கு 97 முறை முன்கூட்டியே எச்சரிக்கைகள் கிடைத்த போதும், பொறுப்பானவர்கள் அதன் பாரதூரமான விளைவுகள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. இதனால் சுமார் 500 பேர் காயமடைவதை தடுக்கவும் சுமார் 290 க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளைத் தடுக்கவும் தவறி விட்டனர்.

> ‘ வடக்கில் பிரிவினைவாதமோ,
> கிழக்கில் தீவிரவாதமோ உருவாக நாம்
> ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் ’

எமது இராணுவ புலனாய்வு அதிகாரிகள் சிறையில் அடைக்கப்பட்டமை மற்றும் புலனாய்வுத்துறையில் உள்ளோர் வெளியேறியமை என்பன தீவிரவாதிகள் சுதந்திரமாகவும் கட்டமைப்பாகவும் செயற்படுவதற்கு வழிசமைத்தன. கடந்த வாரம் கூட, நாம், 1.5 கிலோகிராம் உயர் ரக வெடிபொருட்கள் மற்றும் 90 டெட்டனேட்டர்களை மன்னார் பிரதேசத்திலிருந்து கைப்பற்றியுள்ளோம். அத்தோடு, ஒரு சில ரிமோட் கொன்ட்ரோலர்கள் எம்மால் கைப்பற்றப்பட்டுள்ளன.



அந்த சம்பவம் தொடர்பில் நாம் பாராமுகமாக செயற்பட்டிருந்தால் இவைகளை எம்மால் மீட்டிருக்க முடியாது.

வடக்கில் பிரிவினைவாதமோ கிழக்கில் தீவிரவாதமோ நாட்டில் அச்சத்தையும் அழிவையும் ஏற்படுத்துவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

சிறைச்சாலைகளில் இருந்து முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் திட்டமிட்ட குற்றங்களுக்கு எதிராக எதிர்வினையாற்றக் கூடிய திறமைமிக்க அதிகாரிகளை சிறைச்சாலை திணைக்களம் மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப்படை ஆகியவற்றிற்கு நாம் நியமித்துள்ளோம்.

மோசமான குற்றவாளிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சிறைவைக்கப்பட்டுள்ள பூசா மற்றும் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளின் அதிகபட்ச பாதுகாப்பு நடவடிக்கைகள் நிறுவப்பட்டுள்ளன. சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் நலன்புரி நடவடிக்கை பிரச்சினைகள் தொடர்பாகவும், அளவுக்கதிகமாக காணப்படும் சிறைக்கைதிகளின் எண்ணிக்கைகளை குறைப்பது தொடர்பாகவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளோர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் செயற்பாடுகளை அதிகப்படுத்துவதற்காக பல்வேறு முன்னெடுப்புக்களை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இதற்கமைய 1000 பேருக்கு புனர்வாழ்வு அளிக்கும் வசதிகளைக் கொண்ட விஷேட நிலையம் ஒன்று நிட்டம்புவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. 2,000 பேருக்கு புனர்வாழ்வு அளிக்கும் வசதிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று வீரவில பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

## பாதுகாப்பு செயலாளர்
## மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன

சட்டவிரோதமான முறையில் முன்னெடுக்கப்படும் மணல் அகழ்வு, விஷேடமாக மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோதமான நில ஆக்கிரமிப்புக்களை தடுத்து நிறுத்துவதற்கான திட்டங்கள் ஏற்படுத்தப்படும்.

பொதுமக்களினால் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக முறையான விசாரணைகளை முன்னெடுக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இதற்கான விசேட பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது." இவ்வாறு பாதுகாப்பு செயலாளர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பொலிஸ் விஷேட அதிரடிப்படையின் கட்டளைத் தளபதி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல் தெனிய மற்றும் ஹரிமக நிறுவனத்தின் தலைவர் கனிஷ்க டி சில்வா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஸாதிக் ஷிஹான் ...

# விபுலானந்த அடிகளார் நினைவாக மட்டுநகரில் அரும்பொருள் காட்சியகம்

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் ஞாபகார்த்தமாக உலகில் முதல் முதலாக அரும்பொருள் காட்சியகமொன்று இலங்கையிலே அதுவும் மட்டக்களப்பில் உருவாகவிருக்கிறது. அதற்கான கால்கோள் இடும் விழா மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலுள்ள சுவாமி விபுலானந்தரின் சமாதி அருகே நடைபெற்றது.

அங்கு இருபெரும் பணிகள் நடந்தேறவிருக்கின்றன. ஒன்று சமாதி மண்டபம் நிர்மாணிக்கப்படவுள்ளது. மற்றது அரும்பொருட்காட்சியகம்.


சுவாமி விபுலானந்த அடிகளார் உலகறிந்த பேராசிரியர் என்பதற்கப்பால் இ.கி.மிசன் துறவி. எனவே அவர் சார்ந்த இ.கி.மிசன் சூழலில், அவர் உருவாக்கிய சிவானந்தா வித்தியாலய சூழலில் அவருக்காக எழுப்பப்பட்ட மணிமண்டப வளாகத்தில் இச்சமாதி மண்டபமும் அரும்பொருட்காட்சியகமும் அமையவிருக்கின்றன. உலகளாவிய ரீதியில் ஆலவிருட்சமாய் திகழும் இராமகிருஷ்ணமிஷன் இந்த பெரும் பணியை செய்து வருகின்றது .



இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு மாநில மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மஹராஜ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. துணை மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

முதலில் சமாதி மண்டபத்திற்கான அடிக்கல் நடும் விழா நடைபெற்றது.காலை 6.45மணிக்கு திட்டமிட்டபடி குருதேவருக்கு பூஜை செய்து 7 மணிக்கு சுவாமிகளால் அடிக்கல் நடப்பட்டது.

தொடர்ந்து இ.கி.மிசன் அபிமானிகள் கல் வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து சுவாமி விபுலானந்த சமாதிக்கு சுவாமிகளால் பூமாலை சாத்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட ஏனையோர் மலரஞ்சலி செலுத்தினர். அங்கு 'வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ...'



என்ற பாடலை காரைதீவு மாணவிகள் பாடினார்கள்.

மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மட்டக்களப்பு இ.கி.மிசன் அபிமானிகள், மிசன் மற்றும் சிவானந்தா பழைய மாணவர்கள், மட்டு.சுவாமி நூற்றாண்டுவிழாச் சபையினர், காரைதீவு விபுலானந்த பணிமன்றத்தினர், இ.கி.மிசன் அபிமானிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். அங்கு ஊடகங்களுக்கு இரு சுவாமிகளும் கருத்துரைத்தனர்.

"சுவாமி விபுலானந்தர் சமாதி மண்டபம் சுமார் 40 இலட்சருபா செலவில் குருதேவரின் ஆசியுடனும் மிசன் அபிமானிகளின் ஆதரவுடனும் நிரமாணிக்கப்படவுள்ளது. அரும்பொருட்காட்சியகம் ஒருகோடி ரூபாவுக்கும் மேலான செலவில் அமைக்கப்படவுள்ளது. அதில் சுவாமிகள் பயன்படுத்திய பொருட்கள், ஆவணங்கள் அவர் எழுதிய நூல்கள், அவருக்காக எழுதிய நூல்கள், ஆவணப்படங்கள் போன்ற பல அரும்பொருட்கள் காட்சிபபடுத்தப்படவுள்ளன. அத்தகைய பொருட்கள் உள்ளவர்கள் எமக்கு வழங்கி உதவலாம்" என்றார்கள்.

அதனைத் தொடர்ந்து கூட்டமொன்று இடம்பெற்றது. அந்தக் கூட்டத்திலே சுவாமி தக்ஜயானந்த மஹராஜா தலைமையுரையாற்றினார். பின்னர் சுவாமி விபுலானந்த மட்டக்களப்பு நூற்றாண்டு விழாச் சபைத் தலைவர் கணபதிப்பிள்ளை பாஸ்கரன், காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் உரையாற்றினார்கள். இறுதியாக நன்றியுரையுடன் கூடிய உரையை சுவாமி நீலமாதவானந்த ஜீ உரையாற்றினார்.

வி.ரி.சகாதேவராஜா...
காரைதீவு குறூப் நிருபர்

# அமெரிக்க துணை ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் இந்திய வம்சாவளி தமிழ்ப் பெண் கமலா ஹரிஸ்

அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்ட கமலா தேவி ஹரிஸ் (55) இந்திய_ ஜெமெய்கா வம்சாவளிகளைச் சேர்ந்தவர். அவரின் தாயார் ஒரு தமிழ்ப் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

கமலா ஹரிஸின் தாயார் ஷியாமளா கோபாலனின் பிறப்பிடம் சென்னை. கமலா ஹரிஸுக்கு சென்னையுடன் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது. கமலாவின் வாழ்க்கை வெற்றிப் பயணத்தில் மிக முக்கிய நபராக அவரது தாயாரே திகழ்கின்றார்.

“பி.வி. கோபாலன் மற்றும் ராஜம் தம்பதியரின் புதல்வியான ஷியாமளா கோபாலன், எவ்வாறு கமலா ஹரிஸை வளர்த்து ஆளாக்கினார் என்பதை டுவிட்டர் மூலம் வெளிப்படுத்தினார் கமலாவின் சகோதரியான மாயா ஹரிஸ்.

தனது தாயாரின் ஆலோசனைகளே தன்னை தினந்தோறும் வழிநடத்துவதாக கமலா ஹரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள இந்தத் திருப்பங்களினால் கமலாவின் தாயார் வழி உறவினர்களும் சித்தி சராளா கோபாலனும் ஆனந்தத்தில் மூழ்கியுள்ளனர். ஆனால், கமலா உதவி ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடப்பட்ட செய்தி வெளியானது முதல் விளம்பரங்களைத் தவிர்க்கும் வகையில் அவர்கள் தங்களது தொலைபேசிகளை செயலிழிக்கச் செய்துள்ளனர். இந்த செய்தியைக் கேள்வியுற்றதும் முழுக் குடும்பமே அளவிலா மகிழ்ச்சி அடைந்ததாக சரளா அதற்கு முன்னர் தெரிவித்திருந்தார். கமலா சிறு பிள்ளையாக இருந்த காலத்தில் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒருமுறை சென்னைக்கு சென்று தனது தாயாரின் குடும்பங்களை சந்தித்தார்.

“எனது தாத்தாவுடனும் அவரது நண்பர்களுடனும் கடற்கரையில் நடைபயில்வது எனது ஆரம்ப கால நினைவுகளாகும். ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களான அவர்கள் இந்தியாவை ஒரு சிறந்த இடமாக பரிணமிக்கச் செய்ய தங்களது நாட்களை ஒதுக்கியவர்கள்" என ஒரு பேட்டி



யில் அவர் தெரிவித்திருந்தார்.

முன்னாள் அரச அதிகாரியான அவரது தாத்தா பி.வி. கோபாலன் இந்திய அரசில் தொழில், தொழில் வாய்ப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு செயலாளராக பணியாற்றியவராவார். சென்னை பெசன்ட் நகர எலியட் கடற்கரைக்கு அவர்களை கோபாலன் அழைத்துச் செல்வதுண்டு. ‘ஒவ்வொரு பிரச்சினையையும் நீங்கள் எதிர்கொள்ளும்போது மிகவும் துணிச்சலுடன் நேர்மையான தூரநோக்குடனான அணுகுமுறையை கையாள்வதன் முக்கியத்துவம் பற்றி என்னுடன் எனது தாத்தா கதைப்பார்’ என சான் பிரான்சிஸ்கோவில் முதலாவது பெண் மாவட்ட வழக்கறிஞராக பதவியேற்ற பின்னர் அளித்த பேட்டியில் கமலா ஹரிஸ் தெரிவித்திருந்தார்.


கமலாவின் தாயாரான ஷியாமளா தனது 19ஆவது வயதில் டெல்லி, லேடி ஏர்வின் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார்.

25ஆவது வயதில் பெர்க்லி, கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் ஊட்டச்சத்து மற்றும் உடற்சுரப்பியல்துறையில் டொக்டர் பட்டம் பெற்றார்.

அப்போது ஸ்டன்போர்டில் பொருளியல் பேராசிரியராக பணியாற்றிய ஜெமெய்கா நாட்டைச் சேர்ந்த டொனல்ட் ஹரிஸை திருமணம் செய்தார்.

பிற்காலத்தில் அவர்களது திருமண பந்தம் பிளவுபட்டது. இந்நிலையில் ஷியாமளா தனது பிள்ளைகளை அடிக்கடி சென்னைக்கு அழைத்துச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

இதேவேளை, அமெரிக்க ஜனாதி






பதித் தேர்தலில் துணை ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹரிஸ் பிரேரிக்கப்பட்டிருப்பது இந்தியர்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமை தருகின்றது என தமிழகத்தின் பிரதி முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

‘இது இந்தியர்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் ஒரு மகத்தான தருணமாகும். குறிப்பாக அமெரிக்க ஜனநாயகக் கட்சியினால் துணை ஜனாதிபதி வேட்பாளராக பிரேரிக்கப்பட்டுள்ள கமலா ஹரிஸ், முதலாவது இந்திய செனட்டராகவும் தெரிவு செய்யப்பட்டவராவார். அத்துடன் அவரது தாயார் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்.

அவருக்கு எனது மனமார்ந்து வாழ்த்துக்கள்’ என பன்னீர்செல்வம் டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

கமலா தேவி ஹரிஸ்1964இல் கலிபோர்னியா, ஒக்லண்டில் ஒக்டோபர் 20ஆம் திகதி பிறந்தார். அவரது தாயார் ஷியாமளா கோபாலன் 1934இல் சென்னையில் பிறந்தவர். கமலாவின் தந்தை டொனல்ட் ஹரிஸ் ஜெமெய்க்காவைச் சேர்ந்தவர். கமலாவின் தாய்வழி தாத்தா பி. வி. கோபாலன், மன்னார்குடிக்கு அருகாமையில் உள்ள பைங்கநாடு என்ற ஊரில் பிறந்தவர்.

தனது தாத்தா கோபாலனின் 80ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்ட போது சென்னை சென்றிருந்ததாகவும் அங்கு அனைத்து உறவினர்களுடனும் கூடியிருந்தது மிகுந்த மகிழ்ச்சியைத் தந்ததாகவும் கமலா தேவி ஹரிஸ் தான் எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார்.

# நீதியமைச்சரின் நியமனத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்பு

## சிறுபான்மையினரின் நலன்களை பாதுகாப்பார் என நம்பிக்கை



சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் அவர் செயற்படுவார் என எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ள முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஸீர் அஹமட், அவரது நியமனத்தை முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார். நீதி அமைச்சர் அலி சப்ரி, சகல சமூகங்களாலும் நேசிக்கப்படும் வகையில், பவ்வியமான கருத்துக்களை வெளியிடுவாரென தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்சாக்களின் அரசாங்கத்தில், நீதி அமைச்சராக அலி சப்ரி நியமிக்கப்பட்டுள்ளதை, முஸ்லிம் காங்கிரஸ் பெருமனதுடன் வரவேற்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர்,

குறித்த ஒரு சமூகத்தின் பிரதிநிதியாகச் செயற்படாது, அரசாங்கத்தின் கொள்கைகளைத் துணிச்சலுடன் முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளமை, அதிருப்தியளிக்கிறது. பொறுப்புமிக்க அமைச்சைப் பொறுப்பேற்றுள்ள அலிசப்ரி, துள்ளாமலும் துவழாமலும் நடந்துகொள்வதுதான், இந்த அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை சிறுபான்மையினர் மத்தியில் இன்னும் அதிகரிக்கச் செய்யும்.

அரசியலமைப்பின் 19 ஆவது சரத்தை நீக்கும் விடயத்தில் "எவருக்கும் அஞ்சப்போதில்லை" என்று அவர் எதற்காகக் கூற வேண்டும். சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் அவர் செயற்படுவார் என எதிர்பார்க்கின்றேன். உங்களை வைத்துத்தான் முஸ்லிம்களின் சில மத விடயங்களை வெல்வதற்கு எமது சமூகம் எதிர்பார்த்துள்ளது.

ஷரீஆச் சட்டம், அரபு மத்ரஸாக்கள், முஸ்லிம் தனியார் சட்டம், விவாக விவாகரத்துச் சட்டம் உள்ளிட்ட பல விடயங்களை அரசுக்கு தெளிவுபடுத்தி, எமது கலாசாரத்தைப் பாதுகாப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம். அத்துடன், முஸ்லிம்களை இந்த அரசுக்கு எதிராக திசை திருப்பிய காரணிகளை இல்லாமல் செய்வதும் உங்கள் கடமையில் தங்கியுள்ளது என்பதுவும் எமது நம்பிக்கை.

எனவே, உங்களுக்குக் கிடைத்த இந்த முக்கிய அமைச்சுப் பதவியூடாக சிறுபான்மையினரின் குறிப்பாக, முஸ்லிம்களின் மத, கலாசார நம்பிக்கைகளை பாதுகாக்கும் வகையில், செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய அரசாங்கத்தின் புதிய அமைச்சரவையின் முதலாவது அமர்வு நாளை

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை கூட்டம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ளது. சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப அமைச்சரவை கூட்டம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இம்முறை தேர்தலின் ஊடாக அமைச்சரவைக்காக 25 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் அவர்கள் கடந்த 12 ஆம் திகதி சத்தியபிரமாணம் செய்து கொண்டிருந்தனர்.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட 39 இராஜாங்க அமைச்சர்களும் சத்தியபிரமாணம் செய்து கொண்டிருந்தனர்.

இம்முறை அமைச்சரவையில் இராஜாங்க அமைச்சர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஆணைக்குழுவில் ஆஜராக...

பொலிஸ் பிரிவு அவருக்கு இந்த அழைப்பாணையை விடுத்துள்ளது. குறித்த சம்பவத்தில் ஏற்கனவே இன்றைய தினம் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

மேலும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறைச்சாலை பாதுகாப்பிற்கு... 03ஆம் பக்கத் தொடர்

உத்தியோகத்தர்கள் 15 பேர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு எதிரான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நிர்வாக ரீதியிலான உதவிகளை வழங்கும் மற்றும் அனாவசிய தொடர்புகளை பேணும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். போதைப் பொருள் வர்த்தகர்களுடன் தொடர்புள்ள பல சிறை அதிகாரிகள் கடந்த நாட்களில் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.இந்த செயற்பாடுகளையடுத்து பாதுகாப்பு பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பிரதமர் மஹிந்த ராஜபக்ச... 03ஆம் பக்கத் தொடர்

கொழும்பு கோட்டையிலுள்ள உலக வர்த்தக நிலையம், கங்காராம விஹாரை மற்றும் பத்தரமுல்லையிலுள்ள நகர அபிவிருத்தி அமைச்சிற்கும் விஜயம் செய்த பிரதமர் அங்கு அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுடனும் கலந்துரையாடினார்.

மேற்படி நிகழ்வில் அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ஸ)

## கேரள கஞ்சாவுடன்... 03ஆம் பக்கத் தொடர்

விமானப் படையின் இரகசியப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், சந்தேகத்திற்கு இடமான மோட்டார் சைக்கிளை பரிசோதனை செய்த போதே குறித்த கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டதாக விமானப் படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து சுமார் மூன்று இலட்சம் பெறுமதியான 4 கிலோ 250 கிராம் கேரளக் கஞ்சா இரண்டு பைகளில் பொதி செய்யப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் விமானப்படையினர் குறிப்பிட்டனர். பாலாவி கரம்பை நாயக்கர் சேனைப் பகுதியில் விற்பனை செய்யும் நோக்கில் குறித்த கேரளக் கஞ்சா எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் விமானப்படையினர் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் பிரிவின் போதை பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## அரசாங்கத்தின் கொள்கை... 03ஆம் பக்கத் தொடர்

ஜனாதிபதி கோரியுள்ளார். இவற்றை ஒரே இரவில் செய்து விட முடியாது என்றார்.

முன்னாள் நீதி அமைச்சரும் புதிய தொழில் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா கூறுகையில், குரோதம். இனவாதம் என்பவற்றை ஒதுக்கி நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இது பேச்சோடு நின்றுவிடாது செயலிலும் இருக்க வேண்டும்.

தங்களை ஒதுக்கி வைத்துள்ளதாக முஸ்லிம்கள் கருதினர். கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர்கள் எமக்கு வாக்களிக்கவில்லை. முஸ்லிம்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தி எமது அரசில் இனவாத போக்கு கிடையாது என்பதை காண்பிக்கும் வகையில் அலி சப்ரிக்கு முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இது அலி சப்ரிக்கு அன்றி முஸ்லிம் சமூகத்திற்கு அளிக்கப்பட்ட பொறுப்பாகும்.

அவர் இனவாதியல்ல. கடந்த அரசில் இனவாத முஸ்லிம் அமைச்சர்கள் இருந்தார்கள்.

அரசியலமைப்பை திருத்தவும் 19 ஆவது திருத்தத்தை மாற்றவும் அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கு வோம் என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள், நீதி அமைச்சு அதிகாரிகள் சட்டத்தரணிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (பா)

## இலங்கைக்கு எந்தவொரு...

கொவிட் 19 வைரஸ் பரவல் உள்ளடங்கலாக தற்போது ஏற்பட்டிருக்கும் பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு வெற்றிகொள்வதற்கு அதனுடன் தொடர்ந்தும் இணைந்து பணியாற்றும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான புதிய அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள தினேஷ் குணவர்தன நேற்று (17) வெளிவிவகார அமைச்சில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

தற்போது தேசிய ரீதியில் நாம் மிகவும் முக்கியமான தருணத்தில் இருக்கின்றோம். உறுதியானதும், நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலானதுமான நாட்டின் பயணமொன்றுக்காக மக்கள் கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிற்குத் தமது ஆணையை வழங்கினார்கள். அதன் பின்னர் அண்மையில் நடைபெற்றுமுடிந்த பாராளுமன்றத்தேர்தலில் முன்னரை விடவும் அதிகமான ஆதரவை மக்கள் காண்பித்திருக்கின்றார்கள். தற்போதைய தேர்தல் முறைமையின் கீழ் உலகின் எந்தவொரு நாட்டிலும் அரசாங்கம் இத்தகைய மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டதில்லை. அல்லது அவ்வாறு நிகழ்ந்த சம்பவங்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. அவ்வாறிருக்க அத்தகைய பெரும்பான்மை ஆணையொன்றையே மக்கள் எமக்கு வழங்கியிருக்கிறார்கள். பாதுகாப்பானதும் ஸ்திரமானதுமான நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்கு முதலில் பலமான அரசாங்கமும் வலுவான மக்கள் ஆணையும் மிகவும் அவசியமாகும். சர்வதேசத்தின் நம்பிக்கையை வலுப்படுத்திக்கொள்வதற்கும் அது இன்றியமையாததாகும்.

## மலசல கூடங்களை...

பயன்படுத்த முடியாதுள்ளது என பாடசாலை சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கு சொந்தமான காணியில் பொது மக்கள் அடாத்தாக பிடித்து குடியிருந்த நிலையில் அவர்களுக்கு நகரத்தில் பெறுமதிமிக்க இடத்தில் மாற்றுக் காணி வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். ஆனால் பாடசாலை காணியில் வெதுப்பகம் ஒன்றை அமைத்து நடத்தி வருகின்ற ஒருவர் மாத்திரம் காணியை விட்டு மாற்றுக் காணிக்குச் செல்ல மறுத்து தொடர்ந்தும் பாடசாலைக் காணியிலிருந்து தொழில் செய்து வருகின்றார்.

இதனால் பாடசாலைக் காணியின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்ட மலசலக் கூடத்தை மாணவர்களினால் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த மலசலக் கூடத்தை பயன்படுத்துவதற்கு மாணவர்கள் வெதுப்பகத்தை கடந்தே செல்ல வேண்டும். ஆனால் குறித்த நபர் வேலி அடைத்து தடுத்துள்ளமையால் மாணவர்களால் மலசலக் கூடத்திற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அதிகளவு மாணவர்களை கொண்டுள்ள நகரில் உள்ள ஆரம்ப பாடசாலை என்ற வகையில் தற்போது பாடசாலையில் உள்ள மலசல கூடங்களையே நெருக்கடிக்குள் மாணவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே மாணவர்களின் நிலையினை கருதி குறித்த மலசலக் கூடத்தை மாணவர்களின் பயன்பாட்டிற்கு விடுவித்து தருமாறு பாடசாலை சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு பயன்படுத்தப்படாதுள்ள குறித்த மலசலக் கூடத்தினை பல்வேறு சமூக விரோத செயற்பாட்டிற்கும் சிலர் பயன்படுத்தி வருகின்றனர் என பாடசாலை மேலும் தெரிவித்துள்ளனர்.

## அமைச்சர் டக்ளஸின்...

இடம்பெற்ற விவாதத்தின் போதே குறித்த விடயத்தினை ஏற்றுக் கொண்டுள்ளார்.

குறித்த விவாதத்தில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , ஒற்றையாட்சியை நிராகரிப்பதாகவும் சமஷ்டி முறை அல்லாத எந்தவொரு விடயத்தினையும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக பரிசீலிக்கத் தயாராக இல்லை என்றும் தெரிவிக்கின்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்கள், இலங்கையின் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்வதாக நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளத் தயாராகி வருகின்றனர். இது சைக்கிள் கட்சியின் கொள்கை முரண்பாட்டினையும் சுயநலச் சிந்தனைகளையும் வெளிப்படுத்துவதாக குற்றஞ்சாட்டினார்.

மேலும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரின் தாய்க் கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் அரசியல் யாப்பில் சுயாட்சியின் மெய்ப்பொருளை எந்தவொரு அரசியலமைப்பின் (ஒற்றையாட்சி அரசியலமைப்பாயினும் சரி) கீழும் இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரும் பெற்றுக் கொள்ளும் வகையில் அரசியலமைப்பு இருக்க வேண்டும் என்பதையே வலியுறுத்தி வருவதாகவும் எந்தவொரு இடத்திலும் சமஷ்டி வலியுறுத்தப்பாடாத நிலையில் குறித்த கட்சியின் பெயரிலேயே தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தேர்தலை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தார். இதற்கு பதில் அளித்த தமிழ் தேசியக் மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தற்போதைய ஒற்றையாட்சி அரசியலமைப்பை தாங்கள் ஏற்றுக் கொண்டு, நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் மேற்கொள்ளவுள்ளதாகவும் பின்னர், தங்களுடைய அரசியல் எதிர்பார்ப்பை நோக்கி செயற்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் பிழையை திருத்திய...

தமிழ் பிழையை திருத்தி, அமைச்சர் மொழி உரிமைக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளார்.

இதுவரை எந்தவொரு அமைச்சரதும் பார்வைக்கு கிட்டாத இந்த தமிழ் பிழையானது, இளைஞர்களை வலுப்படுத்த புதிதாக பதவியேற்ற இளம் அமைச்சர் நாமல் ராஜபக்சவின் கண்களுக்கு புலப்பட்டுள்ளது.

மும்மொழி கொள்கை இலங்கையில் அமுலில் உள்ளது என்பதனை உறுதிபடுத்தும் வகையில் அமைச்சர் நாமல் ராஜபக்சவின் இந்த செயற்பாடு அமைந்துள்ளது.

இந்நிலையில் இவ்வாறான பிழைகள் குறித்து எதிர்வரும் காலத்தில் அமைச்சரினால் கூடுதல் கவனம் எடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சதி முயற்சி அல்ல;...

நியமிக்கப்பட்டுள்ளது என மின்வலு அமைச்சர் டளஸ் அழகபெரும தெரிவித்தார். விசாரணைகளை மேற்கொள்ள விசேட குழு ஒன்றை நியமித்துள்ளதாக மின்வலு எரிசக்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மின் துண்டிப்பினால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பில் தாம் பெரும் கவலை அடைவதாகவும் குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

நேற்றைய தினம் மின் துண்டிப்பு இடம்பெற்ற நிலையில் உடனடியாகவே நாம் அது தொடர்பில்கவனம் செலுத்தியதுடன் அமைச்சின் செயலாளருடன் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினேன். மின் விநியோகத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருதற்காக மின்சார சபை ஊழியர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை, மின் துண்டிப்புக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக விசேட குழு ஒன்றை உடனடியாக நியமிக்குமாறு நான் எனது அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை பிறப்பித்தேன்.

இக் குழு இன்று காலை 8 மணியளவில் கூடவுள்ளதுடன் ஒரு வார காலத்திற்குள் மின் துண்டிப்புக்கான காரணத்தை ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளேன் என்றார்.

## நாடு முழுவதும் மின்...

ஏற்பட்டதாக மின்சார சபை தெரிவித்தது.

மின் துண்டிப்பு காரணமாக நேற்று பல்வேறு துறைகளிலும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்ட நிலையில் எரிபொருள் விநியோகம், நீர் விநியோகம் ஆகியன தடைப்பட்டதுடன் பொதுமக்கள் பல்வேறு பாதிப்புகளை எதிர்கொள்ள நேர்ந்தது.

தொழில் நுட்பத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் வழக்கு விசாரணைகளும் நேற்று மதியம் முதல் தடைப்பட்டதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடு முழுவதிலும் மின்சார விநியோகம் தடைப்பட்ட நிலையில் வீதி சமிக்ஞை விளக்குகள் செயலிழந்ததால் பிரதான வீதிகள் பலவற்றில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

குறிப்பாக கொழும்பின் பிரதான வீதிகளில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

ரயில் பாதைகளிலும் ரயில் கடவைகளிலும் சமிக்கை விளக்குகள் செயல்படாததால் ரயில் சேவைகளில் தாமதம் ஏற்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

பெரும்பாலான அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் நேற்று 2 மணியளவில் ஊழியர்கள் வீடுகளுக்கு திரும்ப அனுமதி வழங்கப்பட்டது. அதே வேளை, நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் நேற்று மின் துண்டிப்பு இடம்பெற்ற நிலையில் நீர் விநியோக நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்தது.

மின்சார விநியோகம் வழமைக்குத் திரும்பிய சில மணித்தியாலங்களில் நீர் விநியோகத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வர முடியும் என அந்த சபை தெரிவித்தது.

அதேவேளை நேற்று பிற்பகல் 4 .30 மணியளவில் தெற்கின் சில பிரதேசங்களுக்கும் கொத்மலை பிரதேசத்திற்கும் மின் விநியோக செயற்பாடுகளை இயல்புநிலைக்கு கொண்டுவர முடிந்துள்ளதாக மின்சார சபை தெரிவித்தது.

## சகோதரத்துவம் மூலமாக...

முயற்சிக்கின்றனர். எனினும் அவைகள் அனைத்தும் மக்களால் நிராகரிக்கப்படுகின்ன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் முழு அரசாங்கமும் எந்தவிதமான பாகுபாடுகளும் இன்றி அனைத்து சமூக மக்களும் கண்ணியத்துடன் வாழக்கூடிய சூழலை உருவாக்க முயற்சித்து வருகின்றனர்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எமது ஆட்சியில்...

புதிய அமைச்சரவையில் இடம் கிடைத்துள்ளது என்பதே எதிரணியினரின் இனவாதப் பரப்புரையின் தலைப்பாக உள்ளது. சிறுபான்மை இன மக்களை இந்த அரசு புறக்கணித்துள்ளது என்ற விசமத்தனமான சிந்தனையை தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் எதிரணியினர் விதைக்க முற்படுகின்றனர் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

## 19 க்கு முழுமையாக...

இலங்கை அரசாங்கத்தையும் ஆட்சியிலிருக்கும் அரசையும் சாய்த்து வீழ்த்தி விடும் நிலையை ஏற்படுத்தியது.

19ஆவது திருத்தத்தை உருவாக்கியமை தவறல்ல. ஆனால், அதனை உருவாக்கிய விதம், உருவாக்கப்பட்ட வேகம்தான் இன்று நாட்டில் பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது என்றார்.

## UNPயில் போட்டியிட்ட...

இந்த முடிவை எடுத்துள்ளனர் என கூறப்படுகிறது.

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி முழு நாட்டிலும் 2 லட்சத்து 49 ஆயிரத்து 439 வாக்குகளை பெற்று ஐந்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டு வரலாற்றில் படுதோல்வியை சந்தித்தது என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர்கள், இந்த தோல்விக்கான நேரடி காரணம் ரணில் விக்ரமசிங்கவின் தலைமை மற்றும் அவரது தன்னிச்சையான தீர்மானங்கள் எனவும் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க தலைமையில் தேர்தலை சந்தித்தால், தற்போது கிடைத்துள்ள இரண்டரை லட்சம் வாக்குகள், ஒன்றரை லட்சமாக குறைந்து மிக மோசமான நிலைமையை எதிர்நோக்க தாம் தயாரில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## பாராளுமன்ற ஆரம்பவிழா...

ஜனாதிபதி அறிவித்துள்ளார். வழமையாகப் புதிதாக பாராளுமன்றத்திற்கு வருகை தரும் ஜனாதிபதிக்கு இராணுவ மற்றும் குதிரை அணிவகுப்பு உட்படப் பிரமாண்ட வரவேற்பு வழங்கப்படும்.

ஆனால் இம்முறை 20 ஆம் திகதி புதிய பாராளுமன்ற கூட்டத் தொடரின் ஆரம்ப விழா மிகவும் எளிமையான முறையில் நடத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். இராணுவ அணிவகுப்பு , பாதுகாப்பு அணிவகுப்பு மற்றும் பாராளுமன்ற வீதியின் இருபுறமும் இராணுவ அணி வகுப்பு செலுத்துமாறு பாராளுமன்ற பொதுச் செயலாளருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இந்த முறை குதிரை அணிவகுப்புகள் நிறுத்தப்பட்டுள்ளன.

## கிழக்கு மக்களுக்காக...

கீழ்போட்டியிட்டு வெற்றிபெற்ற ஒரேயொரு வேட்பாளர் நான்மாத்திரமே. இது சாதாரண வெற்றி அல்ல. இவ்வெற்றியின் ஊடாக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு மக்கள் பாடம் புகட்டியுள்ளார்கள்.

மாற்றுவழி அரசியல்பாதையூடாகத்தான் கிழக்கு மக்களின் அரசியல் இருப்பை பாதுகாக்கமுடியும் என்ற தூரநோக்கில் வெற்றிபெற்றுள்ளோம்.கிழக்கில்உரிமையுடன்கூடிய அபிவிருத்தியை பெற்றுக்கொடுக்க அமைச்சர்கள் இல்லை. இதற்கான பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனக்கு மட்டக்களப்பு மக்கள் தந்த ஆதரவுக்கு விசுவாசமாக சேவைசெய்யவுள்ளேன்.

முக்கியமாக இரு பொறுப்புக்கள் எனது தலையில் சுமத்தப்பட்டுள்ளன. தபால்துறை, ஊடகம். தபால்துறையைப்பொறுத்தவரை நாட்டில் 26ஆயிரம் ஊழியர்கள் வேலைசெய்கின்றார்கள். 3610 உப தபாலகங்களும், 650 பிரதான தபாலகங்களும் உள்ளதுடன் தபால் ஊழியர்களிடையே பெரும் தொழிற்சங்கமும் உள்ளது. இவர்களின் தேவைகளை நிறைவேற்ற பாடுபடுவேன்.

ஊடகத்துறையைச்சேர்ந்தவர்களும் அர்ப்பணிப்புடன் சேவைசெய்கின்றனர். ஊடகவியலாளர்களை மாவட்ட, மாகாண தேசியரீதியாக சந்தித்து கலந்துரையாடி அவர்களின் தேவைகளை நிறைவேற்றவுள்ளேன் என்றார்.

# பெலாரஸில் ஆர்ப்பாட்டங்களுக்குப் பின் புதிய வேலை நிறுத்தங்களுக்கு அழைப்பு

பெலாரஸின் நீண்ட கால ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகசென்கோவை பதவி விலகக் கோரி பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற நிலையில் அங்கு புதிய வேலை நிறுத்தங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் 9 ஆம் திகதி லுகசென்கோ அமோக வெற்றியீட்டிய ஜனாதிபதி தேர்தலில் மோசடி இடம்பெற்றதாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் வன்முறையை கட்டவிழ்த்துவிட்டது ஆத்திரத்தை அதிகரித்துள்ளது. இந்நிலையிலேயே எதிர்க்கட்சி தலைவர்கள் வேலை நிறுத்தங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

எனினும் ஜனாதிபதி தமது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார். நாட்டையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க தமது ஆதரவாளர்களுக்கு அவர் கடந்த ஞாயிறன்று அழைப்பு விடுத்திருந்தார்.

எனினும் பெரும் எண்ணிக்கையான அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளில் ஒன்றுதிரண்டதாக அந்நாட்டின் சுதந்திர செய்தித் தளம் ஒன்று குறிப்பிட்டுள்ளது. பெலாரஸ் வரலாற்றில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டம் அமைதியானதாக இருந்தது என்றும் அந்த செய்தித் தளம் குறிப்பிட்டுள்ளது.



1994 ஆம் ஆண்டு தொடக்கம் பெலாரஸில் ஆட்சியில் இருக்கும் லுகசென்கோ நடந்து முடிந்த தேர்தலில் 80 வீத வாக்குளை வென்றதாக மத்திய தேர்தல் ஆணையம் அறிவித்தது கோபத்தைத் தூண்டியுள்ளது. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பிரதான எதிர்க்கட்சி வேட்பாளர் சுவெட்லானா டிக்ஹனொஸ்கயா 10.12 வீத வாக்குகளையே வென்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்தத் தேர்தல் முடிவை நிராகரித்த சுவெட்லானா பாதுகாப்புக் காரணத்திற்காக லிதுவேனியா நாட்டில் அடைக்கலம் பெற்றுள்ளார்.

இந்நிலையில் நேற்று வீடியோ ஒன்றை வெளியிட்ட அவர், நாட்டில் அமைதி மற்றும் வழமை நிலையை ஏற்படுத்தவும், அரசியல் கைதிகளை விடுவிக்க மற்றும் புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்கும் ஒரு தேசிய தலைவராக இருக்க தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

இந்நிலையில் சுமார் 6,700 போராட்டக்காரர்கள் வரை கைது செய்யப்பட்டிருப்பதோடு பாதுகாப்பு படையினரின் துன்புறுத்தல்கள் பற்றி பலரும் முறையிட்டுள்ளனர்.

# காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்



காசாவில் இருந்து இஸ்ரேலை நோக்கி தீயூட்டும் பலூன்கள் மற்றும் எல்லை பகுதியில் இடம்பெறும் மோதல்களுக்கு பதில் நடவடிக்கையாக ஹமாஸ் இலக்குகள் மீது இஸ்ரேல் பீரங்கிகள் நேற்றும் தாக்குதல் நடத்தியுள்ளன.

“காசா பகுதியில் ஹமாஸ் தீவிரவாத அமைப்புக்குச் சொந்தமாக இராணுவ கண்காணிப்புச் சாவடிகள் மீது பீரங்கிகள் இலக்குவைத்தன” என்று இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுபுறம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை காசா பகுதியை ஒட்டிய எல்லை வேலியில் பலரும் கலவரங்களில் ஈடுபட்டதாகவும் இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலின் இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து உடன் எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

இஸ்ரேல் மற்றும் காசாவுக்கு இடையில் கடந்த ஒரு வாரமாக நீடித்து வரும் பதற்ற சூழலில் காசா மீது நாளாந்தம் இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் காசாவில் இருந்து பறக்கவிடப்படும் தீயை பரவச் செய்யும் பலூன்கள் காரணமாக 28 இடங்களில் தீச்சம்பவங்கள் இடம்பெற்றருப்பதாக இஸ்ரேல் தீயணைப்பு சேவை கடந்த ஞாயிறன்று குறிப்பிட்டிருந்தது.

# பஹ்ரைனில் கடவுள் சிலைகளை உடைத்த பெண் மீது குற்றச்சாட்டு

பஹ்ரைனில் ஹிந்து கடவுள் சிலைகளை உடைத்த 54 வயது பெண் ஒருவருக்கு மத அடையாளங்களை அவமதித்த மற்றும் வேண்டுமென்று சேதப்படுத்தியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

தலைநகர் மனாமாவின் ஜுபைர் பகுதியில் உள்ள கடை ஒன்றில் கடவுள் சிலைகளை இந்தப் பெண் உடைக்கும் வீடியோ ஒன்று சமூக ஊடகங்களில் பரவியது. இதனை அடுத்து அவருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டதாக பொலிஸார் கடந்த ஞாயிறன்று குறிப்பிட்டனர்.

சிலைகளை உடைத்ததை அந்தப் பெண் ஒப்புக்கொண்ட நிலையில் அந்தப் பெண் மீது பல குற்றவியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு முகம்கொடுக்கவுள்ளார்.

அந்த பெண்ணின் நடத்தையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பஹ்ரைன் மன்னரின் ஆலோசகரும் முன்னாள் வெளியுறவு அமைச்சருமான செய்க் காலித் அல் கலீபா குறிப்பிட்டுள்ளார். முஸ்லிம் நாடான பஹ்ரைனில் பல்வேறு மதங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான, பெரும்பாலும் ஆசிய தொழிலாளர்கள் வாழ்கின்றனர்.



# சோமாலிய ஹோட்டலில் தாக்குதல்: 17 பேர் பலி

சோமாலிய தலைநகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் அல் சபாப் போராட்டக் குழு நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டு தாக்குதல்களில் குறைந்தது 17 பேர் கொல்லப்பட்டுள்ளது. மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்றுகையிடப்பட்ட இந்த ஹோட்டல், அல் சபாப் குழுவினர் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு இடையே மூன்று மணி நேரம் இடம்பெற்ற துப்பாக்கசி சூட்டுக்கு பின்னர் விடுவிக்கப்பட்டது. தற்கொலை கார் குண்டு தாக்குதலை அடுத்தே இந்த முற்றுகை இடம்பெற்றதாக அரச பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர்களில் இரண்டு அரச ஊழியர்கள், மூன்று ஹோட்டல் காவலர்கள், நான்கு சிவிலியன்கள் மற்றும் மூன்று அடையாளம் காணப்படாதவர்கள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நான்கு தாக்குதல்தாரிகளும் கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹோட்டல் வாயிலில் சக்தி வாய்ந்த குண்டுத் தாக்குதல் ஒன்றுக்கு பின் ஹோட்டலுக்குள் ஊடுருவிய தாக்குதல்தாரிகள் அங்கு சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்களை பிணைக்கைதிகளாக பிடித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் அண்மையில் கட்டப்பட்ட இந்த ஹோட்டல் அதிகாரிகளிடையே அதிக பிரபலமானது.



# இஸ்ரேல், ஐ.அ. இராச்சியத்திற்கு இடையே தொலைபேசி தொடர்பு



இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியவற்றின் வெளியுறவு அமைச்சர்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடித் தொலைபேசித் தொடர்பை ஆரம்பித்துள்ளனர்.

இரு நாட்டு உறவைச் சுமுகமாக்கச் செய்துகொண்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நேரடித் தொடர்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வெளியுறவு அமைச்சர்கள் தொலைபேசி உரையாடலின் போது வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

அத்தோடு இருவரும் கூடிய விரைவில் சந்திக்க முடிவு செய்துள்ளதாகவும் ஐக்கிய அரபுச் இராச்சியத்தின் வெளியுறவு அமைச்சு தெரிவித்தது.

இஸ்ரேலுக்கும், ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இடையிலான அமைதி ஒப்பந்தத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

அது குறித்து மத்திய கிழக்கு வட்டாரத்தில் சினமும் திகைப்பும் எழுந்துள்ளன.

துருக்கி, அபு தாபியுடன் தனது இராஜதந்திர உறவு நிறுத்தி வைக்கப்படலாம் அல்லது ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள தனது தூதரகம் மூடப்படலாம் என்று தெரிவித்தது.

ஈரான் அமைதி ஒப்பந்தத்தைச் சட்டவிரோதமானது என வர்ணித்துள்ளது.

# கொவிட்-19: ஆஸியில் ஒரே நாளில் 25 பேர் பலி

அவுஸ்திரேலியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வைரஸ் தொற்றால் 25 பேர் உயிரிழந்தது ஒரே நாளில் பதிவான மிக அதிக எண்ணிக்கையாக உள்ளது.

இருப்பினும் விக்டோரியா மாநிலத்தில் புதிதாக வைரஸ் தொற்று உறுதியாவோர் எண்ணிக்கை நிலைப்பட்டிருப்பதாக அம்மாநில அரசாங்கம் கூறுகிறது.

கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 282 பேருக்கு நோய்த்தொற்று அடையாளம் காணப்பட்டதாக அதிகாரிகள் கூறினர். ஒப்புநோக்க முந்திய தினம், அந்த எண்ணிக்கை 279 ஆக இருந்தது.

இம்மாத ஆரம்பத்தில் விக்டோரியா மாநிலத்தில் தினசரி 700 பேர் வரை பாதிக்கப்பட்டனர். கடுமையான முடக்க நடவடிக்கைகள் பலன் தருவதாகச் சுகாதார அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.



# தாய்லாந்துத் தலைநகரில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

தாய்லாந்துத் தலைநகர் பங்கொக்கில் நடைபெற்ற அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் 10,000க்கும் அதிகமானோர் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டின் ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னர் நடந்த மிகப் பெரிய ஆர்ப்பாட்டமாக அது கருதப்படுகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்களில் பலர் பிரதமர் ப்ரயுத் சான் ஒசாவையும், இராணுவத்துடன் கூட்டாக பணிபுரியும் அவரது நிர்வாகத்தையும் குறைகூறும் பதாகைகளைப் பிடித்திருந்தனர்.

வேறு சிலர் அமைதியைக் குறிக்கும் வண்ணம் பறவைகளின் உருவங்களைத் தாங்கிய பதாகைகளை வைத்திருந்தனர். தாய்லந்து மாணவர்களின் தலைமையில் கடந்த மாதத்திலிருந்து நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. 2017 ஆம் ஆண்டு இராணுவம் வரைந்த அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தி எழுத அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# நியூஸிலாந்து பொதுத்தேர்தல் நான்கு வாரங்கள் ஒத்திவைப்பு



நியூஸிலாந்துப் பிரதமர் ஜசிண்டா ஆர்டன் நாட்டின் பொதுத்தேர்தலை 4 வாரங்களுக்குத் ஒத்திவைத்துள்ளார். நியூஸிலாந்தில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் தலைதூக்கியது அதற்குக் காரணமாகும்.

முன்னதாக அடுத்த மாதம் 19ஆம் திகதி அங்கு பொதுத் தேர்தல் நடைபெறுவதாக இருந்தது. பிரதமர் ஆர்டன், ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு அதனைத் ஒத்திவைத்துள்ளார்.

தேர்தலை ஒத்திவைப்பதன் மூலம் அனைத்துக் கட்சிகளுக்கும் பிரசாரம் செய்யப் போதிய அவகாசம் கிடைக்கும் என்று அவர் கூறினார். பொதுத் தேர்தலை நடத்துவது குறித்து முடிவெடுக்கத் தேர்தல் ஆணையத்திற்கும் போதிய அவகாசம் கிட்டும் என்றார்.

ஒக்லந்து நகரில் கடந்த வாரம் வைரஸ் தொற்று மீண்டும் அடையாளம் காணப்பட்டது. அதனால் அந்நகரம் முடக்கப்பட்டுள்ளது. நேற்று புதிதாக ஒன்பது வைரஸ் தொற்று சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்மூலம் ஒக்லாந்து நகர கொத்தணியுடன் தொடர்புபட்ட நோய்த் தொற்று சம்பவங்களின் எண்ணிக்கை 58 ஆக உயர்ந்துள்ளது.

அதற்கு முன்னர் நியூஸிலாந்தில் 102 நாட்களாய் யாருக்கும் நோய்த் தொற்று உறுதிசெய்யப்படவில்லை.





வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தேர் திருவிழா நேற்று விமரிசையாக நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். படப்பிடிப்பு: ஐ.சிவசாந்தன்

# நுண்கடன் திட்டத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கப்படும்



## இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க

**நமது நிருபர்**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நுண்கடன் திட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என சமுர்த்தி, நுண்நிதி மற்றும் சுய கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அப்பகுதி மக்கள் பொருளாதார ரீதியில் சுயமாக முன்னேற்றமடைவதற்கு சுய கைத்தொழில் முறைமைகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். வடக்கு, கிழக்கில் நுண்கடன் திட்டங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கடந்த அரசாங்கத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படவில்லை என்பதனாலேயே தமிழ், முஸ்லிம் மக்கள் பொதுஜன பெரமுனவிற்கு இம்முறை ஆதரவு வழங்கி தமிழ் அரசியல் கட்சிகளை புறக்கணித்துள்ளார்கள்.

இம் மாகாணங்களில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் நுண்கடன் திட்டம் பெரிதும் பாதிப்பினை ஏற்டுத்தியுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தில் இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

நுண்கடன் திட்டங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மத்திய வங்கி ஊடாக நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் பொருளாதார ரீதியில் சுயமாக முன்னேற்றுவதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இதன்மூலம் சுயகைத்தொழில் துறையை அவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

வவுனியாவில்

# தனிமைப்படுத்தப்பட்ட 120 பேர் நேற்று விடுவிப்பு

**வவுனியா விசேட நிருபர், பா.சதீஸ்**



கட்டார் மற்றும் டுபாயிலிருந்து இருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா பெரிய கட்டு தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 120 பேர் நேற்று வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கொவிட்19 நோய் தாக்கம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்துவரும் செயற்பாடுகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அந்தவகையில் கட்டார் மற்றும் டுபாயிலிருந்து அழைத்துவரப்பட்ட பயணிகள் பெரியகட்டு தனிமைப்படுத்தல் முகாமிற்கு அழைத்துவரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த நிலையில், 120 பேர் அவர்களது சொந்த இடங்களான திருகோணமலை, யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, கேகாலை, கண்டி, பதுளை போன்ற பகுதிகளிற்கு பேருந்துகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

குறித்த பயணிகளிற்கான பி.சி.ஆர் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், கொரோனா தொற்று பீடிக்கவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர்கள் தமது சொந்த இடங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கோரி கவனயீர்ப்பு போராட்டம்

**மாங்குளம் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நிலவும் வைத்தியப் பற்றாக்குறை உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரி மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

குறித்த கவனயீர்ப்பு போராட்டமானது முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை முன்பாக இடம்பெறுகின்றது. தொடர்ச்சியாக தீர்வு கிடைக்கும் வரை சுழற்சி முறையில் குறித்த போராட்டம் இடம்பெறவுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டனர்.

பல்வேறு வகையிலும் பின்தங்கி காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்ட வைத்தியசாலை சீராக இயங்காததால் மக்கள் தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்படாததன் பின்னணியில் குறித்த போராட்டமானது இடம்பெற்றது.



போராட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுள்ளனர். குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள செல்வம் அடைக்கலநாதன், வினோ.நோகராதலிங்கம் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான கந்தையா சிவநேசன் துரைராசா ரவிகரன் ஆண்டிஜயா புவனேஸ்வரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மன்னாரில் கலப்படம் செய்யப்பட்ட மஞ்சள் கிலோ 5000 ரூபாய்க்கு விற்பனை

**மன்னார் குறூப் நிருபர்**



மன்னார் பஸார் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் மஞ்சள் தூள் பதுக்கி வைக்கப்பட்டு அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக நூகர்வோர் தெரிவித்துள்ளனர்.

100 கிராம் மஞ்சள் தூள் 350 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு கிலோ மஞ்சள் தூள் 3500 ரூபாய் முதல் 5 ஆயிரம் ரூபாய் வரை பதுக்கி வைத்து விற்பனை செய்யப்பட்டு வருவதாக வாடிக்கையாளர்கள் குறிப்பிட்டனர்.

நாட்டில் மஞ்சள் தூளிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் பாரிய அளவில் இலாபத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் அதிகரித்த விலைக்கு மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் பதுக்கி வைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

இதேவேளை விற்பனை செய்யப்படும் மஞ்சளில் பெரும்பாலானவற்றில் கோதுமை மா மற்றும் அரிசி மா கலந்துள்ளமை தெரியவந்துள்ளது. நுகர்வோர் விவகார அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் இது கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஞ்சளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மாவுடன் வர்ணங்களை கலந்து விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அதற்கமைய, சந்தைகளில் விற்பனை செய்யப்படும் மஞ்சளின் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு, அரச இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டிருந்தது.

அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையின் அடிப்படையில் மஞ்சள் தூளின் அரைவாசியில் கோதுமை மா மற்றும் அரிசி மா கலந்துள்ளமை தெரியவந்துள்ளது.

# 'இலங்கைத் தமிழும் தமிழரும்' ஆய்வரங்கில் இன்று

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும் இணைந்து சூம் (Zoom) செயலி வாயிலாக 20 நாட்கள் இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன. இதன் பதினேழாவது நாளாகிய இன்று மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை தென் கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ம.அப்துல்லா ரமீஸ் இலங்கைத் தமிழ் இதழ்கள் என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

Zoom meeting ID : 477 159 8996

# புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டிய வரலாற்று பொறுப்பு ஜனாதிபதியிடம் உள்ளது

## சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

இனப் பிரச்சினை தொடர்பில் சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வு ஒன்றினை உருவாக்குவதற்கு ஓர் வரலாற்றுச் சந்தர்ப்பம், ஜனாதிபதியின் முன்பாகவும் அவரின் அரசாங்கத்தின் முன்பாகவும் எழுந்துள்ளதாக தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் தேசியக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில்,

பாராளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெற்று புதிய அரசாங்கம் ஒன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமைக்கப்பட்டிருக்கும் புதிய அரசியல் சூழ்நிலையில் எதிர்காலத்தை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பிலும், நாம் அனைவரும் எங்கள் நெஞ்சங்களில் தாங்கி நிற்கும் தமிழினத்தின் விடுதலையை வென்றெடுப்பதற்கு ஏதுவாக எத்தகைய நடவடிக்கைகளை குறுகிய மற்றும் நீண்ட தூர அளவில் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும் என்பது தொடர்பிலும், கருத்துக்களைப் பரிமாறி, செயற்றிட்டம் ஒன்றை தீட்ட வேண்டிய கட்டத்தில் நாம் அனைவரும் நின்று கொண்டிருக்கிறோம். எமது தமிழ் தேசியக் கட்சியும் மற்றும் நான்கு தமிழ் அரசியல் கட்சிகளும், கரங்கோர்த்து அமைத்த தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, நாம் எதிர்பார்த்த வெற்றியை பாராளுமன்ற தேர்தலில் பெற்றுக் கொள்ளவில்லை என்றாலும் கூட, பலமுனை மோதல் தீவிரமாக நிலவிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் நாம் ஓர் ஆசனத்தை வென்றெடுத்திருப்பது, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் உள்ள அனைவரினதும் தீவிரமான செயல்பாடுகளுக்கு கிடைத்த ஆகக் குறைந்த அறுவடை என்பதோடு ஆறுதலளிக்கும் விடயமாகும் என்றார்.

50 ஆயிரம் பட்டதாரி நியமனம்:

# வவுனியாவில் 256 பேரது விண்ணப்பம் நிராகரிப்பு

**கோவில்குளம் குறூப் நிருபர்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று ஓரிரு வாரங்களில் 50,000 பட்டதாரிகளுக்கும் குறைந்த வருமானம் கொண்ட ஒரு இலட்சம் பேருக்கும் தொழில் வாய்ப்பினை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தார்.

இத் திட்டம் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இடைநிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. நிறுத்தி வைக்கபட்டிருந்த குறித்த தொழில் வாய்ப்புத் திட்டத்தின் பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் நேற்று வெளியாகியுள்ளன.

இதன் பிரகாரம் வவுனியா மாவட்டத்தில் 383 பட்டதாரிகள் தொழில் வாய்ப்புக்கு தெரிவாகியுள்ளதுடன் 256 பட்டதாரிகளின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வவுனியா வடக்கில் 32 பட்டதாரிகளும், வவுனியா தெற்கில் 20 பட்டதாரிகளும், வெங்கள செட்டிக்குளம் பிரிவில் 28 பட்டதாரிகளும், வவுனியா நகரில் 303 பட்டதாரிகளும் மொத்தமாக 383 பட்டதாரிகள் தெரிவாகியுள்ளனர். மேலும் 19பட்டதாரிகளின் விண்ணப்பம் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நியமனம் பெறுபவர்கள் எதிர்வரும் செப்டெம்பர் 02 ஆம் திகதி அருகிலுள்ள பிரதேச செயலகத்திற்கு சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

# பொலிஸார் மீது இளைஞர் குழு தாக்குதல்

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் ஊரெழு பகுதியில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரை கைது செய்ய சென்ற கோப்பாய் பொலிசார் மீது இளைஞர் கும்பல் ஒன்று தாக்குதலை மேற்கொண்டுள்ளது. இந்த சம்பவத்தில் இரண்டு பொலிசார் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஊரெழு போயிட்டி பகுதியில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவரை கைது செய்வதற்காக மோட்டார் சைக்கிள் ஒன்றில் இரண்டு பொலிசார் சென்றுள்ளனர்.

அப்பகுதிக்குச் சென்று குறித்த நபரை தேடி திரிந்த போது அங்கு இரு தரப்புக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. குறித்த முரண்பாடு தொடர்பில் விசாரிக்க சென்ற பொலிசார் மீது அங்கு நின்ற இளைஞர் குழு கடுமையான தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் இரு பொலிசார் காயமடைந்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூர் ஆலய தீர்த்தோற்சவம் இன்று

நேரடி ஒளிபரப்பு

**ஐ.சிவசாந்தன்**

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவ பெருவிழாவில் Covid 19 நோய் பரவலை தடுக்கும் உபாயமாக அதிகளவு பக்தர்கள் ஆலயத்திற்கு வருவதனை தவிர்த்து கொள்வதற்காக சண்முக தீர்த்த கேணியில் நடைபெறும் தீர்த்தோற்சவத்தினையும் மாலை இடம்பெறும் கொடியிறக்க நிகழ்வினையும் தூர தரிசனம் செய்யப்படவுள்ளதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானத்தினால் இன்று தீர்த்த நாளில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளை இலவசமாக ஆலய உத்தியோகபூர்வ "YouTube" தளத்தில் ஒளிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனை ஊடகங்கள் மற்றும் சமூகவலைத்தளங்களும் உபயோகித்து கொள்ள முடியும்.

Youtupe தள முகவரி

https://www.youtube.com/channel/UCmKSl9nBdK3SRzJEpERINQ/featured

ஒளிபரப்பப்படும் நேரம்

★தீர்த்தோற்சவம் 18/08/2020

இலங்கை நேரம் காலை 5.30 8.30 வரை

★கொடியிறக்கம் 18/08/2020

இலங்கை நேரம் காலை 5.00 6.00 வரை

# பல்நோக்கு நகரத்தை உருவாக்க திட்டம்

**கோப்பாய் நிருபர்**

2050 ஆம் ஆண்டுக்குள் யாழ். மாவட்டத்தை மையமாகக் கொண்டு 4 நகரங்கள், ஒரு பல்நோக்கு நகரத்தை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான அடையாளப்படுத்தல் விரைவில் ஆரம்பமாகவுள்ளது. இந்த திட்டம் தொடர்பாக கொழும்பு நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கையை முன்னெடுத்து வருகிறது. அரசின் தேசிய கொள்கைப்படி பௌதிக திட்டமிடலின் நோக்கெல்லையாக இத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் விரைவில் அரச நிறுவனங்களுடன் இணைந்த வகையில் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக வடமாகாண நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# புலத்சிங்கள, கல்லுமலைத் தோட்டத்தில் இருபது வருட குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு





**களுத்துறை சுழற்சி நிருபர்**

களுத்துறை மாவட்டம், புலத்சிங்கள, கல்லுமலைத் தோட்டத்தில் அமைந்துள்ள இருபது காம்பரா தோட்ட குடியிருப்புகளுக்கு கடந்த இருபது வருடங்களாக நிலவிவந்த குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

தோட்ட நலன் விரும்பிகளின் வேண்டுகோள்களுக்கிணங்க கடந்த பொது தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர் சன் பிரபாவின் நிதி உதவியுடன் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் சுமார் 40,000 ரூபாய் செலவில் 1500 மீற்றர் தூரத்தில் மலைப்பகுதியில் இருந்து நீர்க் குழாய்கள் மூலம் குடிநீர் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் மேற்படி தோட்ட குடியிருப்புகளில் வசிக்கும் 13 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் நன்மை அடைந்துள்ளனர். கடந்த இருபது வருடகாலமாக பல்வேறு இன்னல்களுக்கும் மத்தியில் நீண்ட தூரம் சென்று குடிநீரை பெற்றுக் கொண்ட அதேவேளை இளம் பெண்கள் நீர் நிலைகளுக்கு குளிக்க செல்லும் போது சில விசமிகளின் அநாகரிகமான சேட்டைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகி வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.கா. உபதலைவர் கணபதி கனகராஜ் ஆகியோர் நேற்று நோர்வூட்டில் அமைந்துள்ள அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் விளையாட்டரங்கை மேலும் சீராக்கும் பணிக்காக பார்வையிடுவதை படங்களில் காணலாம்.

# நுவரெலியா மாவட்டத்தில் காய்கறி செய்கை பாதிப்பு

**மாத்தளை சுழற்சி நிருபர்**

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த நாட்களில் பெய்த கன மழையினால் காய்கறி பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனால் பல விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரமும் இழக்கப்பட்டுள்ளது.

கடும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக காய்கறி பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில்,

கொரோனா தொற்று காரணமாக ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த காய்கறி செய்கை தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சந்தையின் தேவைக்கு குறைவான அளவில் காய்கறிகளை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமையால் காய்கறிகளின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் இதன்போது சுட்டிகாட்டினர்.

அதுமட்டுமின்றி உற்பத்தி செலவுகளை சரிசெய்ய வழி இல்லாமல் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாக தெரிவிக்கின்றனர்.

# தர்காநகர் அல் ஹம்ரா மகா வித்தியாலயத்துக்கு கணணி கூடம்

## சமூக சேவையாளர் பாஸி ஸுபைர் எற்பாடு



தர்காநகர் அல்ஹம்ரா மகாவித்தியாலத்துக்கு எழுத்தாளரும் கலைஞருமான பாஸி ஸுபைரின் பெரு முயற்சியினால் 18 இலட்சம் ரூபா செலவில் சகல வசதிகளையும் கொண்ட கணணி பயிற்சி கூடம் ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளது.

அதன் திறப்பு விழா மிக விரைவில் அதிபர் எப். பஸ்லியா தலைமையில் இடம்பெறவுள்ளது. தர்காநகர் பகுதியைச் சேர்ந்த வறிய மூவின மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அல்ஹம்ரா மகா வித்தியாலயத்தில் அண்மையில் எழுத்தாளரும் கலைஞருமான எம்.பாஸி ஸுபைரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட முன்னாள் டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் அஜித் பீ பெரேரா உரையாற்றும் போது, தர்கா நகர் அல்ஹம்ரா மகாவித்தியாலயத்துக்கு சகல வசதிகளையும் கொண்ட கணனி பயிற்சி கூடம் ஒன்றை தனது அமைச்சின் மூலம் அமைத்துத் தருவதாக கூறியிருந்தார். அதற்காக பாஸி ஸுபைரின் முயற்சியை பாராட்டியதோடு 25 வருட கால சமூகப் பணியையும் பாராட்டினார்.

# பதுளை பொலிஸ் நிலையத்தில் குற்றத்தடுப்பு செயற்பாட்டு பணியகம்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் 'சௌபாக்கியா' வேலைத்திட்டத்தின் கீழ் குற்றத்தடுப்பு செயற்பாட்டு பணியகமொன்று பதுளை பொலிஸ் நிலையத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பதுளை மாவட்டத்தின் ஒன்பது பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில், பொலிஸ் அதிபர் பிரதீப் வீரசேக்கர தலைமையிலான விசேட பயிற்சி பெற்ற 50 பொலிசாரை உள்ளடக்கிய வகையில், மேற்படி பணியகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. போதை வஸ்து பாவனை மற்றும் விற்பனை ஆகியவற்றை முற்றாக தடுப்பது, மோசடிகளைத் தடுப்பது போன்ற விசேட பொலிஸ் பிரிவுகளையும் பதுளை மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினையும் ஒன்றிணைத்து செயற்படும் வகையிலேயே மேற்படிப் பணியகம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு (EOI)

தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலை

MINISTRY OF EDUCATION

NSBM GREEN UNIVERSITY TOWN

### ஹோமாகம, பிட்டிபன NSBM பசுமைப் பல்கலைக்கழக நகருக்கான ஒரு அரச, தனியார் பங்குடைமையாக விடுமி வசதிகளுக்கான முதலீடு செய்தல் நிர்மாணித்தல் உடைமையாக்குதல் செயற்படுத்தல் மற்றும் மாற்றுதல்



1. [illegible]
2. [illegible]
3. NSBM [illegible]
4. NSBM [illegible]
5. [illegible]
6. [illegible] 500 [illegible]
7. [illegible]
8. [illegible]
9. [illegible]
10. [illegible] (REP) [illegible]
11. [illegible]
12. [illegible] 2020 [illegible] 19 [illegible] 31 [illegible] 5000 [illegible] 9.00 [illegible] 3.00 [illegible] 0115445036, 0716726012 [illegible] projects@nsbm.lk [illegible]
13. [illegible] NSBM [illegible] RFP [illegible]
14. [illegible] (EOI Proposals) [illegible] NSBM [illegible] 2020 [illegible] 3.00 [illegible]
15. [illegible] (EOI) [illegible]

தலைவர்
சபை நியமித்த பெறுகைக்குழு
தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலை
NSBM பசுமைப் பல்கலைக்கழக நகரம், மஹென்வத்த, பிட்டிபன, ஹோமாகம.

# அன்னை மரியாள் விண்ணக அரசி பெருவிழா



அன்னை மரியை விண்ணக அரசியாக கத்தோலிக்கத் திருச்சபை போற்றி வருகின்ற நிலையில் ஆகஸ்ட் 22ம் திகதி மரியன்னை விண்ணக அரசி பெருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது

விண்ணக அரசி என்ற பெயர் அன்னைக்கு 5ஆம் நூற்றாண்டின் எபேசு பொதுச் சங்கம் முதலாகவே கொடுக்கப்படடிருந்தமை குறிப்பிடத்தக்கது.

12ம் பத்தி நாதர் பாப்பரசரின் *Ad Caeli Reginam* என்ற சுற்று மடலின் படி மரியாளின் மகனாகிய இயேசு இஸ்ரயேலின் மன்னராக மட்டுமல்லாமல் அனைத்துலகத்திற்கும் அரசராயிருக்கிறார்.

இதனாலேயே அவர் “அவர் சிருஷ்டிகரின் தாயாகிய போது அவர் சர்வ சிருஷ்டிகளுக்குமே தாயாராகின்றார்” என்ற கூற்றை புனித தமாசீன் அருளப்பர் எதிரொலித்தார்.

இவ்வாறு அன்னையை விண்ணக அரசி என அழைப்பதற்கான வேத ஆதாரங்கள் பலவுண்டு. எனினும் சிறப்பாக 1 அரசர் ஆகமத்தில் சாலமொன் மன்னர் தம் தாயாகிய பாத்சிபாவை தம் வலப்புறம் அமரச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

மன்னரின் தாயார் ஒரு உயர்ந்த பெண்மணி என்று தாவீதரசரின் வழிமரபில் கருதப்பட்டது. வில்லியம் ஜி. மொஸ்ட் என்ற வேத அறிஞர் அது மரியாளுக்கும் பொருந்தும் என்கிறார்.

புதிய ஏற்பாடடில் கபிரியேல் வானதூதர் தாவீதின் அரியணையில் இயேசு அமர்வார் என்றும் அவர் யாக்கோபின் வீட்டாரை என்றென்றும் ஆட்சி செய்வார் என்றும் அவரது ஆட்சிக்கு முடிவு இராது என்றும் கூறுகிறார். (லூக் 1;22) மேலும் கத்தோலிக்கத் திருச்சபை மரியாளே திருவெளிப்பாட்டுப் புத்தகத்தில் காணப்படும் பெண் என வலியுறுத்துகின்றது. (தி.வெ. 12)

நான்காம் நூற்றாண்டிலேயே புனித எப்ரேம் மரியாளை அரசியாக விபரிக்கின்றார். பின்னர் ஒரிகன், புனித ஜெரோம், புனித பீட்டர் கிறிசோலோகஸ் ஆகயோர் இதனை எதிரொலித்தனர். பதினோராம் மற்றும் பதின்மூன்றாம் நூற்றாண்டு ஆலய பாடல்களில் மரியன்னையை அரசியாக சித்தரிக்கின்றனர். மரியாளின் பிரார்த்தனையில்,

***சம்மனசுகளின் இராக்கினியே,***
***பிதாப்பிதாக்களின் இராக்கினியே***
***தீர்க்கதரிசிகளின் இராக்கினியே,***
***அப்போஸ்தலர்களின் இராக்கினியே,***
***வேதசாட்சிகளின் இராக்கினியே,***
***ஸ்துதியர்களுடைய இராக்கினியே,***
***கன்னியரின் இராக்கினியே,***
***அனைத்துப் புனிதர்களின் இராக்கினியே***
***சென்மப் பாவமில்லாமல்***
***உற்பவமான இராக்கினியே,***

மோட்சத்துக்கு ஆரோகணமான இராக்கினியே, திருச்செபமாலையின் இராக்கினியே, சமாதானத்தின் இராக்கினியே என்று பல திருப்பெயர்களில் அவரை மகிமைப்படுத்துகின்றோம்.

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் மரியாளை ‘பிரபஞ்சத்தின் அரசி’ என அழைத்துள்ளது. “கிருபை தயாபரத்துக்கு மாதாவாயிருக்கிற இராக்கினியே” என்ற செபம் ஹெர்மன் ரெய்ச்சனோ (1013 20154 என்ற பிரான்சிஸ்கன் துறவியால் இயற்றப்பட்டு திருச்செபமாலையின் பின் கூறுகிற இறுதி செபமாக அமைந்துள்ளது.

மேலும் பாஸ்கா கால திரிகால செபமாக *Regina Caeli* அன்னை மரியாள் போற்றப்படுகின்றாள். செபமாலை மகிமை காரணிக்கங்களில் இறுதியாக மரியன்னை மோட்ச இராக்கினியாக முடிசூட்டப்படுகின்றார். அதேவேளை, பிரான்ஸ் மற்றும் போலந்து நாடுகளின் இராக்கினியாக அன்னை மரியை அந்நாடுகள் அங்கீகரித்துள்ளன.

மோட்ச இராக்கினியான மரியன்னையின் விழா 1954ஆம் ஆண்டு 12ம் பத்திநாதர் பாப்பரசரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அது மே 31ம் திகதி எனக் கூறப்பட்டதாயினும் பின்னர் அது ஆகஸ்ட் 22ஆம் திகதியாக மாற்றப்பட்டது.

அன்றைய தினத்தில் பரிசுத்த பாப்பரசர் மேரி மேஜர் ஆலயத்தில் உள்ள மரியன்னையின் சுருபத்திற்கு பவனியாக வந்து மகுடம் சூட்டுவார். அதற்கிணங்க இரண்டாம் வத்திக்கான் திருச் சங்கத்தில் உருவாக்கப்பட்ட திருச்சபை யாப்பின்படி அன்னை மரியாள் அனைத்துலக அரசியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

கொழும்பு 13 புதுச் செட்டித்தெருவில் உள்ள வியாகுல மாதா ஆலயத்தில் இவ்விழா பன்னெடுங்காலமாக கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வந்தது. இவ்வாலயத்தினை பராமரித்த கொழும்புச் செட்டி சமூகத்தினர் “வியாகுல வெள்ளி’ என்று அழைக்கப்படுகின்ற வியாகுல மாதா திருநாள் தவக்காலத்தில் வருவதால் அதனை விமரிசையாகக் கொண்டாட முடியாத காரணத்தால் விண்ணக அரசி பெருவிழாவை ஆகஸ்ட் 22ல் கொண்டாடுகின்றனர்.

(ஸ)

## கடவுளின் பிரசன்னத்தில் நம்பிக்கை வைத்து அன்னை மரியாளைப் பின்பற்றி வாழ்வோம்

### திருத்தந்தை பிரான்சிஸ்

ஆண்டவர் நம் வாழ்வில் ஆற்றும் மாபெரும் செயல்களை ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒருமுறையாவது நினைத்து அவரைப் போற்றிப் புகழ்வோம் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

அன்னை மரியாவின் விண்ணேற்புப் பெருவிழாவாகிய கடந்த சனிக்கிழமை வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் செப உரையாற்றிய திருத்தந்தை, "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது" (லூக்.1:47) என்ற அன்னை மரியாளின் புகழ் பாடலை மையப்படுத்தி கருத்துக்களை வழங்கினார்.



"மனிதரின் ஒரு சிறிய காலடி மனித சமுதாயத்திற்கு மிகப்பிரமாண்டமான பாய்ச்சல்" என்று மனிதர் முதன் முதலில் நிலவில் காலடி பதித்தபோது உதிர்த்த கூற்று புகழ்பெற்றதாக மாறியுள்ளது, அச்சமயத்தில் மனித சமுதாயம் ஒரு வரலாற்று இலக்கைத் தொட்டது என்பது உண்மைதான்,

எனினும், மரியாவின் விண்ணேற்பில் நாம் எல்லையற்ற மாபெரும் வெற்றியைச் சிறப்பிக்கின்றோம் என்றும்

நாசரேத்தின் மனத்தாழ்மையுள்ள மரியாள், தன் ஆன்மாவோடு மட்டுமல்லாமல், தன் உடலோடும், முழுவதுமாக விண்ணகத்தில் தன் காலடியைப் பதித்த நிகழ்வு மனித சமுதாயத்திற்கு, முன்னோக்கிச்செல்லும் மிகப்பெரும் உந்துசக்தியாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

கடவுள் நம் உடல்களை ஒன்றுமில்லாமல் அழிவதற்கு அனுமதிக்கமாட்டார், ஏனெனில், கடவுளோடு இருக்கையில் எதுவுமே இழக்கப்படுவதில்லை.

மரியா, ஆண்டவரைப் போற்றிப் புகழ்ந்தார் என்றால் அவர் அக்காலக்கட்டத்தில் பிரச்சினைகளை எதிர்கொள்ளவில்லை என்று அர்த்தமில்லை, ஆனால் அவர், தன் வாழ்வில் அனைத்திற்கும் மேலாக, ஆண்டவரை முதலிடத்தில் வைத்தார். அதிலிருந்தே அவருக்கு மகிழ்வு பிறக்கின்றது என்றுரைத்தார் திருத்தந்தை.

நாமும் இன்னல்கள் மற்றும் அச்சங்களில் மூழ்கிவிடாமல் கடவுளின் பிரசன்னத்தில் நம்பிக்கை வைத்து வாழுமாறு மரியா நமக்கு ஆலோசனை வழங்குகிறார். மரியாள் தனது தாழ்நிலையை ஏற்றுக்கொண்டு ஆண்டவரைப் புகழ்ந்தார் வாழ்வில் தன் மீது நம்பிக்கை வைக்காமல் தம்மை நம்புகின்ற சிறியோருக்கு ஆண்டவர் வல்ல செயல்களை ஆற்றுகிறார் என்றும் கூறிய திருத்தந்தை, கடவுள் ஒவ்வொரு நாளும் நமக்கு வழங்கும் கொடைகளையும் நம்மீது அவர் காட்டுகின்ற கனிவன்பையும் நினைத்து அவரைப் புகழ்கின்றோமா? என்ற கேள்வியையும் எழுப்பினார்.

கடவுள் எப்போதும் நம்மை மன்னித்து அன்புகூருகிறார்.

அதனால் அவர் நமக்கு வல்லசெயல்களை ஆற்றுவதோடு நமக்கொரு அன்னையையும் தந்திருக்கிறார். நமக்காக விண்ணகத்தைத் திறந்திருக்கிறார் என்றும் கூறிய திருத்தந்தை நாம் அவர் ஆற்றிவரும் நன்மைகளை மறந்தால் நம் இதயம் சுருங்கிவிடும் என்றும் கூறினார்.

எனவே ஆண்டவர் நமக்கு ஆற்றிவரும் மாபெரும் செயல்களை மரியாவைப் போன்று நினைப்போம், ஒரு நாளில் குறைந்தது ஒருமுறையாவது அவற்றை நினைத்து மகிழ்ந்து அவரைப் போற்றிப் புகழ்வோம்.

நம் பார்வையை விண்ணை நோக்கி, கடவுளை நோக்கித் திருப்பி அவருக்கு நன்றி சொல்லி ஒவ்வொரு நாளையும் தொடங்குவதற்குத் தேவையான அருளை விண்ணக வாயிலான நம் அன்னையிடம் மன்றாடுவோம் என்று செப உரையை திருத்தந்தை பிரான்சிஸ் நிறைவு செய்தார்.

மேரி தெரேசா...






மட்டக்களப்பு செங்கலடி புனித நிக்கலஸ் பேராலயத்தின் புதிய ஆலய கட்டட அர்ச்சிப்பும் வருடாந்த திருவிழாவும் ஆயர் பேரருட்திரு யோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. திருவிழா கூட்டுத்திருப்பலியை மட்டக்களப்பு மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஏ. தேவதாசன் அடிகளார் ஒப்புக்கொடுத்துடன் அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் மற்றும் பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

# உறுதியான நம்பிக்கையே கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை



## இறை நம்பிக்கையால் மட்டுமே அருளையும் ஆசீரையும் பெறமுடியும்

நம்பிக்கை வாழ்வு என்பது கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையாகும். நாம் நம்பிக்கையோடு இறைவனிடம் தஞ்சம் புகும் பொழுது நிச்சயமாக நிறைவானஅருளை இறைவன் நமக்கு அருள்வார் என்பது மறுக்க முடியாத உண்மை.

நான் கடந்த 5 நாட்களாக காய்ச்சல் மற்றும் சளி போன்றவற்றால் மிகவும் அவதிப்பட்டேன்.தினமும் மாத்திரை மற்றும் ஊசி போட்டும் காய்ச்சல் தீர்ந்தபாடில்லை. நான்ஏன் இவ்வாறு நடக்கின்றது என யோசித்துக் கொண்டிருந்த பொழுது என்னுடையஇறைநம்பிக்கை குறைவாக இருப்பதை உணர முடிந்தது.

நான்ஓய்வு மேற்கொண்டகாரணத்தினால் ஆலயத்திற்கு சென்று இறைவேண்டல் செய்யவில்லை.எனக்கு ஏன்இவ்வாறு காய்ச்சல் இருக்கின்றது என்பது பற்றி மட்டும்தான் சிந்தித்தேன்.இறுதியில் கடவுள் மட்டுமே நல்ல உடல் உள்ள சுகத்தை அளிக்க முடியும் என்பதைஉணர்ந்து நம்பிக்கையோடு எனக்குத் தெரிந்த சகோதர சகோதரிகளிடம் செபிக்கக்கேட்டுக்கொண்டேன்.

பலரும் நம்பிக்கையோடு செபித்ததாக எனக்கு குறுஞ்செய்தியைஅனுப்பினார்கள். நான் செபிக்க கேட்டுக்கொண்ட நாள்முதல் என் உடல்நிலையில்நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. இப்பொழுது நலமுடன் இருக்கிறேன்.

இந்த உண்மையானஅனுபவப்பகிர்வு எதார்த்தமாக இருக்கலாம்.ஆனால், இந்த அனுபவத்தில்அடங்கியுள்ள இறைநம்பிக்கை ஆழமானது. இறை நம்பிக்கையால் மட்டுமே இறைவனின் அருளையும் ஆசீரையும் வல்ல செயல்களையும் பெறமுடியும். இதைத்தான் நற்செய்தி வாசகங்கள் நமக்கு சிந்திக்க அழைப்பு விடுக்கின்றன.

கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகங்கள் பிற இனத்தவரின் மீது நாம் கொள்ள வேண்டியதிறந்த மனப்பான்மையை சுட்டிக்காட்டுகின்றன. அவர்களின் இறை நம்பிக்கை வாழ்வுநாம் மீட்புப் பெற நமக்கு முன்னுதாரணமாக அமைகின்றது. யூதர்கள் பிறஇனத்தவர்கள் அனைவரையும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் ஓரங்கட்டப்பட்டவர்களாகவும் மீட்புப் பெற தகுதி இல்லாதவர்களாகவும் கருதினர்.அதிலும் குறிப்பாக பிறஇனத்தவர் மனிதர்களாக கூட மதிக்கப்பட தகுதி இல்லாதவர்கள் என்றும் அவர்கள் நாய்களுக்கு சமமானவர்கள் என்றும் கருதினர்.

எனவே தான் ஒவ்வொரு யூதரும் தங்களுடைய அன்றாட செபத்தில் " நான் புறஇனத்தானாக பிறக்காதது குறித்து கடவுளே, உமக்கு நன்றி கூறுகிறேன் "என்றுவேண்டினர். மேலும் "பிற இனத்தவர்களுக்கு மீட்புக் கிடையாது "என்ற மமதையில்யூதர்கள் இருந்தனர். இப்படிப்பட்ட சூழலில்தான் எசாயா இறைவாக்கினர் "பிறஇனத்தவர்களை நான் என் திருமலைக்கு அழைத்து வருவேன் ; இறைவேண்டல்செய்யப்படும் என் இல்லத்தில் அவர்களை மகிழச் செய்வேன் " எனஎடுத்துரைக்கின்றார்.

இத்தகைய பார்வை மீட்பு தங்களுக்கு மட்டுமே என்றுமமதையோடு திரிந்த யூதர்களுக்கு சவுக்கடியாக இருக்கின்றது. யூதர்களிடையேஇல்லாத நம்பிக்கை பிற இனத்தாரிடம் இருந்தது. எனவேதான் எசாயா இறைவாக்கினர்புறவினத்தார் பற்றி தனது நூலில் சுட்டிக்காட்டுகிறார்.

கடந்த ஞாயிறு இரண்டாம் வாசகத்தில் யூத பாரம்பரியத்தில் பிறந்து வாழ்ந்து யூத அடிப்படைவாதியாக இருந்த பவுல் "பிற இனத்தாராகிய ....உங்களுக்குத்திருத்தூதராய்இருக்கும் நான் என் பணியைக் குறித்துப் பெருமை கொள்கிறேன் "என்று கூறுமளவுக்கு பிற இனத்தாரின் நம்பிக்கை ஆழமாக இருந்தது.

யூதர்கள்பிற இனத்தாரின் நம்பிக்கையைக் கண்டு மீட்புப் பெற வேண்டும் என்ற ஆவலில்புனித பவுல் இவ்வாறு கூறுகிறார். புனித பவுல் தனது பணி வாழ்வின்தொடக்கத்தில் யூதர்களுக்கு மட்டுமே அதிக பணி செய்யவேண்டும் என்று நினைத்ததுஉண்மைதான். ஆனால் யூதர்களின் நம்பிக்கையற்ற தன்மையைக் கண்டு புனித பவுல்இறைநம்பிக்கை மிகுந்த பிற இனத்தாரிடம்நற்செய்திப்பணிச் செய்ய சென்றார் .

திருத்தூதர் புனித பவுலைப் போல இயேசுவும் தொடக்கத்தில் தனது பணியையூதர்களுக்கு மட்டுமே. அவர்கள் மீட்பு பெறவே காணாமல் போன ஆடுகளைத் தேடிஅனுப்பப்பட்டதைப் போல தான் அனுப்பப்பட்டுள்ளதாக இயேசு கருதினார்.

இப்படிப்பட்ட பார்வை பிற இனத்தவராகிய கனானியப் பெண்ணின் ஆழமான இறைநம்பிக்கைஇயேசுவை புதிய பார்வைக்கு மாற்றியதாக நாம் நற்செய்தி வழியாக அறிகின்றோம். "தன் சொந்த இனமாகிய இஸ்ரயேலுக்கு தான் தன் முதன்மையான பணி "என்ற பார்வையை பிற இனத்தைச் சார்ந்த கனானியப் பெண் தன்னுடைய ஆழமான இறைநம்பிக்கையால் மாற்றியுள்ளார்.

இவரை நம்பிக்கையின் பொருட்டு பிறஇனத்தாருக்கு முதன்முதலாக இயேசு வல்லச்செயலைச் செய்யத் தொடங்கினார்.

இந்த வாசகங்கள்மூன்றுமேகுறுகிய வட்டத்திற்குள் யோசித்துசெயல்படாமல்திறந்த மனநிலையோடு எல்லோரையும்ஏற்றுக்கொள்ளக்கூடியமனப்பக்குவத்தைப் பெற அழைப்பு விடுக்கின்றன.

பிற இனத்தாரைப் பற்றிய திறந்தமன நிலையோடு இருக்கச் சுட்டிக்காட்டுவதாக அமைகின்றன. எனவே நம்முடைய அன்றாடவாழ்விலும் கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் இருக்கும் இறைநம்பிக்கையை விடகிறிஸ்தவர்கள் அல்லாத பிறசமய சகோதர சகோதரிகளிடம் ஆழமான இறைநம்பிக்கைஇருப்பதைக் காணமுடிகின்றது. இவற்றை நாம் திறந்த மனநிலையோடு ஏற்றுக்கொண்டுஅவர்களைப்போல இறைநம்பிக்கை வாழ்வுக்கு சான்று பகர அழைக்கப்பட்டுள்ளோம்.

**(மிகுதி அடுத்த வாரம்)**

திருத்தொண்டர்
குழந்தை இயேசு பாபு...

# தமிழர்களின் அரசியல் விடிவுக்காக நாம் இணைந்து பயணிக்க வேண்டும்

## சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவிப்பு

**பா.சதீஸ்**



வடக்கு, கிழக்கில் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்களின் அரசியல் விடிவுக்காக இணைந்து பயணிக்க வேண்டும். அந்த ஒற்றுமையை தான் எதிர்பார்த்து நிற்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா சாளம்பன் பகுதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கூட்டமைப்பானது கடந்த தேர்தலில் 16 ஆசனங்களைபெற்றுக்கொண்ட நிலையில் இம்முறை 10 ஆசனங்களையே பெற்றுள்ளது. வன்னியில் கூட ஒரு ஆசனத்தை இம்முறை நாம் இழந்திருக்கின்றோம்.

இந்த தேர்தலில் ஆட்சியாளர்கள் அதிகாரபலம் மற்றும் பணபலம் எனபவற்றை பயன்படுத்தியிருந்தார்கள். அதனை விட எம்மவர்கள் பிரிந்துநின்று இந்த தேர்தலை சந்தித்தார்கள். இப்படியான சூழலிலும் கூட்டமைப்பிற்கு வாக்களித்த அனைத்து தமிழ் உறவுகளிற்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

இம்முறை தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் தேசிய கட்சிகளிற்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

அது ஏன் என்பதை எம்மால் இன்னும் ஊகிக்க முடியவில்லை. எமது கட்டமைப்புகளை சிதைப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கின்ற நிலையில் சிலர் ஏன் இவ்வாறான மனநிலையில் இருந்தார்கள் என்பது வேதனையான விடயமாக இருக்கின்றது.

எமக்கு ஏற்படக்கூடிய நெருக்கடிகளை நாங்கள் புரிந்துகொள்ளாத நிலையில் இருந்திருக்கிறோம். கடந்த தேர்தலில் எனக்கு கிடைத்த விருப்பு வாக்குகள் கூட இம்முறை குறைந்தே காணப்படுகின்றது. எனவே தேர்தல் முடிவை ஒரு பாடமாகவே நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன் என்றார்.

# 2.5 மில்லியன் ரூபா செலவில் மாதிரி முன்பள்ளி அமைப்பு



**பரந்தன் குறூப் நிருபர்**

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள வறிய மாணவர்களின் நலன் கருதி அவர்களின் ஆரம்ப கல்வியை மேம்படுத்தும் விதமாக நவீன கற்றல் முறைகளுடன் கூடிய ஒரு மாதிரி முன்பள்ளியாக 2.5 மில்லியன் ரூபா செலவில் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், பிரதேச மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் குறித்த பணிகள் இடம்பெறுவதாகவும் பிரதேசத்தின் ஆரம்ப பிரிவு மாணவர்களை நவீன உலகின் போட்டி சூழலுக்கு ஏற்ற வகையில் தயார் செய்து பாடசாலைக்கு அனுப்புவதன் மூலம் பிரதேசத்தின் கல்வி மட்டத்தை உயர்த்த முடியும் என குறிப்பிட்டுள்ளார்.

# தேர்தலின் பின்னர் தமிழரசு கட்சிக்கு எதிராக 20 முறைப்பாடுகள் பதிவு

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலுக்கு பின் கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழரசுக் கட்சிக்கு எதிராக 20 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.கிளிநொச்சியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் இம்முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் 11முறைப்பாடுகளும், தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் இரண்டு முறைப்பாடுகளும், பளை பொலிஸ் நிலையத்தில் நான்கு முறைப்பாடுகளும், பூநகரி பொலிஸ் நிலையத்தில் இரண்டு முறைப்பாடுகளும், முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு பின்னர் கிளிநொச்சியில் தமிழரசு கட்சி ஆதரவாளர்களால் ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்களின் வீடுகளுக்குள் வெடி கொளுத்தியமை, அச்சுறுத்தியமை, உடமைகளுக்கு சேதம் விளைவித்தமை, தாக்கியமை போன்ற பல்வேறு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# பாலம் புனரமைக்கப்படாமையால் வீதியூடான போக்குவரத்து பாதிப்பு

**கிளிநொச்சி குறூப் நிருபர்**



கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட கனகபுரம் ஒன்பதாம் பண்ணை வீதியில் அமைந்துள்ள பாலம் கடந்த பருவ மழைக் காலத்தில் உடைந்துள்ள நிலையில் இன்றுவரை குறித்த பாலம் புனரமைக்கப்படாமையால் அவ் வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாலம் உடைந்து காணப்படுவதனால் அவ் வீதி வழியாக சில இடங்களுக்குச் செல்லும் பொது மக்கள் பல கிலோ மீற்றர்கள் சுற்றி பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதோடு, தங்களுக்கு தேவையான கட்டுமானப் பொருட்களை கூட வாகனங்களில் ஏற்றிவர முடியாதுள்ளது எனவும் பிரதேச பொது மக்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே நெருக்கடி நிலையினை உணர்ந்து குறித்த பாலத்தினை விரைவாக புனரமைத்து தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மத்தியஸ்த சபை ஞாயிற்றுக்கிழமை மீண்டும் கூடுகின்றது

**வவுனியா விசேட நிருபர், பா.சதீஸ்**

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த பல மாதங்களாக நடைபெறாது இருந்த வவுனியா மத்தியஸ்த சபையின் செயற்பாடுகள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக அதன் தலைவர் சி.வரதராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், கடந்த சில மாதங்களாக கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மத்தியஸ்த சபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்த பிணக்குகள் தொடர்பான விசாரணைகள் நிறுத்தப்பட்டு இருந்தன. தற்போது சுமூகமான நிலைமை ஏற்பட்டு வரும் நிலையில் மீளவும் மத்தியஸ்த சபையின் செயற்பாடுகளை ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 09.00 மணிக்கு வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் மத்தியஸ்தசபை கூடவுள்ளதாக தெரிவித்தார்.


සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை சேவைக்கருமபீடங்களில் 2020 மார்ச் 31ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2020 ஆகஸ்ட் 28ம் திகதி மு.ப. 9.30க்கு நடைபெறும்.

| கிளை/ சேவைக்கருமபீடம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| [illegible] | 2020 மார்ச் 31ம் திகதிக்கு முன் மீட்கப்படாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், குருணாகலை நகரக்கிளை, இல. 36, திக்கொழும்பு வீதி, குருணாகலை |

[illegible]

# 16.08.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 606,260
## பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 24,288,090.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 27

www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம்: 583
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 16/08/2020

M 19 03 26 61 76

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெறுவோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | [illegible] | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | [illegible] | 100,000.00 | 09 |
| 3 ஆம் பரிசு | [illegible] | 1,000.00 | 121 |
| 4 ஆம் பரிசு | [illegible] | 500.00 | 300 |
| 5 ஆம் பரிசு | [illegible] | 100.00 | 6,905 |
| 6 ஆம் பரிசு | [illegible] | 40.00 | 4,496 |
| 7 ஆம் பரிசு | [illegible] | 20.00 | 114,123 |
| 8 ஆம் பரிசு | [illegible] | 20.00 | 20,752 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ .228,962,925.95
ரூ.10,066,560.80
ரூ.23,488,383.60
ரூ. 5,738,840.00

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB NATIONAL LOTTERIES
சீடடிழுப்பு இலக்கம் 2511 சீட்டிழுப்பு திகதி 16.08.2020
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 18 19 32 37

| | பரிசு கட்டமைப்பு | | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. | 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. | 100,000.00 | 04 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. | 2,000.00 | 171 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. | 1,000.00 | 372 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. | 100.00 | 8777 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. | 40.00 | 5728 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. | 20.00 | 144029 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. | 20.00 | 26088 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 185,169
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 5,623,160.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,218,315.28

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம் : 4216 உத்தியோகபூர்வ முடிவுகள்
மஹஜன சம்பத
திகதி: 16-08-2020
G 2 8 1 1 7 9

| | | | |
|---|---|---|---|
| [illegible] | 2 8 1 1 7 9 | 2,000,000/- | 01 |
| [illegible] | 8 1 1 7 9 | 100,000/- | 09 |
| [illegible] | 1 1 7 9 | 10,000/- | 87 |
| [illegible] | 1 7 9 | 1,000/- | 889 |
| [illegible] | 7 9 | 100/- | 8,855 |
| [illegible] | 9 | 20/- | 87,877 |
| [illegible] | 2 8 1 1 7 | 10,000/- | 09 |
| [illegible] | 2 8 1 1 | 1,000/- | 91 |
| [illegible] | 2 8 1 | 100/- | 890 |
| [illegible] | 2 8 | 50/- | 8,811 |
| [illegible] | G | 20/- | 35,231 |

ரூ. 8,717,210.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.21,200,937.00
தேசிய லொத்தர் சபை www.nlb.lk

தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி - 2020/08/16
சீட்டிழுப்பு இலக்கம் - 303
D 06 48 65 78

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 gupR | [illegible] | 1,000,000.00 | - |
| 2 gupR | [illegible] | 100,000.00 | 01 |
| 3 gupR | [illegible] | 3,000.00 | 62 |
| 4 gupR | [illegible] | 1,000.00 | 119 |
| 5 gupR | [illegible] | 100.00 | 3,118 |
| 6 gupR | [illegible] | 60.00 | 2,089 |
| 7 gupR | [illegible] | 20.00 | 52,830 |
| 8 gupR | [illegible] | 20.00 | 10,089 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா.2,100,520.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை 68,308
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை 114,952,531.44
NATIONAL LOTTERIES BOARD

உத்தியோகபூர்வ முடிவுகள்
செவன
திகதி 2020/08/16
சீட்டிழுப்பு இலக்கம் 287
M 15 18 32 66

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | [illegible] | ரூ 1,000,000/- | - |
| 2ம் பரிசு | [illegible] | ரூ 100,000/- | 04 |
| 3ம் பரிசு | [illegible] | ரூ 1,000/- | 64 |
| 4ம் பரிசு | [illegible] | ரூ 200/- | 148 |
| 5ம் பரிசு | [illegible] | ரூ 100/- | 3,639 |
| 6ம் பரிசு | [illegible] | ரூ 50/- | 2,048 |
| 7ம் பரிசு | [illegible] | ரூ 20/- | 49,783 |
| 8ம் பரிசு | [illegible] | ரூ 20/- | 7,640 |

ரூ. 14,000,000/- ரூ. 2,108,360/-
NATIONAL LOTTERIES BOARD
www.nlb.lk

# தமிழ்மொழியின் மீது தீராத காதல் கொண்ட பேராசிரியர் கபில பெரேரா

மத்தேகொடை வித்தியாதீப மத்திய மகாவித்தியாலய சா.த பரீட்சை நிலையத்திற்கு முன்பாக கடந்த வருடம் 12ம் திகதி ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. அந்நாளில் நடைபெற்றது க.பொ.த. சா.த தமிழ்மொழி பரீட்சையாகும். மோட்டார் வண்டியிலிருந்து இறங்கி வந்தது தந்தை, மகன் இருவருமாவர். அவர்கள் இருவரில் ஒருவர் நுழைவாயில் பாதுகாப்பு அதிகாரியினால் நிறுத்தப்படுகின்றார்.

"இது ஒரு பரீட்சை நிலையமாகும். உங்களுக்கு உள்ளே செல்வதற்கு அனுமதியில்லை. பரீட்சைக்கு தோற்றும் மகனை மாத்திரம் உள்ளே அனுமதிக்கலாம்" எனக் கூறினார்.

ஆனால் தானும் அந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதாக அத்தந்தை தனது கையில் வைத்திருந்த அனுமதிப் பத்திரத்தைக் காட்டியவாறு கூறினார். அதைப் பார்த்த பாதுகாப்பு அதிகாரி அவரை உள்ளே செல்ல அனுமதித்தார். உள்ளே சென்று பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த அவர் யார் என்று மேற்பார்வையாளர்கள் அறிந்திருக்கவில்லை. தந்தை தமிழ் மொழிப் பரீட்சைக்குத் தோற்றிய அதே பரீட்சை மண்டபத்தில் தனது மகனும் பரீட்சைக்குத் தோற்றினார்.

இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றியவர் வேறு யாருமல்ல... மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கபில பெரேரா ஆவார்.

"நான் சாதாரண தர தமிழ் பரீட்சைக்குத் தோற்றியது எனது தொழிலில் பதவி உயர்வு பெறும் நோக்கத்திலோ சம்பள உயர்வு பெறும் நோக்கத்திலோ இல்லை. நான் நம்பும் ஒரு விடயம் என்னவென்றால் இனங்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்பட வேண்டுமாயின் ஒருவருக்கொருவர் தமது கருத்துக்களை பரிமாறிக் கொள்வது அவசியமாகும். அவ்வாறு கருத்துகளை பரிமாறிக் கொள்வதற்கு அந்த இனத்தவர்களுடைய மொழியைக் கற்றிருப்பது அவசியமாகும். அதனூடாக அவர்களது இலக்கியம், கலாசாரம் போன்றவற்றைப் பற்றி அறிந்து கொள்ள முடியும். நான் பரீட்சைக்குத் தோற்றியது இந்த நோக்கத்திலாகும்".

தான் சா.த தமிழ்மொழிக்கு தோற்றிய நோக்கத்தை மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கபில பெரேரா இவ்வாறு கூறினார்.

பேராசிரியர் கபில பெரேரா தனது ஆரம்பக் கல்வியைக் கற்றது வேவிட்டை மைத்திரி வித்தியாலயத்திலாகும். சிறுவயதிலேயே தந்தையை இழந்தவர் இவர். ஆறாம் தரத்தில் பாணந்துறை ஸ்ரீ சுமங்கல வித்தியாலயத்திற்குப் பிரவேசித்த இவர், உயர் தரத்தில் சித்தியடைந்தது 1980ம் ஆண்டில் ஆகும். அவர் பாடசாலையின் கணிதப் பிரிவில் மிகச் சிறந்த பெறுபேறைப் பெற்றார். சா.த. பரீட்சையின் பின்னர் அவரை கொழும்பிலுள்ள பாடசாலை ஒன்றிற்கு அனுமதிப்பதற்கு முயற்சித்தார் அவரது தாயார். அந்தக் காலத்தில் சா. தரம் என்று ஒன்று இருக்கவில்லை. அந்த பரீட்சையை அழைத்தது NCGE எனவாகும்.

"நான் சா.தரத்தில் சித்தியடைந்ததும் எனது தாயார் என்னை கொழும்பு ஆனந்தா கல்லூரியில் சேர்ப்பதற்கு அழைத்துச் சென்றார். அங்கு அதிபர் எனது சா.த. பெறுபேறுகளின் அடிப்படையில் என்னை வணிகப் பிரிவிலேயே இணைத்துக் கொள்ள முடியும் என்றார். நான் வணிகப் பிரிவில் கல்வியை மேற்கொள்ள விரும்பவில்லை. எனது தாய் என்னை கொழும்பு

## தனது மகனுடன் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய பேராசிரியர்

ரோயல் கல்லூரிக்கு அழைத்துச் சென்றார். அங்கு என்னை இணைத்துக் கொண்டனர். ஆனாலும் நான் ரோயல் கல்லூக்குச் சென்றது ஒரு நாள் மாத்திரமே. நான் அந்த நாள் வீடு திரும்பும் போது பிற்பகல் 4.30 ஆகியது. நான் தாயிடம் ரோயலுக்கு செல்ல முடியாதென்று கூறினேன். மறுநாள் திரும்பவும் நான் சுமங்கலவிற்கே சென்றேன்.

1981ம் ஆண்டில் நான் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றேன். அது மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்காகும். அதே நேரத்தில் நான் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்திருந்தேன். அதிலும் எனக்கு அனுமதி கிடைத்தது. பல்கலைக்கழகம் செல்வதா இல்லை, பாதுகாப்பு கல்லூரிக்கு செல்வதா என்று தெரிவு செய்ய நேர்ந்தது. என்னுடைய அதிர்ஷ்டத்திற்கு கொத்தலாவலையில் பயிற்சி பெற்றுக் கொண்டே மொறட்டுவையில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு அனுமதி கிடைத்தது. அதனால் இரண்டையும் ஒரே நேரத்தில் மேற்கொண்டேன். நான் 85ம் ஆண்டில் கொத்தலாவலையில் அதிகாரியானேன். 86ம் ஆண்டில் முதலாம் வகுப்பு பட்டமொன்றுடன் அவ்வாண்டின் இரண்டாவது மாணவனாக மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் எனது பட்டப்படிப்பை முடித்தேன். அவ்வாறு இருக்கும் போது நான் நேராக கடற்படையில் இணைந்தேன்.

அபீத, டோரா, விக்கிரம போன்ற கப்பல்களில் சேவையாற்றினேன். கடற்படையின் பொறியியல் பிரிவில் சேவையாற்றினேன். அந்தக் காலத்தில் அமேரிக்காவில் எனது மேற்படிப்பை முடிப்பதற்கு எனக்கு முழு புலமைப் பரிசில் கிடைத்தது. நான் PHD வரை கல்வி கற்று 93ம் ஆண்டில் மீண்டும் இலங்கைக்கு வந்து கடற்படையிலேயே இணைந்தேன். 95ம் ஆண்டில் லெப்டினன்ட் கமாண்டராக இருக்கும் போது கடற்படையிலிருந்து விலகி மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் இயந்திரப் பொறியியல் பிரிவில் விரிவுரையாளராக இணைந்தேன். அது தொடக்கம் நான் சேவையாற்றியது மொறட்டுவை பல்கலைக்கழகத்திலாகும். நான் கடற்படையில் சேவையாற்றியது யுத்தம் நடைபெறும் காலத்திலாகும். அந்தக் காலத்தில் தமிழ் மொழியைக் கற்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு இருந்தது. ஆனால் எனக்கு இருந்த வேலையுடன் அதற்கு நேரத்தை ஒதுக்க முடியவில்லை" என பேராசிரியர் கபில பெரேரா கூறினார். அவர் முதன்முதலாக தமிழ் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முயற்சி செய்தது 2014ம் ஆண்டிலாகும்.

"நான் எனது மகளை வகுப்புகளுக்கு அழைத்துச் செல்லும் போது பிலியந்தல பன்சலையில் SB அழுத்கெதர என்ற ஆசிரியர் நடத்தும் தமிழ் வகுப்புக்கான விளம்பரம் ஒன்றைக் கண்டேன். அதற்கும் சில நாட்கள் சென்றேன். சரியாக மார்ச் 14ம் திகதி மின்வலு அமைச்சின் செயலாளர் என்னை தொடர்பு கொண்டு மின்சார சபையின் உப தலைவராக பொறுப்பேற்குமாறு கூறினார். அப்பதவியை பொறுப்பேற்று மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவின் தலைவராகவும் கடமையாற்றுவதுடன் சிரமமாக இருந்ததால் அந்த ஆண்டின் பரீட்சைக்கு தோற்றும் சிந்தனையை விட்டு விட்டேன். ஆனாலும் எனது இலக்கை கைவிடவில்லை. இந்த ஆண்டில் ஜூலை மாதம் தமிழ் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பித்தேன். அவ்வாறு செய்து விட்டு தனியாக தமிழ்மொழியைக் கற்கும் முயற்சியில் இறங்கினேன்.

ஆனாலும் நான் சிந்தித்தேன். இப்பரீட்சையில் சித்தியடையவில்லை என்றால் அவமானமாக இருக்கும். ஏனென்றால் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சா.த. தமிழ் மொழியில் சித்தியடையவில்லை என்று செய்தி வரும் என்பதனாலாகும். அதனால் பரீட்சைக்கு சம்பந்தமான அனைத்து பாடப் புத்தகங்களையும் சேகரித்தேன். அரசினால் வழங்கப்படும் பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழ், முதலாம் இரண்டாம் மூன்றாம் தரங்களின் பாடப் புத்தகங்களையும், எனது மகள் மகன்களுடைய பாடப்புத்தகங்களையும் app ஒன்றையும் அகராதியையும் கையில் வைத்துக் கொண்டு பரீட்சைக்கு தயாரானேன். ஈஸ்டர் ஞாயிறு தினம் வரையில் பிலியந்தலையில் தமிழ் வகுப்பொன்றிற்குச் சென்றேன். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் போதும் நான் அவ்வகுப்பில்தான் இருந்தேன். அவ்வகுப்பு இரவில்தான் நடைபெற்றது. தாக்குதலின் பின் வகுப்பை இரவில் நடத்தாமல் பகலில் நடத்தினார்கள். அதனால் அந்த வகுப்பிற்கும் என்னால் செல்ல முடியவில்லை".

இவ்வாறு கூறுகிறார் அவர்.

தனியாக தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டிருந்த பேராசிரியர் கபில பெரேராவின் இளைய மகனும் அதே பரீட்சைக்கு தயாராகிக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் அவரது அனுபவத்தை பின்வருமாறு விளக்கினார்.

"நான் ஒவ்வொரு நாளும் காலையில் உடற்பயிற்சிக்காக நடந்து செல்லும் போது எனது கையடக்க தொலைபேசியில் ஒற்றைச் சொற்கள், எதிர்ச்சொற்கள் என்பவற்றை படம் பிடித்து அதனை படித்துக் கொண்டுதான் நடப்பேன். பரீட்சைக்கு ஒரு வாரத்திற்கு முன்புதான் இரண்டாவது பகுதிக்கு படிக்க ஆரம்பித்தேன். நான் சரியாக பரீட்சைக்கு படித்தது பரீட்சைக்கு முன் வந்த போயா தினத்திலாகும். அன்று அனைத்து வேலையையும் நிறுத்திவிட்டு பரீட்சைக்காக படித்தேன். அன்று இரவு ஒரு சம்பவம் நடைபெற்றது. எனது அனுமதிப் பத்திரத்தை கையொப்பமிட்டு இருக்கவில்லை. நான் செவ்வாய்க்கிழமை பின்னேரம் பல்கலைக்கழக பதிவாளரிடம் கூறி ஒப்பமிட்டுக் கொள்வதாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அந்நாள் காலையிலிருந்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் ஒரு விழாவில் கலந்து கொண்டிருந்தேன். நான் அந்த விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டதனால் அன்று அதனை செய்து கொள்ள முடியவில்லை. நான் திரும்பவும் பல்கலைக்கழகத்திற்கு செல்லும் போது இரவு 8 மணி ஆகியது. வீட்டிற்கு செல்லும் போது இரவு 9 மணி. மறுநாள் போயா என்பதால் விடுமுறை. கிராம சேவகரிடம் செய்து கொள்வதாக நினைத்துக் கொண்டு மகளிடமும் அம்மாவிடம் கூறி அதனை ஒப்பமிட்டுக் கொள்ளுமாறு கூறினேன். எனது மனைவி இரத்தினபுரி அடிப்படை மருத்துவமனையில் சிறுவர் நோய் சம்பந்தமான விசேட வைத்தியராக கடமை புரிகின்றார்.

நான் அவ்வாறு கூறியதும் என்னுடைய மனைவி நான் விளையாட்டாக சொல்கின்றேன் என்று நினைத்தார். நான் விண்ணப்பித்திருப்பதாக அவருக்கு தெரிந்திருந்தாலும் நான் உண்மையிலேயே பரீட்சைக்கு தோற்றுவேன் என்று அவர் நினைத்திருக்கவில்லை. அதனால் விளையாட்டாக பல விடயங்களை கூறினார். நான் கூறினேன் இன்று என்னை தொந்தரவு செய்யாதீர்கள் நான் பரீட்சைக்காக தயாராகின்றேன் என்று. எனது மகனும் இதே பரீட்சைக்கு தயாராகின்றார். அவரும் படித்துக் கொண்டு இருந்தார். அவரிடம் சென்று "மகனே, நீயாவது பரவாயில்லை. அங்கே இருக்கும் சிறுவர் மிகவும் தீவிரமாக படிக்கின்றார்" என்று கூறி வேடிக்கையாக சிரித்தார் மனைவி.



## அன்று மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், இன்று கல்வியமைச்சின் செயலாளர்

செவ்வாய்க்கிழமை பின்னேரம் தான் பரீட்சைக்காக விடுமுறை கோரி விண்ணப்பித்தேன். சாரதியிடம் வியாழக்கிழமை வர மாட்டேன், ஒரு சிறிய வேலையாக செல்கின்றேன் என்று கூறினேன். ஆனால் எனது செயலாளரிடம் பரீட்சைக்கு தோற்றுவதாக கூறினேன். எனது காரியாலயத்தில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் படித்துக் கொண்டிருப்பேன். நான் சா.த. பரீட்சைக்கு தோற்றுகின்றேன் என்று அவர் விளையாட்டாகச் சிரிப்பார்".

பரீட்சை அன்று தனது மகனுடன் பரீட்சைக்கு சென்ற பேராசிரியர் கபில பெரேராவுக்கு இன்னும் பல அதிசயமான நிகழ்வுகள் காத்திருந்தன.

"பரீட்சை மண்டபத்தில் எனக்குப் பின்னால்தான் என்னுடைய மகன் அமர்ந்திருந்தார். நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் பரீட்சைக்கு தோற்றினோம். அது ஒரு விநோதமான அனுபவமாக இருந்தது. தந்தையும் மகனும் சா.தரத்தில் ஒரே பரீட்சைக்கு தோற்றும் முதல் முறையா இது என்று எனக்குத் தெரியாது. இன்னும் வயதானவர்கள் பரீட்சை மண்டபத்தில் இருந்தார்கள். ஊக்கமாக இருந்தவர்கள் யார் என்று பார்ப்பதற்கு கூட நேரமிருக்கவில்லை. பரீட்சை மண்டபத்தை தேடுவதற்கு அதிக நேரம் செலவானதால் சரியான நேரத்தில்தான் பரீட்சை மண்டபத்தை சென்றடைந்தேன். ஆகக் குறைந்தது என்னுடைய தண்ணீர் போத்தலில் இருந்து தண்ணீர் குடிப்பதற்கு கூட நேரம் கிடைக்கவில்லை. பல மாணவர்கள் முதலில் பென்சிலால் விடை எழுதினாலும் நான் பேனையினாலேயே எழுதினேன்.

**தந்தையும் மகனும் சா/தரத்தில் ஒரே பரீட்சைக்கு தோற்றும் முதல் முறையா இது என்று எனக்குத் தெரியாது. இன்னும் வயதானவர்கள் பரீட்சை மண்டபத்தில் இருந்தார்கள். ஊக்கமாக இருந்தவர்கள் யார் என்று பார்ப்பதற்கு கூட நேரமிருக்கவில்லை. பரீட்சை மண்டபத்தை தேடுவதற்கு அதிக நேரம் செலவானதால் சரியான நேரத்தில்தான் பரீட்சை மண்டபத்தை சென்றடைந்தேன். ஆகக் குறைந்தது என்னுடைய தண்ணீர் போத்தலில் இருந்து தண்ணீர் குடிப்பதற்கு கூட நேரம் கிடைக்கவில்லை. பல மாணவர்கள் முதலில் பென்சிலால் விடை எழுதினாலும் நான் பேனையினாலேயே எழுதினேன்.**

நான் சிறப்பாக பரீட்சைக்கு முகம் கொடுத்தேன் என்று நினைக்கின்றேன். மகனின் விடைகளில் 40இல் 38 சரியாக இருந்தது. எனக்கு 40இல் 32 சரியாக இருந்தது. சித்தியடைவேன் என்று எனக்குத் தெரியும். கட்டுரையை அவ்வளவு நன்றாக எழுதவில்லை. அங்கு நடந்தது இதுதான். எனக்கு ஒரு சிறிய தவறு நடந்தது. முதல் பாகத்தில் இரண்டு கேள்விகளுக்கு கட்டாயம் விடை எழுத வேண்டும் என்பதை நான் பார்க்கவில்லை. பந்தியை வாசித்து விடை எழுதுவதை நான் மிகவும் நன்றாக செய்தேன். அதனால் சித்தியடைவேன் என்று நம்பினேன். வேறு நாட்களில் கடைசி ஐந்து கேள்விகள் ஒரு வரைபடத்தை தந்து அதைப் பற்றியதாக இருக்கும். பரீட்சைக்கு முன்பு மகனுடன் இணைந்து முன்னைய ஆண்டுகளின் கேள்விகளுக்கு நன்றாக விடை எழுதுவதற்கு பழகினேன். ஆனால் இம்முறை அந்தக் கேள்வி வரவில்லை. கடைசி மூன்று கேள்விகளும் நான்கு வாக்கியங்களை தந்து அவைகளை சரிப்படுத்தி எழுதுவதாக இருந்தது.

உபவேந்தராக சா.தரத்திற்கு தோற்றுகிறேன் என்று எனக்குத் தோன்றவில்லை. சாதாரண மாணவன் ஒருவன் பரீட்சைக்கு தோற்றுவது போலவே எனக்குத் தோன்றியது. நான் உ. தரப் பரீட்சையில் கணித பாடத்திற்கு தோற்றியது நினைவுக்கு வந்தது. இந்த பரீட்சையில் சித்தியடைவதை விட முக்கியமானது நான் பெற்ற அறிவாகும். எனக்கு முழு வினாத்தாளையும் படித்து விளங்கிக் கொள்ள முடியுமாக இருந்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நான் எப்போதும் எனது கல்வியை விருப்பத்துடனும் உற்சாகத்துடனுமே மேற்கொண்டேன். இன்றும் அவ்வாறேதான். வடக்கில் சென்று சேவையாற்றுவதற்கு எனக்கு மிகவும் விருப்பமாக உள்ளது. பேராசிரியர் கந்தசாமி ஐயா அவர்கள் யாழ்ப்பாணத்தில் உபவேந்தராக கடமையாற்றினார். நான் இன்னும் ஒரு வருடமே உபவேந்தராக இருப்பதாக அவரிடம் கூறினேன். இன்னும் சில காலம் உபவேந்தராக இருக்க முடியுமே என அவர் கூறினார். ஆனால் பொறுப்பேற்ற காலத்திற்கு மேலதிகமாக ஒரு நாள் கூட பதவியில் இருக்க மாட்டேன் எனக் கூறினேன். நான் கடமை புரிந்த அனைத்து இடங்களிலும் அப்படித்தான். நான் பேராசிரியர் கந்தசாமி ஐயா அவர்களிடம் அடுத்த வருடம் நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்திற்கு வருவதாகக் கூறினேன். சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் பேசாத ஒரு இடத்தில் தங்கியிருந்து தமிழ் கற்க வேண்டும் எனக் கூறினேன். எனக்கு அப்படியும் ஒரு இலக்கு இருக்கின்றது. அதனால்தான் நான் சா. தரத்திற்கு தோற்றினேன். பரீட்சை முடிந்ததற்காக நான் தமிழ் கற்பதை நிறுத்த மாட்டேன். என்னிடம் பேச்சுத் தமிழ் புத்தகங்கள் உள்ளன. அவற்றை வைத்து நான் எப்படியாவது தமிழ் பேசுவதற்கு கற்றுக் கொள்வேன்.

98ம் ஆண்டில் நான் சசகாவாவில் ஜப்பான் மொழியைக் கற்றுக் கொண்டேன். என்னால் ஜப்பான் மொழியில் பேச முடியும். அதே போல் தமிழ் பேச வேண்டும் என்று மிகுந்த ஆவலுடன் இருக்கின்றேன். சுனாமி காலத்தில் நான் நாராவின் தலைவராக இருந்தேன். அந்தக் காலத்தில் மீன் வள அமைச்சராக இருந்தவர் சந்திரசேன விஜேசிங்க. சுனாமியின் பின் ஒருநாள் ஜப்பான் தூதுவர் காலி துறைமுகத்தில் படகுகளை விநியோகிக்கும் விழாவில் கலந்து கொண்டார். அவரது உரையை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மொழிமாற்றம் செய்தது நானே. அதனால் கற்றுக் கொண்ட எதுவும் வீண் போகாது என்று உணர்ந்தேன்.

நான் பரீட்சைக்கு தோற்றியது உண்மை, பத்திரிகையில் வருவதை நான் விரும்பவில்லை. என்னுடைய மாணவன் ரன்ஜித் அமரசிங்க மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமை புரிகின்றார். அவர் என்னை தனிப்பட்ட விடயமாக சந்திப்பதற்கு வந்திருந்தார். நேற்று முழுவதும் நான் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சி செய்தேன், ஆனால் முடியவில்லை. சேர் பரீட்சைக்கு தோற்றியதாக கூறுவது உண்மைதானா எனக் கேட்டார்.

**'வடக்கில் சென்று சேவையாற்றுவதற்கு எனக்கு மிகவும் விருப்பமாக உள்ளது. பேராசிரியர் கந்தசாமி ஐயா அவர்களிடம் அடுத்த வருடம் நவம்பர் மாதம் யாழ்ப் பாணத்திற்கு வருவதாகக் கூறினேன். சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் பேசாத ஒரு இடத்தில் தங்கியிருந்து தமிழ் கற்க வேண்டும் எனக் கூறினேன். எனக்கு அப்படியும் ஒரு இலக்கு இருக்கின்றது'**

நான் ஆம் என்றேன். அவர் தான் இதனை பத்திரிகையில் போட வேண்டுமென கூறினார். பேராசிரியர் ஜயந்த விஜேசேகரவும் என்னைப் பார்க்க எனது அலுவலகத்திற்கு வந்தார். கல்வி கற்கும் மாணவர்களுக்கு முன்மாதிரியாக அமையும் என்று அவர்கள் கூறியதனாலேயே நான் உங்களுடன் உரையாட சம்மதித்தேன்.

நான் வாழ்க்கையில் பெற்ற அனைத்து வெற்றிக்குப் பின்னாலும் இருந்தது நான் கற்ற கல்வியாகும். எனது தந்தை நான் சிறுவயதில் இருக்கும் போதே இறந்து விட்டார். ஆனால் எனது கல்வியை மிகவும் ஆர்வமாக மேற்கொள்கின்றேன்.

நாம் பணம் சம்பாதிக்கும் நோக்கில் கல்வி கற்கக் கூடாது. இன்னொருவருக்கு தொந்தரவு செய்யாமல் வாழ்வதற்கு கல்வி அத்தியாவசியமாகும்".

இவ்வாறு கூறுகிறார் பேராசிரியர் கபில பெரேரா.

***(இப்பதிவு கடந்த வருடம் டிசம்பரில் எழுதப்பட்டது. இங்கே குறிப்பிடப்படும் பேராசிரியர் கபில பெரேரா இன்று கல்வி அமைச்சின் செயலாளர்ஆவார்)***

மூலப்பிரதி:
Lakmal Bogahawaththa
தமிழ்ப்பெயர்ப்பு:
Arshak Akram





திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் தேர் திருவிழா நேற்று 17 நடைபெற்றது.வில்லூன்றி கந்தன் தேரில் ஆரோகணித்து வருவதையும், நடன மாதர்கள் வரவேற்று நடனமாடுவதையும் படங்களிலும் காணலாம்.
படம்: தம்பலகாமம் நிருபர்

# மட்டக்களப்பு மேற்கு வலய கல்வி பணிப்பாளராக அகிலா

**கல்லடி குறூப் நிருபர்**



கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் நியமனத்திற்கமைவாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் புதிய வலயக் கல்விப் பணிப்பாளராக அகிலா கனகசூரியம் தனது கடமைகளை நேற்று திங்கட்கிழமை (17) பொறுப்பேற்றுக் கொண்டார்.

புதிதாக வருகைதந்த வலயக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியத்திற்கு கல்வி சமூகத்தினராலும் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் போன்றோரால் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இவர் இதற்கு முன்னர் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம், மூதூர் வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு மேற்கு வலயம், மட்டக்களப்பு வலயம் போன்ற இடங்களில் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூவருக்கு விளக்கமறியல்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 60 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த மூவரை இம்மாதம் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எம்.அன்பாஸ் சனிக்கிழமை (15) உத்தரவிட்டார்.

திருகோணமலை, மட்கோ,கூம்பூகார்,பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 21,30 மற்றும் 23 வயதுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# மூதூர் சதொசவை மீண்டும் திறக்குமாறு மக்கள் கோரிக்கை

**மூதூர் தினகரன் நிருபர்**

மக்கள் தனியார் வர்த்தக நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்வதில் பல்வேறு கஸ்டங்களையும், நஸ்டங்களையும் அடைந்து வரும் நிலையில் மூதூரில் இயங்கி மூடப்பட்டு காணப்படும் சதொச நிலையத்தை மீண்டும் திறக்குமாறு பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டி உள்ளனர்.

மேலும் மக்களால் விடுக்கப்பட்டுள்ள இவ்வேண்டுதலில் தெரிவித்துள்ளதாவது, மூதூர் சதொச நிலையம் இயங்கிய காலத்தில் தூர கஸ்டப் பிரதேசங்களில் இருந்து வரும் மக்களும், உள்ளூர் மக்களும் தமக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை இலாபமாகவும், தேவைக்கேற்றால் போலும் கொள்வனவு செய்து வந்தனர்.

இந்நிலையில் மக்கள் பல்வேறு கஸ்டங்களுக்கு மத்தியில் தமக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து வருவதால் இந்நிலையத்தை மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மக்கள் உரிய அதிகாரிகளை கேட்டுள்ளனர்.

# திக்கோடை மாதிரி கிராமத்தில் குடிநீர் இன்றி மக்கள் அவதி



**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

போரதீவுப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட திக்கோடை மாதிரிக் கிராமத்தில் வசிக்கும். மக்கள் கடந்த இரண்டு வருடங்களாக குடி நீரைப்பெற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த சஜித்பிரேமதாசவினால் மாதிரி வீடமைப்புக்கிராமஙகள் அமைக்கப்பட்டுவந்தன. அதற்கமைய வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள திக்கோடை கிராமத்திலும் கட்டம் கட்டமாக வீடுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்றன. இங்கு 110 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல வீடுகள் கட்டிமுடிக்கப்படாது இடை நடுவில் கைவிடபபட்டுள்ளன. குறித்த வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு மின்சாரம், குடிநீர், வீதி அபிவிருத்தி உட்பட்ட அடிப்படை வசதிகள் கூட ஏற்படுத்திக் கொடுக்கப்படாதுள்ளது. இதனால் இங்கு குடியேறியுள்ள மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

தற்போது இப் பிரதேசத்தில் நிலவும் வரட்சி காரணமாக குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் தாம் சிரமப்படுவதாக தெரிவிக்கின்றனர். பிரதேச சபையினால் அவ்வப்போது வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

திக்கோடை மாதிரிக் கிராமத்தில் வசிக்கும் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரசாங்கம், பிரதேச அரசியல்வாதிகள் தீர்வினைப்பெற்றுத்தரவேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்,

# முஸ்லிம்களின் உரிமைக் குரல் முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே

## மீண்டும் மக்களால் நிரூபிப்பு - பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்

**ஒலுவில் விசேட நிருபர்**

முஸ்லிம் சமூகத்தின் குரல் முஸ்லிம் காங்கிரஸ் தான் என்பதை நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் மீண்டும் மக்கள் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள் என முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

ஒலுவிலில் ஞாயிற்றுக்கிழமை (16) தவிசாளர் ஏ.எல். அமானுல்லா தலைமையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கத்தின் போராளிகளாகவும் ஆதரவாளர்களாகவும் இந்த தேர்தல் களத்தில் எம்மோடு நின்று எமது கட்சியின் வெற்றிக்கும் எனது வெற்றிக்கும் வாக்களித்த மாவட்டத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.



மாவட்டத்தை வெற்றி கொள்ளும் வியூகங்களை வகுத்த போதிலும் துரதிஸ்ட வசமாக இரண்டு ஆசனங்களையே எம்மால் பெற முடிந்தது. பாராளுமன்ற பிரதிநிதிகள் இல்லாத பிரதேசங்களுக்கு கட்சி சார்பின்றி என்றும் செயற்படுவேன்.

தேர்தல் காலங்களில் என்னால் முன்வைத்த உறுதிமொழிகளை பெற்றுக் கொள்வதற்காக என்றும் உங்களின் உரிமைக் குரலாக ஒலிப்பேன்.

இவ் வெற்றியானது எமது கட்சிக்கும் எமது மாவட்ட முஸ்லிம் சமூகத்திற்கும் கிடைத்த உரிமைப் போராட்டத்திற்கான வெற்றியாகும்.

அம்பாறை மாவட்டத்தில் அபகரிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களின் காணிகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து அதற்கான தீர்வினை பெற்றுத் தருவேன்.

ஒலுவில் பிரதேசத்தில் நீண்ட காலமாக காணப்படுகின்ற கடலரிப்பை தடுப்பதற்குரிய நிரந்தர தீர்வினை பெற்றுக் கொள்வதற்குரிய வழிவகைகளை மேற்கொள்வேன்.

பல்வேறு வகையான போட்டிகள், சதிகள், கழுத்தறுப்புக்களுக்கு மத்தியில் நான் வெற்றியீட்டி இருப்பது என்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையாகும். முஸ்லிம் சமூகத்திற்கு அநீதி இழைக்கப்படுகின்ற போது சமூகத்தின் குரலாக பாராளுமன்றத்திலும் வெளியிலும் குரல் கொடுப்பேன்.

கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் பல வழிகளிலும் இனவாதிகளால் கடந்த காலங்களில் அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் இவ்வாறான அநீதிகளுக்கெதிராக நாங்கள் பாராளுமன்றத்தில் கூட்டாக குரல் கொடுப்போமென்றார்.

# யானை தாக்கி விவசாயி பலி

**றொட்டவெவ குறூப் நிருபர்**

ஹொரவ்பொத்தான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரஸ்னக்வெவ பகுதியில் வயலுக்கு சென்றவர் காட்டு யானையின் தாக்குதலினால் நேற்று முன்தினம் (16) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த குணசேகர ஏக்கநாயக்க 60 வயது என பொலிஸார் தெரிவித்தனர்.

வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது காட்டு யானை தாக்கியதில் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# ஆலையடிவேம்பு பிரதேச சபையின் புதிய தவிசாளராக கிரோஜாதரன்

**வாச்சிக்குடா விஷேட நிருபர்**



ஆலையடிவேம்பு பிரதேச சபையின் புதிய தவிசாளராக த.கிரோஜாதரன் பதவியேற்றதை தொடர்ந்து திணைக்கள தலைவர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளின் கருத்தறியும் நிகழ்வு சனிக்கிழமை (15) பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் மின்சார சபை அத்தியட்சகர், சட்டத்தரணிகள், கல்வி அதிகாரிகள் பொலிசார் இராணுவ அதிகாரிகள் பிரதேச சபை செயலாளர், தொழிநுட்ப உத்தியோகத்தர், துறைசார் அதிகாரிகள் ஊடகவியலாளர்கள் சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வரும் நிலையில் அவற்றை தடுப்பதற்கு தங்களுடன் இணைந்து பிரதேச சபை உள்ளிட்ட பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இராணுவத்தினரும் பொலிசாரும் கோரிக்கை விடுத்தனர்.

இருக்கின்ற காலத்தினுள் பிரதேச சபை தமக்கென ஒரு அடையாளத்தை நிலை நிறுத்தும் வகையில் சிறந்த வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும் எனும் கோரிக்கை பலராலும் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் கட்சிகள் ஒன்றுசேர்ந்து செயற்பட்டால் தேசிய பிரச்சினைக்கு தீர்வினை பெறமுடியும்

## முன்னாள் பிரதி அமைச்சர் சோ.கணசமூர்த்தி

**மணல்சேனை நிருபர்**

வடக்கு,கிழக்கில் இருக்கின்ற தமிழ் கட்சிகள் ஒன்றுசேர்ந்து செயற்படும் பட்சத்தில், தமிழ் மக்களின் அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பாக அமையும் என இலங்கை தமிழர் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் முன்னாள் பிரதி அமைச்சர் சோ.கணசமூர்த்தி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்துமுடிந்த தேர்தல் தேசியப் பிரச்சினைக்காக குரல் கொடுத்த கட்சிகளுக்கு தோல்வியாகவும், பெரும்பான்மையினத் தலைவர்களுக்கு வெற்றியாகவும் அமைந்திருக்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டு வடகிழக்கில் இருக்கின்ற அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் தேசியப் பிரச்சினையினை மையமாக வைத்து ஒன்றிணைய வேண்டும்.

நான் கடந்த காலங்களில் தேசியக் கட்சிகளில்தான் போட்டியிட்டேன். ஆனால் தேசியக் கட்சியில் இருந்துகொண்டு தமிழ் மக்களினது பிரச்சினைக்கு எவ்விதத் தீர்வினையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதனை உணர்ந்துதான், தமிழ் மக்கள் முற்போக்கு முன்னணியினை உருவாக்கி முன்னாள் நீதியரசர் சீவி.விக்கினேஸ்வரனுடன் இணைந்து தமிழ் மக்கள்தேசியக் கூட்டணியில் போட்டியிட்டேன்.

நல்லாட்சியில் அரசியல் தீர்வினைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருந்தன. ஐ.தேசியக் கட்சியின் அரசாங்கத்தில் அரசியல் நிர்ணய சபை நிறுவப்பட்டபோதும் அரசியல் தீர்வு விடயம் மந்தகதியாகவே இருந்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முயற்சிசெய்து இந்த விடயத்தை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் பாராளுமன்றத்திற்கு எடுத்துச் சென்று தீர்வு விடயத்தை சமர்ப்பித்து இருக்கலாம் ஆனால் அது நடைபெறவில்லை.

இவ்வாறான அசமந்தப்போக்கின் காரணத்தினால் வட மாகாண முன்னாள் முதலமைச்சர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தனியாக கட்சியினை ஸ்தாபித்து தமிழர்களுக்காக குரல்கொடுத்து வருகின்றார் என தெரிவித்தார்.



தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் இலங்கை தமிழரசுக் கட்சியில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஆகியோருக்கு நேற்றுமுன்தினம் திருகோணமலையில் வரவேற்பு அளிக்கப்பட்ட போது.
படம்: தம்பலகாமம் நிருபர்

# சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளராக நஜீம்

**காரைதீவு குறூப் நிருபர்**



சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளராக எம்.எஸ்.சஹுதுல் நஜீம் மீண்டும் நேற்று (17) கடமையேற்றுள்ளார்.

நேற்று முதல் செயற்படும்படியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளராக எம்.எஸ்.சஹுதுல் நஜீம் மீண்டும் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எல். கே.ஜி.முத்து பண்டாவினால் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் கல்வி நிர்வாகசேவை வகுப்பு 1ஐ சேர்ந்தவரை நியமிக்கும் பொருட்டு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் அண்மையில் நேர்முகத்தேர்வு நடாத்தப்பட்டது.

இந்நேர்முகத்தேர்வில் எம்.எஸ்.சஹுதுல்நஜீம் மீண்டும் வலயக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஏலவே கல்முனை வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் சம்மாந்துறை கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று (17) பாதுகாப்பு அலுமாரி வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பழைய மாணவர்கள் சங்கத்தின் தலைவர் மௌலவி எம்.எம்.கமர்தீன், ஆளுகை சபையின் பொருளாளர் எம்.ரீ.ஏ.தௌபீகிடம் அலுமாரியினை வழங்கி வைத்த போது.
படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

## நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவு

### கள்ளுத் தவறணை மற்றும் வெளிநாட்டு மதுபானத்திற்கான குத்தகை விற்பனை 2021

மேற்குறித்த குத்தகை விற்பனைக்கான விலைமனுக்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தன்று நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் குறிப்பிட்ட நேரம் வரை ஏற்றுக்கொளளப்படும்.

| விபரம் | திகதி | நேரம் |
|---|---|---|
| கள்ளுத் தவறணை குத்தகை | 2020.09.23 | மு.ப. 10.30 |
| வெளிநாட்டு மதுபானத்திற்கான குத்தகை | 2020.09.24 | மு.ப. 10.30 |

14.08.2020 திகதியிட்ட வர்த்தமானி அறிவிப்பு எண் 2189 இன் பகுதி I: பிரிவு (IIஆ) விரிவாக வெளியிடப்பட்டுள்ளது மற்றும் www.documents.gov.lk வலைத்தளத்தைப் பார்வையிட்டு தகவல்களைப் பெறலாம்.

**ஏ.யு. பதிரண**
**பிரதேச செயலாளர்**
**நீர்கொழும்பு**

**2020 ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி**
**நீர்கொழும்பு பிரதேச செயலகம்.**

## வோர்விக் தோட்ட குடியிருப்பில் தீ விபத்து;

# உடனடி நிவாரணத்துக்கு செந்தில் தொண்டமான் பணிப்பு

பதுளை, வெலிமடை வோர்விக் தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கு அமைய உடனடியாக நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வோர்விக் தோட்ட மார்ட்டின் பிரிவு லயன் குடியிருப்பு ஒன்றில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் 14 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த செந்தில் தொண்டமான் பாதிப்புகளை பார்வையிட்டதுடன் மக்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலும், அவர்கள் தங்குவதற்கான தற்காலிக தங்குமிடங்களை அமைக்குமாறு தோட்ட நிர்வாகத்துக்கு அவர் பணிப்புரை வழங்கியுள்ளார். இது தொடர்பில் தோட்ட நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் மாவட்ட அரசாங்க அதிபருடன் தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடல் நடாத்தி, பாதிக்கப்பட்டோருக்கு வெலிமடை கிராம சேவகர் ஊடாக அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்து கொடுக்குமாறும் உலர் உணவுப் பொருட்களும் வழங்குமாறும் செந்தில் தொண்டமான் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேவேளை, பாதிக்கப்பட்ட லயன் குடியிருப்பை மீள கட்டமைப்பு செய்வதற்கும் மாகாண சபை ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.







## கேள்வி அறிவித்தல்

### இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

**கேள்வி இல.: 75/10.09.2020**

**PROCUREMENT OF 1000 Nos OF XDCAM FORMAT 23GB SINGLE LAYERS DISCS AND 1000 Nos OF XDCAM FORMAT 50GB DUAL LAYER DISCS**

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்காக **1000 Nos of XDCAM Format 23GB Single Layer Discs and 1000 Nos of XDCAM Format 50 GB Dual Layer Discs** ஆகியவற்றின் பெறுகைக்காக இலங்கை, கொழும்பு-7, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத்தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

உயர்மட்ட தரத்திலுள்ள XDCAM Format Discs இன் உற்பத்தியாளர்கள், தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இக்கேள்வியில் பங்கு பெற்றலாம். ஆர்வமுள்ளவர்கள் 2020.09.09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பெறுகைக்கான உதவி பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் இலங்கை, கொழும்பு-07, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன மேற்குறிப்பிட்டுள்ள அலுவலகரிடமிருந்து கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம். கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்றை வழங்குவதற்காக கூட்டுத்தாபன பிரதான கணக்காளருக்கு மீளளிக்கப்படாத கட்டணமான 5000 ரூபாவை (ஐந்தாயிரம் ரூபா) செலுத்துதல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 2020.09.09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக அலுவலக நாட்களில் (வர்த்தக விடுமுறைகள் நீங்கலாக, திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை) மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படலாம். இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து கேள்விகளும் விலைமனுப்பிணையொன்றுடன் (வங்கி உத்தரவாதம்) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகியோர் உற்பத்தியாளர்களின் சார்பாக இக்கேள்வியில் பங்கு பெறுவதற்காக முதன்மையாளர்களினால் அவர்களுக்கு அதிகாரம் வழங்கும் தரஅங்கீகாரக் கடிதமொன்றை/அற்றோணித்தத்துவத்தை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கப்பல் தளம் வரை இலவசக் கட்டணத்தில் முகவர்நிலைய தரகுப்பணத்தொகை ஏதும் அடக்கப்பட்டிருப்பின் அத்தொகையானது தனியாக சுட்டிக் காட்டப்படல் வேண்டும்.

2020.09.10 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு இலங்கை, கொழும்பு-07, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத்தலைவரின் அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

மேலதிக விபரங்கள், தேவைப்படின், அவற்றை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பொறியியலுக்கான பிரதி பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி : +94 112 580 136/தொலைநகல் : + 04 112 500 373).

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07,**
**இலங்கை.** (**SLRC Website :- http://www.rupavahini.lk)**

ஊவா வெல்லஸ்ஸ பல்கலை;

### கால்நடை விஞ்ஞானப் பிரிவு, விவசாய மூன்றாம் வருட பரீட்சைகள் ஆரம்பம்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் கால்நடை விஞ்ஞானப் பிரிவு மற்றும் விவசாய பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் இன்று முதல் 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழக துணை வேந்தர் கலாநிதி ஜயந்த லால் ரட்ணசேக்கர தெரிவித்தார்.

# யஹலதென்ன பிரதேசத்தில் பாரிய சுற்றாடல் சீர்கேடு





**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட யஹலதென்ன பிரதேசத்தில் சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்த சில இடங்களில் சட்ட விரோதமான முறையில் விசமிகள் குப்பை கூளங்களை கொட்டுவதினால் அப் பிரதேசத்தில் பாரிய சூழல் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஹாரிஸ் பத்துவ பிரதேச சபைத் தலைவர் ஆனந்த ஜயவிலால் தெரிவித்தார்.

சுற்றாடல் முக்கியம் வாய்ந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இப் பிரதேசத்தில் பல சுற்றுலா ஹோட்டல்களும் அமைந்துள்ளதுடன் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இங்கு வந்து செல்வது வழக்கமாக உள்ளது. இந்த பகுதியில் குப்பை கூளங்களை கொட்ட வேண்டாம் என்று பொது அறிவித்தலும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.இருந்த போதும் சுற்றாடல் மாசடையும் விதத்தில் சட்ட விரோதமான முறையில் சிலர் லொறிகளில் குப்பைகளையும் திண்மக்கழிவுகளையும் கொண்டு வந்து கொட்டுவதால் இப் பிரதேசத்தில் சுற்றாடல் மாசடைந்து வருவதுடன், டெங்கு நுளம்புகளும் பெருகி வருவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த பிரதேச சபை உறுப்பினர் அகில அமரதுங்க, இப் பிரதேசம் சுற்றாடல் முக்கியம் வாய்ந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தியுள்ள போதும் சிலர் சட்ட விரோதமான முறையில் குப்பைகளை கொட்டி வருகின்றனர். இதனால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன், டெங்கு போன்ற நோய்கள் பரவுவதற்கும் காரனமாக உள்ளது. ஆகவே இது தொடர்பாக உறியவர்கள உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் தலைவர் ஆனந்த ஜயவிலால் அவர்களிடம் இது பற்றி வினவிய போது,... இவ்வாறு சட்ட விரோதமான முறையில் குப்பைகளை கொட்டுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

**விலைமனு மூடப்படும் திகதியை நீடிக்கும் அறிவித்தல்**
**சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களை அழைத்தல்**
**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்புப் பிரிவு)**
**பகிரங்க விலைமனு 4333T Floating Suction for Kerosene Storage Tank இன் வழங்கல்**

Floating Suctionஇன் அளவை 12 அங்குலமாக திருத்தம் செய்வதன் காரணமாக விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் மேற்படி விலைமனுத் திறக்கப்படும் திகதி என்பன முறையே 2020 செப்டெம்பர் 04ஆம் திகதி மற்றும் 2020 செப்டெம்பர் 09ஆம் திகதியாக இத்தால் நீடிப்புச் செய்யப்படுகின்றது.

விலைமனுவின் நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புகளைக் கொண்டுள்ள திருத்தம் செய்யப்பட்ட விலைமனுக் கோரும் ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com ஆகிய இணையத்தளங்களில் காணப்படுகின்றன. இதனால் ஏற்படும் எந்தவொரு தடங்கல்களுக்கும் வருந்துகின்றோம்.

**முகாமையாளர் (பண்டங்கள்)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சப்புகஸ்கந்த, களனி, இலங்கை.**
**தொ.பே. 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

## இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

### பெறுகை அறிவித்தல்

### வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல் 2020/2021

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் 2020/2021 ஆண்டிற்காக வாடகை அடிப்படையில் பஸ், லொறி வேன், கெப், கார் வழங்குவதற்கு வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

i. வழங்குநர்களின் வியாபாரம் பதிவு செய்யப்பட்டு இருப்பதுடன் கேள்வி ஆவணங்களுடன் வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதியை இணைத்திருத்தல் வேண்டும்.
ii. குறைந்த பட்சம் கிட்டிய இரண்டு வருடம் வாடகை அடிப்படையில் சேவை வழங்கியுள்ளமை பற்றிய அனுபவம் இருப்பதுடன் அதனை உறுதி செய்யக்கூடிய ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
iii. வழங்குநர்களிடம் தமது நிறுவனத்தினுள் பதிவு செய்துள்ள விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற ஒவ்வொரு வகையான குறைந்தபட்சம் 03 வாகனங்களாவது இருத்தல் வேண்டும். (கேள்வி ஆவணங்களுடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற வாகனங்களின் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்திருத்தல் வேண்டும்.)
iv. அதற்கு மேலதிகமாக தமது நிறுவனத்தின் பெயரின் கீழ் எவ்வளவு வாகனத் தொகையை வழங்க முடியும் என்பதை அவ்வாகன இலக்கத்துடன் குறிப்பிடுதல் வேண்டும்.
v. வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற வாகனங்கள் 2010ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பின்னர் பதிவு செய்யப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.
vi. ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு வாகன வகைக்கு மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கவும் முடியும்.
vii. பற்றுச் சீட்டுக்களை சமர்ப்பித்த நாள் முதல் குறைந்த பட்சம் 30 நாட்கள் கொண்ட கால எல்லையை வழங்குதல் வேண்டும்.

கேள்வி ஆவணங்களை 2020.08.17 முதல் 2020.09.04 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கொழும்பு 07, பிலிப் குணவர்தன மாவத்த, இல. 09 எனுமிடத்தில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் காசாளரிடம் மீளளிக்கப்படாத ரூ. 5000.00 தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2020.09.07 மு.ப. 11.00 இற்கு முன் கிடைக்குமாறு பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம், இல. 09, பிலிப் குணவர்தன மாவத்த, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். இல்லையெனில் விளையாட்டு அமைச்சு கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதம கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் குறித்த நேரத்திற்கு முன்பு உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களை குறிப்பிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்கான விலைமனுக்கள் 2020/2021' என்று குறிப்பிடுதல் வேண்டும். குறித்த நேரம் முடிவடைந்தவுடன் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிப்பதற்கு அனுமதியுண்டு.
இது பற்றிய மேலதிக விபரங்கள் 0112697001 அல்லது 0112697934 ஊடாக நீடிப்பு இல 4202 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர் நாயகம்**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்த, கொழும்பு 07.**

### 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7(1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ARA/LND/ACQV1/D3/25

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு இல. 4-3/09/2015/SW/416

கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஹத்கம்பல சமுர்த்தி பிரஜாமுல வங்கியை அமைப்பதற்காக அரசாங்கம் சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2020ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28ஆம் திகதி இலக்கம் 2186/10 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேஷ வர்த்தமானியை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : அரநாயக |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 47சி, மோராகம்மன |
| கிராமத்தின் பெயர் | : மோராகம்மன |
| காணியின் பெயர் | : பல்கும்புர |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : கே 3769 |
| காணித்துண்டு | : 01 |

**இஸட் ஏ. எம். பைசல்**
**பிரதேச செயலாளர்**
**அரநாயக**

**2020 ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி**
**பிரதேச செயலகம்**
**அரநாயக.**

## விலைக்கோரல் அறிவித்தல்

## வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலை

### மேல் மாகாண சுகாதாரத் திணைக்களம்

### சிற்றுண்டிச்சாலைக்கான விலைமனு கோரல் – 2020/2021

2020/2021ஆம் வருடத்தில் வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையில் சிற்றுண்டிச்சாலை சேவையை நடாத்திக் கொண்டு செல்வதற்கு, இதில் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இது தொடர்பில் ஆர்வம் காட்டுபவர்கள் விலைமனு ஆவணங்களுக்காக மீளளிக்கப்படாத 1000.00 ரூபா விண்ணப்பக் கட்டணத்தை வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையின் கணக்காளருக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2020-08-18ஆம் திகதி முதல் 2020-09-16ஆம் திகதி வரையான சாதாரண கடமை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகரிடமிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இங்கு இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
2. மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென விலைமனுக்களை இரு பிரதிகளாக வெவ்வேறு உறைகளில் இட்டு பின் அவற்றை இன்னொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் **''2020/2021ஆம் வருடங்களில் சிற்றுண்டிச்சாலை சேவைகளை வழங்குதல்''** எனக் குறிப்பிட்டு 2020-09-17ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, ஆதார வைத்தியசாலை, வத்துபிட்டிவல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த வைத்தியசாலை கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடலாம்.
3. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே மு.ப. 11.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.
4. இயைபுடைய விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**மருத்துவர் R.A.M.C.N. பண்டார,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை,**
**வத்துபிட்டிவல.**
**பொதுத் தொலைபேசி - 033-2282261/262**
**2020-08-14ஆம் திகதி.**

Repeat Your Ad For Better Offers

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பத்தரமுல்ல, பட்டபொத்த, நுகெதெனிய வீதி, இலக்கம் 367/எப் இல் வதியும் சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிஸ் திரு. யூ. விஜேரத்னவினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட, இலக்கம் 5894 உடைய மற்றும் 2014.05.05 திகதியையுடைய அற்றோணி தத்துவத்தின் மூலம், No. 02, Simtat Hadayagin, Mickhmoret, Israel (தபால் குறியீடு 40297) என்ற இடத்தில் தற்போது வதியும் கஹட்டபிட்டியகே பிரியா தீப்தி ஆமர் பெரேரா ஆகிய என்னால் மஹரகம, கொடிகமுவ, பிலியந்தல வீதி, இலக்கம் 177/15 இல் வதியும் திருமதி வெலிவிட்டிய சாயக்காரகே திலினி நிஸங்ஸலா யஹம்பத் என்பவருக்கு எனது உண்மையானதும் சட்டரீதியானதுமான அற்றோணி தத்துவதாராக பெற்றுத் தரப்பட்ட அதிகாரம், இத்தால் இரத்துச் செய்யப்பட்டு செயலிழக்கச் செய்யப்படுவதாக அறிவித்துக்கொள்கின்றேன். அதன் பிரகாரம் இது முதற்கொண்டு மேற்படி 5894 இலக்கத்தையுடைய அற்றோணி தத்துவம் மீது எனது சார்பாக வெலிவிட்டிய சாயக்காரகே திலினி நிஸங்ஸலா யஹம்பத் மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை தொடர்பாகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தினம் தொடக்கம் நான் பொறுப்பேற்பதில்லையென அறிவிக்கின்றேன். 2020.08.14

## மாவட்ட செயலகம் - களுத்துறை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### களுத்துறை பிரதேச செயலகத்திற்கான அலுவலக கட்டிட நிர்மாண மீதி வேலை

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் 119.8 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதுமான ''களுத்துறையில் பிரதேச செயலகத்திற்கான அலுவலக கட்டிட நிர்மாண மீதி வேலைக்காக'' தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை களுத்துறை மாவட்ட செயலகத்தின் சார்பாக பெறுகைக் குழுத்தலைவர் இப்போது கோருகின்றார்.

   நிர்மாணக்காலப்பகுதியானது 462 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான சி-4 அல்லது மேற்பட்ட தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் கட்டிடத் துறையில் பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை களுத்துறை மாவட்ட செயலக பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று அதே முகவரியில் 2020.08.14 ஆம் திகதியிலிருந்து 2020.09.03 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   தொடர்பு இலக்கங்கள் : தொலைபேசி: 034-2222604. தொலைநகல்: 034-2226467
5. 2020.08.20 ஆம் திகதியிலிருந்து 2020.09.03 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக இருபதாயிரம் ரூபாவைச் (20,000 ரூபா) செலுத்திய பின்னர், களுத்துறை, மாவட்ட செயலகம், பெறுகைக் குழுத் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2020.09.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் களுத்துறை, மாவட்ட செயலகம், பெறுகைக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலில் அதே முகவரிக்கு அனுப்பப்படலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் அவைகளை பெற்றுக் கொள்வதற்காக தீர்மானிக்கப்பட்ட இறுதி திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வரும் பாங்கிலமைந்த விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 09 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - களுத்துறை மாவட்ட செயலாளரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
   - 1,800,000 ரூபா தொகைக்கானதாகவிருத்தல்.
   - 2020.12.04 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவின் 16.2 ஆம் சரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முகவராண்மைகளில் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.
9. களுத்துறை மாவட்ட செயலகத்தில் 2020.08.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம், களுத்துறை.**

## பெறுகை அறிவித்தல்

### நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீட்டு வசதிகள் அமைச்சு

### அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம் - கொலன்னாவ

### Procurement of 32.71 MTs of Hot Rolled Structural Steel "I" and "H" Sections 101 Nos.

### பெறுகை இல. 3/1/2/SA/20/RA/04

1. அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக்குழுத் தவிசாளரால் 32.71 மொ. தொ. கட்டமைக்கப்பட்ட 101 உருக்குப் பாலங்களை பெற்றுக்கொள்வதற்காக தகுதிகளைக் கொண்ட கீர்த்தி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வழங்குவதற்கான கால எல்லை தருவித்தற் வழங்கப்பட்டதன் பின் 08 வாரங்களாகும்.
2. நாடளாவிய ரீதியில் விலைமனுக்கள் கோரப்படும்.
3. அபகீர்த்தியாளர் (பிளெக் லிஸ்டட்) பட்டியல்படுத்தப்பட்ட வழங்குநர்கள் விலைமனுக்களை வழங்குவதற்கு தகுதியற்றவர்களாவர்.
4. விபரக்குறிப்பு, வழங்கல் கால எல்லை மற்றும் வரைபு மற்றும் மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.
5. இதில் ஆர்வம் கொண்ட கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் (பொறியியல் வேலை வழங்கல்) / வழங்கல் பொறியியலாளர் (தொலைபேசி: (011)2534579/ (011)2572351/2 நீடிப்பு 150 தொலைநகல் (011) 2532278) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். அல்லாவிடில் அரச வேலை நாட்களில் 2020-08-18ஆம் திகதி முதல் 2020-09-02ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 04.00 மணி வரையில் அரசாங்கத் தொழிற்சாலைக்கு சமுகம் தந்து விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2020-08-18ஆம் திகதி முதல் 2020-09-03ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி ஆங்கில மொழியில் அச்சடிக்கப்பட்ட விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. இரு நகல்களிலான விலைமனுக்களை 2020-09-03ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், பிரதான பெறுகைக்குழு, 3வது மாடி, தொழிற்சாலை பொறியியல் அலுவலகம், அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம், கொலன்னாவை எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. விலைமனுதாரரினால் மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரலுக்கு இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் குறித்த படிவத்தின் பிரகாரம் 65,000.00 ரூபா பெறுமதிக்கான விலைமனுப் பிணை முறி/ வங்கிப் பிணை முறி அல்லது அப்பெறுமதிக்கு அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் காசாளருக்கு பி.ப. 3.00 மணிக்கு முன் செலுத்தப்பட்ட பண வைப்புக்கான பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும். அப்பிணை முறிகள்/ வங்கிப் பிணை முறிகளின் குறைந்தபட்ச செல்லுபடியாகும் காலம் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.
9. கேள்வியின் பெறுமதி 5,000.000.00 ரூபாவை விஞ்சும் பட்சத்தில் வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்நாட்டு முகவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்து கொண்ட படிவத்தை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான முன்னோடி தெளிவுபடுத்தல் 2020-08-25ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் 3ம் மாடியிலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இடம்பெறும்.

| | பெறுகை இல. | பொருட்களின் விபரம் | விலைமனுப் பிணை முறியின் அளவு | விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி |
|---|---|---|---|---|
| 01 | 3/1/2/SA/20/RA/04 | சூடான சுருட்டப்பட்ட 25 கட்டமைக்கப்பட்ட உருக்கு "I" பாலங்களைக் பெற்றுக்கொள்ளல் (Structural Steel "I" Section - 25 Nos. - 203x203mm x 6m x 46kg/m - SS275 as per BS5950 or equivalent) | ரூபா 65,000.00 | 2020-09-03ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| 02 | | சூடான சுருட்டப்பட்ட 08 கட்டமைக்கப்பட்ட உருக்கு "H" பாலங்களைக் பெற்றுக்கொள்ளல் (Structural Steel "H" Section - 08 Nos. - 254x254mm x 6m x 89kg/m - SS275 as per BS5950 or equivalent) | | |
| 03 | | சூடான சுருட்டப்பட்ட 51 கட்டமைக்கப்பட்ட உருக்கு "H" பாலங்களைக் பெற்றுக்கொள்ளல் (Structural Steel "H" Section - 51 Nos. - 356x171mm x 6m x 51kg/m - SS275 as per BS5950 or equivalent) | | |
| 04 | | சூடான சுருட்டப்பட்ட 08 கட்டமைக்கப்பட்ட உருக்கு "I" பாலங்களைக் பெற்றுக்கொள்ளல் (Structural Steel "I" Section - 08 Nos. - 406x178mm x 6m x 67kg/m - SS275 as per BS5950 or equivalent) | | |
| 05 | | சூடான சுருட்டப்பட்ட 03 கட்டமைக்கப்பட்ட உருக்கு "I" பாலங்களைக் பெற்றுக்கொள்ளல் (Structural Steel "I" Section - 03 Nos. - 254x146mm x 6m x 37kg/m - SS275 as per BS5950 or equivalent) | | |
| 06 | | சூடான சுருட்டப்பட்ட 06 கட்டமைக்கப்பட்ட உருக்கு "H" பாலங்களைக் பெற்றுக்கொள்ளல் (Structural Steel "H" Section - 06 Nos. - 356x171mm x 6m x 57kg/m - SS275 as per BS5950 or equivalent) | | |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**பணிப்பாளர் நாயகம் அலுவலகம்,**
**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,**
**கொலன்னாவை.**
2020-08-18.


## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

106 கார்கள் விற்பனைக்கு

WP CAT-8024 Tata Nano, 2016, Car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714 5 4295 8 , 0714 5 1523 6 . 046017

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

SG AAL-5427 Bajaj Threewheel, 2013, கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 07112108 10 . 046019

### காணி/தோட்டம்

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

Colombo-4, Sea side புதிய ஆடம்பர தொடர் மாடி மனையில் பல நவீன வசதிகளுடன் 2 Bedrooms, 2 Bathro oms, Living an d Din ing area, Car Parking, Gym, Pool, CCTV, 24 hours SQ 920 உடன் விற்ப னைக்கு உண்டு. Deed available. +94757619114. 046022


## சிவில் விமானசேவைகள் அமைச்சு

## சிவில் விமானசேவை அதிகார சபை

### 196 விமான போக்குவரத்து சேவையின் கீழ் சிவில் விமானசேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுவிக்கப்படும் அறிவித்தல்

உள்நாட்டு கூலிவிமான போக்குவரத்து செயற்பாடுகள் (Domestic Charter Operations) உள்நாட்டு வழமையான பொது போக்குவரத்து செயற்பாடுகள் (Domestic Regular Public Transport Operations) மற்றும் விமானத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் (Aerial work) நாடெங்கும் முன்னெடுப்பதற்காக சிவில் விமானசேவைகள் சட்டம் மற்றும் அதற்குரிய கோவைகள் உட்பட நிபந்தனைகளுக்கு அமைய விமான செயற்பாட்டுச் சான்றிதழ், கூலி விமான செயற்பாட்டு போக்குவரத்து மற்றும் வானில் இடம்பெறும் செயற்பாடுகளுக்காக அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக 131/4, ஹொரண ரோட், பாணந்துறையில் உள்ள வரையறுக்கப்பட்ட ஓபன்ஸ்கைஸ் பிளிக்ட் ட்ரைனிங் (தனியார்) கம்பனியினால் 2020 ஜுன் 19ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020 ஜுன் 18ஆம் திகதி கொண்ட விண்ணப்பப்படிவத்தில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன். விண்ணப்பப்படிவத்திற்கு அமைய வரையறுக்கப்பட்ட ஓபன்ஸ்கைஸ் பிளிக்ட் ட்ரைனிங் (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைகின்றது.

**திரு. எம்.டி.எச். பெர்னாண்டோ**
**திருமதி. ஏ.கே.எச். பெர்னாண்டோ**
**செல்வி. எம். திநிதி பெர்னாண்டோ**
**திரு. எம். டினித் எச். பெர்னாண்டோ**

இக்கம்பனியின் உத்தேச விமானப் போக்குவரத்து செயற்பாடுகள் தொடர்பாக பிரதான பொறுப்பு முகாமைத்துவத்திற்கு திரு. எம்.டி.எச். பெர்னாண்டோ அவர்கள் வரையறுக்கப்பட்ட ஓபன்ஸ்கைஸ் பிளிக்ட் ட்ரைனிங் (தனியார்) கம்பனியினால் பெயரிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரரின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியை கட்டுநாயக்க, மினுவன்கொட வீதி, இலக்கம் 152/1, கொண்ட சிவில் விமானசேவை அதிகாரசபையின் கீழ் மாடியில் அமைந்துள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் பொதுமக்களுக்கு இதனை பார்வையிட முடியும்.

உத்தேச செயற்பாடுகளுக்காக தேவையான விமான செயற்பாட்டுச் சான்றிதழ் (Air operator Certificate உட்பட ஏனைய உரிய அதிகாரங்களை வழங்குவதற்கு முன்னர் சிவில் விமான சேவை சட்டம் விமான போக்குவரத்து சேவையைப் போன்று உரிய தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகள் (International Standard and Recommended Practices) மற்றும் இந்நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அதனுடன் இணைந்த உள்நாட்டு தேவைகளுக்கு அமைய பாதுகாப்பு மிக்க வினைதிறனுடன் கூடிய விமான போக்குவரத்து சேவைகளை நடாத்துவதற்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகளை கூட்டிணைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு அமைய உரியவாறு பரிசோதனைகளை மேற்கொண்டு இவ் விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் 2020 செப்டெம்பர் மாதம் 04ஆம் திகதிக்குப் பின்னர் என்னால் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன்.

மேற்கூறப்பட்ட வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்துக்கு 10 நாட்களுக்கு முன்னர் எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் மேற்கூறப்பட்ட விண்ணப்படிவம் தொடர்பில் எழுத்து மூலம் உரிய காரணங்களை அடிப்படையாக கொண்ட விடயங்களை விமான போக்குவரத்து கோவைக்கு அமைய எனக்கு அறிக்கை சமர்ப்பிக்க முடியும். உள்ளடக்கப்பட்டுள்ள சகல வெளிப்பாடுகளின் உண்மை தன்மையை எழுத்துமூல சாட்சிகளுடன் சமாப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறான விஞ்ஞாபனத்தை என்னிடம் சமர்ப்பிக்கும் வேளையில் அவரினால் அதன் பிரதியை விண்ணப்பதாரிக்கு கிடைக்க செய்ய வேண்டியதுடன், அவ்வாறு அனுப்பப்பட்டதாக சான்றிதழை உரிய விஞ்ஞாபனத்துடன் இணைக்க வேண்டும்.

**கப்டன் தேமியா அபேயவிக்கரம**
**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை**
**பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்**

2020 ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி
**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை**
**இலக்கம் 152/1, மினுவன்கொட வீதி, கட்டுநாயக்க.**

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக கீழே குறிப்பிடப்படும் மூடப்படும் திகதியன்று மு.ப. 10.00 மணி வரை, சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் பெறுகைக்குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| | உருப்படிகள் | கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளக்கூடிய காலம் | | மூடப்படும் திகதி | உ.ம.சே. அலுவலகத்தில் செலுத்த வேண்டிய மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா) மில்லியனில்) |
|---|---|---|---|---|---|---|
| | | முதல் | வரை | | | |
| 1 | 100 Nos. Infusion Pumps for NDCU | 18.08.2020 | 10.09.2020 | 11.09.2020 | 1,000.00 | 13 |
| 2 | 100 Nos. Syringe Pumps for NDCU | 18.08.2020 | 10.09.2020 | 11.09.2020 | 3,500.00 | 16.4 |
| 3 | 100 Nos. BP Apparatus for NDCU | 18.08.2020 | 10.09.2020 | 11.09.2020 | 1,000.00 | 1.7 |
| 4 | 50 Nos. Microhaematocrit Machines for NDCU | 18.08.2020 | 10.09.2020 | 11.09.2020 | 1,000.00 | 4.25 |
| 5 | 02 Nos Phototheraphy Unit (Dermotology) for OPD - NHSL | 18.08.2020 | 14.09.2020 | 15.09.2020 | 1,000.00 | 10 |
| 6 | 90 Nos. Infusion Pumps for OPD - NHSL | 18.08.2020 | 14.09.2020 | 15.09.2020 | 3,500.00 | 12 |
| 7 | 90 Nos. Syringe Pumps for - OPD - NHSL | 18.08.2020 | 14.09.2020 | 15.09.2020 | 3,500.00 | 15 |
| 8 | 32 Nos. Multipara Monitors for OPD - NHSL | 18.08.2020 | 14.09.2020 | 15.09.2020 | 3,500.00 | 10 |
| 9 | 01 No. Low Temperature Autoclave for OPD - NHSL | 18.08.2020 | 14.09.2020 | 15.09.2020 | 3,500.00 | 12 |
| 10 | 02 Nos. High Pressure Autoclave ( < 500L) for OPD - NHSL | 18.08.2020 | 14.09.2020 | 15.09.2020 | 3,500.00 | 16 |
| 11 | 02 Nos. High Pressure Autoclave ( < 800L) for OPD - NHSL | 18.08.2020 | 14.09.2020 | 15.09.2020 | 3,500.00 | 24 |
| 12 | 01 No. Mp/ Sterilizer for OPD - NHSL. | 18.08.2020 | 14.09.2020 | 15.09.2020 | 1,000.00 | 0.6 |
| 13 | 17 Nos. X-Ray Illuminators | 18.08.2020 | 17.09.2020 | 18.09.2020 | 1,000.00 | 0.34 |
| 14 | 17 Nos. Spot Lamps | 18.08.2020 | 17.09.2020 | 18.09.2020 | 1,000.00 | 1.7 |
| 15 | 02 Nos. C-Arm X-Ray Machines | 18.08.2020 | 17.09.2020 | 18.09.2020 | 3,500.00 | 20 |
| 16 | 134 Nos. Syringe Pumps | 18.08.2020 | 17.09.2020 | 18.09.2020 | 3,500.00 | 22 |
| 17 | 03 Nos. Diathermy Machines | 18.08.2020 | 17.09.2020 | 18.09.2020 | 1,000.00 | 0.339 |
| 18 | 02 Nos. Freezers | 18.08.2020 | 17.09.2020 | 18.09.2020 | 1,000.00 | 3 |
| 19 | 97 Nos. Infusion Pumps | 18.08.2020 | 17.09.2020 | 18.09.2020 | 3,500.00 | 12.7 |

2. இலங்கைச் சந்தைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கும் உற்பத்தியாளர்களின் பெயர் குறிப்பிடும் விற்பனை பிரதிநிதிகள்/ அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மாத்திரம் இப்பெறுகையில் பங்குபற்ற முடியும்.
3. ஆர்வமுள்ள தகைமையுள்ள விலைமனுதாரர்கள், நகல்களுடனான முழுமையான ஒரு தொகுதி கேள்வி ஆவணங்களில் பொறியிடப்பட்ட கேள்விகளை சமர்ப்பிக்கலாம்.
4. மேலே குறிப்பிடப்படும் காலத்தில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 இற்கு இடையில் கொழும்பு-10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இடமிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

   **(தொ.பே. 011-2691916, 2694479 - பெக்ஸ்: 011-2698317)**
5. கொழும்பு-10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இன் அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும்.
6. கொழும்பு-10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இன் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. கேள்வி ஆவணங்களுடன் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் ஒப்பந்தப் பதிவுச் சான்றிதழை தயவு செய்து சமர்ப்பிக்கவும்.
8. மேலதிக தகவல்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இடம் தொ.பே. இல. 2684732 ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்/பெறுகைக்குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10.**

தினகரன்
விளையாட்டு
2020 ஓகஸ்ட் 18 செவ்வாய்க்கிழமை
sports.tkn@lakehouse.lk



### இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், உ.பி. மந்திரியுமான

# சேத்தன் சவுகான் மரணம்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சேத்தன் சவுகான் (வயது 73). 40 டெஸ்ட் போட்டிகளிலும், 7 ஒரு நாள் போட்டிகளிலும் இந்தியாவுக்காக விளையாடியுள்ள இவர் கொரோனா தொற்றால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரழந்துள்ளார்.

சுனில் கவாஸ்கருடன் இணைந்து தொடக்க ஆட்டக்காரராகவும் ஆடியுள்ளார். இதே போன்று மராட்டியம் மற்றும் டெல்லி அணிக்காக ரஞ்சி கிண்ணப் போட்டிகளிலும் அவர் விளையாடியுள்ளார்.

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் பா.ஜ.க.வில் தன்னை இணைத்து கொண்டார். முன்னாள் எம்.பி.யான இவர் உத்தர பிரதேசத்தில் முதல் மந்திரி யோகி ஆதித்யநாத் தலைமையிலான அரசில் மந்திரியாகவும் இருந்து வந்தார். கடந்த ஜூலை மாதம் 12ந்தேதி அவருக்கு கொரோனா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து அவர் லக்னோவில் உள்ள சஞ்சய் காந்தி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவரது உடல்நிலை மோசமடைந்தது. இதனால் அரியானாவின் குருகிராமில் உள்ள மேதந்தா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அவருக்கு பல உறுப்புகள் பாதிப்படைந்திருந்த நிலையில் வென்டிலேட்டர் கருவி பொருத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். உத்தர பிரதேச மாநிலத்தில் கொரோனாவுக்கு உயிரிழந்த 2வது மந்திரி இவராவார்.

### இங்கிலாந்து - பாகிஸ்தான் 2ஆவது டெஸ்ட் போட்டி;

# மழையால் சமநிலையில் முடிவு!

இங்கிலாந்து பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2வது டெஸ்ட் சமநிலை நிறைவடைந்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 21 என வென்ற இங்கிலாந்து அணி, அடுத்ததாக பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்டில் 3 விக்கெட் வித்தியாசத்தில் வென்ற இங்கிலாந்து அணி. 2வது டெஸ்ட் சௌதாம்ப்டனில் தொடங்கியது. நாணயசுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி துடிப்பாட்டத்தை தேர்வு செய்துள்ளது. 11 வருடங்களுக்குப் பிறகு டெஸ்ட் அணியில் ஃபவாத் அலாம் இடம்பெற்றுள்ளார். சதாப் கான் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்து அணியில் இரு மாற்றங்கள்.

ஸ்டோக்ஸ், ஆர்ச்சருக்குப் பதிலாக ஸாக் கிராவ்லி, சாம் கரண் ஆகியோர் இடம் பெற்றனர். முதல் நாளன்று இங்கிலாந்து அணியின் அபார பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்கள் தடுமாறினர்.

மழையால் முதல் நாள் ஆட்டம் பாதிக்கப்படாமல் இருந்திருந்தால் மேலும் பல விக்கெட்டுகளை பாகிஸ்தான் அணி இழந்திருக்கும். முதல் நாள் முடிவில் பாகிஸ்தான் அணி 45.4 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 126 ஓட்டங்கள் எடுத்துத் தடுமாறியது.

2வது நாளிலும் இங்கிலாந்தின் பந்துவீச்சு அபாரமாக இருந்தது. பாபர் அஸாம் 47 ஓட்டங்கள் எடுத்தார். கீழ் வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பிய போதும் விக்கெட் காப்பாளர் ரிஸ்வான் சிறப்பாக விளையாடி அரை சதம் எடுத்தார். 2ம் நாள் முடிவில் பாகிஸ்தான் அணி 9 விக்கெட் இழப்புக்கு 223 ஓட்டங்கள் எடுத்திருந்தது.3ம் நாளன்று மழையால் ஒரு ஓவர் கூட வீச முடியாமல் போனது.4வது நாளும் மழையால் பெருமளவு பாதிக்கப்பட்டது. பாகிஸ்தான் அணி 91.2 ஓவர்களில் 236 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

ரிஸ்வான் 72 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பிராட் 4 விக்கெட்டுகளும் ஆண்டர்சன் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதன்பிறகு 4ம் நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 5 ஓவர்களில் 1 விக்கெட் இழப்புக்கு 7 ஓட்டங்கள் எடுத்தது.

5ஆவது நாளும் ஆட்டம் பாதிக்கப்பட்டதால் 2ஆவது டெஸ்ட் சமநிலையில் முடிந்தது.

தொடரின் 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

OBSERVER MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2020
SINCE 1978 42nd
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்–மொபிடெல்

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........

**(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)**

பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

**Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்**

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router — 2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500 — 4வது பரிசு: ரூ. 1,000


42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-08-22 இல. 24




# பிரபல டென்னிஸ் வீரருக்கு கொரோனா



பிரபல டென்னிஸ் வீரர் நிஷிகோரி கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார்.நேற்றுக் காலை ஃபிளோரிடாவில் இருந்தபோது கொரோனா பரிசோதனை மேற்கொண்டேன். அதில் எனக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது. இதனால் சின்சினாடி போட்டியிலிருந்து விலகியுள்ளேன். வரும் வெள்ளிக்கிழமை நானும் எனது குழுவினரும் மீண்டும் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்வோம். அதன்பிறகு புதிய தகவலை அளிக்கிறேன் என்று ஜப்பானைச் சேர்ந்த 30 வயது நிஷிகோரி கூறியுள்ளார். யு.எஸ். ஓபன் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள நிஷிகோரி, கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதால் 10 நாள்களுக்குத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். அதன்பிறகே அவரால் யு.எஸ். ஓபன் போட்டியில் பங்கேற்க முடியும்.உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா நோய் தொற்றின் தாக்கம் காரணமாக டோக்கியோ ஒலிம்பிக்ஸ் போட்டி அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது தவிர, அந்தந்த நாடுகளில் நடைபெற இருந்த பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதனிடையே, விம்பிள்டன் போட்டி இந்த ஆண்டு வரும் ஜூன் 29 முதல் ஜூலை 12ஆம் தேதி வரை நடைபெறுவதாக இருந்தது. எனினும், கொரோனாவை கட்டுப்படுத்த உலக நாடுகள் போராடி வரும் நிலையில் போட்டியை நடத்துவது தொடா்பாக கேள்வி எழுந்தது.

இதையடுத்து இந்த வருட விம்பிள்டன் போட்டியை இரத்துச் செய்வதென முடிவெடுக்கப்பட்டது. மே 24 ஜூன் 7 தேதிகளில் நடைபெறுவதாக இருந்த பிரெஞ்சு ஓபன் போட்டி செப்டம்பா் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வருட யு.எஸ். ஓபன் போட்டி காலி அரங்கில் ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 13 வரை நடைபெறவுள்ளது. இப்போட்டியைக் காண இரசிகர்களுக்கு அனுமதி கிடையாது.கொரோனா அச்சுறுத்தல் காரணமாக யு.எஸ். ஓபன் டென்னிஸ் போட்டியிலிருந்து விலகுவதாக உலகின் முதல் நிலை வீராங்கனை ஆஷ்லி பார்டி சமீபத்தில் அறிவித்தார். பிரபல வீரர் நடாலும் இந்த வருட யு.எஸ். ஓபன் டென்னிஸ் போட்டியிலிருந்து விலகியுள்ளார். கடந்த வருட யு.எஸ். ஓபன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்ற பியான்காவும் கொரோனாஅச்சுறுத்தல் காரணமாக பங்கேற்கவில்லை என அறிவித்துள்ளார்.

# தோனியின் ஓய்வும்: ஐ.பி.எல் பந்துவீச்சாளர்களுக்கு இர்பான் பதான் எச்சரிக்கை



ஐ.பி.எல் போட்டியில் தோனிக்குப் பந்து வீசும்போது பந்துவீச்சாளர்கள் கவனமாக இருக்க வேண்டும் என முன்னாள் வீரர் இர்பான் பதான் எச்சரிக்கை விடுத்துள்ளார். மூத்த வீரரான தோனி கடந்த 2019 ஒரு நாள் உலகக் கோப்பை போட்டி அரையிறுதியில் இருந்து எந்த ஆட்டத்திலும் பங்கேற்கவில்லை. டெஸ்ட்டில் இருந்து ஏற்கெனவே ஓய்வு பெற்றுவிட்ட அவர், ஒருநாள், டி20 ஆட்டங்களில் இருந்தும் ஓய்வு பெற்றுவிடுவாரா என ரசிகர்கள் கவலையில் இருந்தார்கள். ஐ.பி.எல் போட்டியில் தோனி சிறப்பாக ஆடினால், டி20 உலகக் கோப்பைக்கான இந்திய அணியில் இடம் பெற வாய்ப்புள்ளது என பயிற்சியாளா் சாஸ்திரி கூறினார். இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாகக் கடந்த சனிக்கிழமையன்று அறிவித்தார் தோனி. ஐ.பி.எல் போட்டியில் தோனியின் துடுப்பாட்டம் குறித்து முன்னாள் வீரர் இர்பான் பதான் கூறியதாவது:

ஐ.பி.எல் போட்டியில் தோனி விளையாடும் போது, ஓய்வு பெற்ற பந்துவீச்சாளர்கள் இனிமேல் தோனிக்குப் பந்துவீசத் தேவையில்லை என மகிழ்வார்கள். ஏனெனில் அவர் எப்போதும் அதிரடியாக விளையாடக் கூடியவர்.

சி.எஸ்கேவுக்காக விளையாடும் போதும் அப்படித்தான் விளையாடுவார். இந்த ஐ.பி.எல் போட்டியில் அவருடைய ஆட்டத்தை நான் மிகவும் எதிர்பார்க்கிறேன். எனவே அனைத்து பந்துவீச்சாளர்களுக்கும் நான் கூறிக்கொள்வது எச்சரிக்கையாக இருங்கள் என்றார்.

# உலக கிண்ணத்தை வென்ற பிறகு தோனியை கப்டன் பதவியிலிருந்து நீக்க முடிவெடுத்தார்கள்

### என். சீனிவாசன் அதிரடித் தகவல்

2011ல் தோனியை கப்டன் பதவியிலிருந்து நீக்க தேர்வுக்கு ழுவினர் முடிவெடுத்ததாக பி.சி.சி.ஐயின் முன்னாள் தலைவர் என். சீனிவாசன் தெரிவித்துள்ளார்.இந்திய அணியின் முன்னாள் கப்டன் தோனி, சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாகக் கடந்த சனிக்கிழமையன்று அறிவித்தார். இந்நிலையில் 2011ல் தோனியை கப்டன் பதவியிலிருந்து நீக்க தேர்வுகுழுவினர் முடிவெடுத்ததாக ஒரு பேட்டியில் முன்னாள் தலைவர் என். சீனிவாசன் தெரிவித்துள்ளார். அதில் அவர் கூறியதாவது:

இது 2011ல் நடந்தது. இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றது. ஆனால் அவுஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரில் நன்றாக விளையாடவில்லை. எனவே தேர்வுக்குழுவினரில் ஒருவர், தோனியை ஒரு நாள் கப்டன் பதவியிலிருந்து நீக்க முடிவெடுத்தார். தோனியை எப்படி கப்டன் பதவியிலிருந்து நீக்க முடியும்? சில மாதங்களுக்கு முன்பு தான் உலகக் கோப்பையை வென்றிருந்தார். தோனிக்குப் பதிலாக யாரை கேப்டனாக்குவது என்று கூட தேர்வுக்குழுவினர் யோசிக்கவில்லை. இதுபற்றிய விவாதம் நடைபெற்றது.

தேர்வுக்குழுவினரின் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு, தோனியை அணியில் வீரராக மட்டுமே தேர்வு செய்ய முடியாது என்றேன்.அன்று விடுமுறை தினம். நான் கோல்ப் விளையாடிக் கொண்டிருந்தேன். பி.சி.சிஐ செயலாளராக இருந்த சஞ்சய் ஜக்தேல் என்னிடம் கூறினார், தோனியை கப்டனாகத் தேரிவு செய்ய தேர்வுக்குழுவினர் மறுக்கிறார்கள்.

அணியில் மட்டும் தேர்வு செய்வார்களாம் என்றார். தோனி தான் கப்டன் என நான் முடிவெடுத்தேன். என்னுடைய அதிகாரங்களை அதற்காகப் பயன்படுத்தினேன் என்றார்.

2012ல் இந்த விவகாரம் பற்றி தேர்வுக்குழுவில் இருந்த மொஹிந்தர் அமர்நாத் பேசியுள்ளார்.

தோனியை கப்டன் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்கிற தேர்வுக்குழுவினரின் முடிவை சீனிவாசன் ஏற்கவில்லை என்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஓகஸ்ட் மாதம் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.